மக்கள், இலாபம்

மற்றும் கோள்

ஆண்டறிக்கை - 2019



நகர அபிவிருத்தி அதிகாரசபை

நகர அபிவிருத்தி ,நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு

ஆண்டறிக்கை- 2019

நகர அபிவிருத்தி அதிகாரசகை



+94112875916
+94112875920

+94112873637

09, 07 & 06 மாடி,
“செத்சிறிபாய” பத்தரமுல்லை

கணக்காய்வாளர் நாயகம்
306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை


இலங்கை வங்கி
இல.01,
இலங்கை வங்கி சதுக்கம், கொழும்பு 1

செயலாளர், முகாமைத்துவ சபை,
பணிப்பாளர் நாயகம் ,
நகர அபிவிருத்தி அதிகாரசபை.

dg@uda.lk
www.uda.gov.lk

உள்ளடக்கம்

முன்னுரை	**01 - 03**
1.1 அறிக்கை முன்னுரை	01 - 02
1.2 தலைவர் மேற்பார்வை	03
சுயசரிதை	**07 - 38**
2.1 ந.அபி.அதி.ச யின் எல்லை கற்கள்	07
2.2 தூரநோக்கு I இலட்சியநோக்கு I வேலை நிரல்	08
2.3 பொறுப்புகள் & தொழில்பாடுகள் I மேற்பார்வை	09 - 11
2.4 ந.அபி.அதி.ச யின் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகள்	12
2.5 முகாமைத்துவ சபை I பிரதான அலுவலர்கள்	13 - 18
2.6 நிறுவன மரம் I முகாமைத்துவ கட்டமைப்பு	19
2.7 ந.அபி.அதி.ச யின் மூன்று கீழ்நிலை மட்ட அணுகுமுறை	20 - 24
2.8 ந.அபி.அதி.ச யின் பிரிவுகள்	25 - 35
2.9 எமது துணை நிறுவனங்கள்	36 - 38
வருடத்தின் சிறப்பம்சங்கள்	**45 - 141**
3.1 மாகாண அலுவலகங்களின் செயற்பாடுகள்	45 - 75
3.2 தலைமை அலுவலக செயல்திறனில் ஏனைய பிரிவுகள்	79 - 86
3.3 திட்டமிடல் I செயற்றிட்டங்கள் I அமுலாக்கம் I ஆலோசனை சிறப்பம்சங்கள்	89 - 137
3.4 சமூகப் பணிகள் மற்றும் ஏனைய அடைவுகள்	141
நிதி தகவல் மற்றும் நிறுவன நிர்வாகம்	**145 - 199**
4.1 2019 ஆம் ஆண்டிற்கான நிதி செயல்திறன்	145
4.2 நிதிநிலை அறிக்கை 2019	146 - 193
4.3 சுருக்க அறிக்கை (நிதி நிலை அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, நிதி பணப்புழக்க அறிக்கை) 10 ஆண்டுகளில்	194 - 197
4.4 நிறுவன நிர்வாகம்	198 - 199
தணிக்கை குழு அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகள்	**203 - 228**
5.1 தணிக்கைக் குழுவின் பங்கு	203
5.2 தணிக்கை குழு அதிகாரிகள்	203
5.3 2019 தணிக்கை குழு கூட்டத்தில் உறுப்பினர்களின் பங்கேற்பு	203
5.4 2019 ஆம் ஆண்டிற்கான தணிக்கை குழுவின் பணி	204
5.5.31 டிசம்பர் 2019 முடிவடையும் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள்	205 - 228
ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை குறித்து தலைவரின் கருத்து	**231 - 287**



முன்னுரை

1.1 அறிக்கை முன்னுரை

1.2 தலைவர் மேற்பார்வை

---------இந்தப் பக்கம் நோக்கம் கருதி வெறுமையாக விடப்பட்டுள்ளது---------

1.1 அறிக்கை முன்னுரை

நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும் ஒரு நாடு என்ற அடிப்படையில் , நகர அபிவிருத்தி அதிகாரசபையானது (UDA) நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடைய வழிகாட்டும் பிரதான நிறுவன அமைப்பாக செயல்படுகிறது. நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 வேலை ஆண்டிற்கான செயல்திறன் பற்றிய ஒரு பரவலான புரிதலை வழங்கும் வகையில் ஒரு முழுமையான செயல்பாடாக இங்கு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தேசிய அபிவிருத்தியை அடையும் நோக்கோடு , நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலக பிரிவுகள் , பிராந்திய மற்றும் மாவட்ட அலுவலகங்கள் தங்களின் தந்திரோபாய தலையீடுகளின் மூலம் அபிவிருத்தி திட்டங்கள், அபிவிருத்தி செயற்திட்டங்கள் ,வீடமைப்பு மற்றும் ஏனைய செயற்றிட்டங்கள் போன்றவற்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல் போன்ற செயற்பாடுகளின் முழுமையான பங்களிப்பை இவ்வறிக்கை வழங்குகின்றது .

இவ்வறிக்கையானது அதிகாரசபையின் தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கு என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளதோடு , பிரதான தீர்மானங்களின் மூலம் தெளிவானதும் சரியானதுமான பாதையை நோக்கி வழிநடத்தக்கூடிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபை, 2019 ம் ஆண்டில் தலைவரின் மேற்பார்வையுடன் அதிகார சபையை முன்னிலைப்படுத்தும் தகைமைபெற்ற மற்றும் அனுபவம் நிறைந்த நிறுவன அலுவலர்கள் என்பன போன்ற விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

நகர பகுதிகளிலுள்ள பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் சக்திகளை இணைத்த ஒருங்கிணைந்த திட்டமிடல் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பொதுமக்களுக்கான நன்மைகள் மற்றும் சேவைகள் போன்றவையும் சுருக்கமாக இவ்வறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவல பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நாட்டின் குறிப்பிடத்தக்க தேசிய மற்றும் பிராந்திய அபிவிருத்தித் செயற்றிட்டங்கள் குறித்தும் இவ்வறிக்கை வலியுறுத்துகின்றது. இவை தவிர்த்து,மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட உள்ளூர் அபிவிருத்தி செயற்திட்டங்கள் அதே வேளை ,மாகாண , மாவட்ட அலுவலகங்கள் அல்லது பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட சமூக நலன் சார் விசேட செயற்றிட்டங்கள் என்பவையும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உரிமையின் கீழ் காணப்படும் காணிகள் மற்றும் ஏனைய கட்டுமான சொத்துக்களை உள்ளடக்கிய அதிகாரசபையின் உடைமைகளை விரிவுபடுத்தும் ஒரு விசேட பகுதியும் இவ்வறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தியின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லை பண்முக பங்களிப்பை விரிவுபடுத்தும் மூன்று கீழ் மட்ட அணுகுமுறை

எண்ணக்கரு முறைமையும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதோடு கூட்டு நிருவாகத்தின் முக்கியத்துவமும் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

ஆண்டறிக்கையின் முக்கிய கூறுகளில் ஒன்றான அதிகாரசபையின் முழுமையான வருவாய் மற்றும் செலவுகள் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கையும் துல்லியமாக விரிவான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதியாக, கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக தலைவரால் குறிப்பிடப்பட்ட சுருக்கமான கருத்துக்களோடு, அதிகாரசபை தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையும் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டி நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி திட்டமிடப்பட்ட, நிலைத்துநிற்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நகரமயமாக்கலை அடைய வழிகாட்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 ம் ஆண்டிற்கான செயற்பாடுகள் இவ்வறிக்கையில் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1.2 தலைவர் அறிக்கை

நிலைபேறான, பாதுகாப்பான மற்றும் நட்பியலான நகரமயமாக்கல் ஊடாக நாட்டின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபை கணிசமான பங்கை வகிக்கிறது. நன்கு நிர்வகிக்கப்பட்ட நகர சுற்றுசூழலானது அனைத்து பொருளாதார நடவடிக்கைகளுக்கும் , பொருளாதார துறைகளின் அபிவிருத்திக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்பு வழங்குகின்றது.

2019 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒரு விதிவிலக்கான வருடமாகும். திட்டமிடல் நிறுவனம் என்ற வகையில், நகர அபிவிருத்தி அதிகாரசபையானது சர்வதேச சொத்து மற்றும் முதலீட்டு கண்காட்சியில் வருடத்தின் சிறந்த திட்டமிடலாளராக விருது பெற்றது. அத்தோடு ,இவ்வருடத்தில் 29 அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து வர்த்தமானப்படுத்தியுள்ளது. வர்த்தமானப்படுத்தப்பட்டுள்ளது.இதற்கு மேலதிகமாக 1978 ஆம் ஆண்டின் 41 ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 21 இன் கீழ் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்குமுறைகளின் உருவாக்கம் நிறுவப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள குறை வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நகரில் காணப்படும் குடிசைவாசிகளுக்காக 4,740க்கும் மேற்பட்ட வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிக்க முடிந்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேம்பாலம், பேருந்து தரிப்பிடம், அணுகு வழி , வடிகாலமைப்பு அபிவிருத்திகள் மற்றும் பெய்ர வாவி நேரியல் பூங்கா அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய மாக்கும்புற மற்றும் கோடாவா விலுள்ள பல்-மாதிரி போக்குவரத்து மையம், 2019 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் கையாளப்பட்ட சில முக்கிய திட்டங்களாகும். மேலும்,நாட்டின் அபிவிருத்திக்கு பல மடங்கு நன்மை பெறக்கூடிய வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்களிப்பு செய்யக்கூடிய 4914 மில்லியன் ரூபா மதிப்புடைய செயற்த்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது.

ஒரு நிறுவனமாக, நகர அபிவிருத்தி அதிகாரசபையானது 2019 ம் ஆண்டில் 1089 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டியுள்ளதுடன் இது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமான வளர்ச்சியைக் குறிப்பிடுகிறது.தங்களின் தொழிற்பாடுகள் தொடர்பான விளக்கத்தை பெற்றுக்கொள்ளவும், 2019 ம் ஆண்டின் தமது பங்கின் தொடர் நடவடிக்கையை மேற்கொள்ளவும் இவ்வாண்டறிக்கையை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனைத்து பிரிவுகளுக்கும் மற்றும் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுக்கும், அனுப்ப கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பணிகள் மற்றும் சாதனைகளும் ஒரு நபர் அல்லது ஒரு சிலரின் பங்கு மட்டுமல்ல, முழு ஊழியர்களின் அர்ப்பணிப்பால் விளைந்தவை என்பதை நான் முன்னிலைப்படுத்த விரும்புகிறேன். பங்களிப்பு செய்த அனைத்து அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

தலைவர்
நகர அபிவிருத்தி அதிகாரசபை.

----------இந்தப் பக்கம் நோக்கம் கருதி வெறுமையாக விடப்பட்டுள்ளது ----------



எங்களை பற்றி

2.1 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சிறப்புக் கூட்டங்கள்

2.2 விஷன் I மிஷன்| வேலை நிறமாலை

2.4 கடமைகள் மற்றும் செயல்பாடுகள் | பகுப்பாய்வு

2.5 நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தின் அதிகார வரம்புகள் அறிவிக்கப்பட்டது

2.6 மேலாண்மை வாரியம் | முக்கிய நபர்கள்

2.7 நிறுவன கலவை I முகாமை அமைப்பு

2.8 யுடிஏவின் டிரிபிள் பாட்டம் லைன் அணுகுமுறை(Triple Bottom line approach)

2.9 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்களங்கள்

---------- இந்தப் பக்கம் நோக்கம் கருதி வெறுமையாக விடப்பட்டுள்ளது ----------

2.1 ந.அபி.அதி.ச யின் எல்லை கற்கள்

1978
நகர அபிவிருத்தி அதிகார சபையை நிறுவுதல்

1978
கொழும்பு மாஸ்டர் திட்டத்தை தயாரித்தல் (UNDP உதவியுடன்))

1985
கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல் மற்றும் இலங்கையின் முதல் அபிவிருத்தி திட்டமாக வர்த்தமானப்படுத்தல்

1986
இலங்கையின் நகர பகுதி அபிவிருத்திக்கான வலய மற்றும் கட்டட ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தி அமுலாக்கல்

1998
நகர அபிவிருத்தி அதிகாரசபை வரலாற்றில் உள்ளூர் வல்லுனர்களால் உருவாக்கப்பட்ட முதல் திட்டமான கொழும்பு மெட்ரோ பிராந்திய கட்டமைப்புத் திட்டத்தைத் தயாரித்தல்

1999
கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல் (1985 ம் ஆண்டு திட்டத்திற்கான திருத்தம்)

2004
சிங்கப்பூர் ஆலோசகர்கள் மற்றும் முதலீட்டு சபையுடன் இணைந்து மேற்குப் பிராந்திய மெகாபொலிஸ் கட்டமைப்புத் திட்டத்தை (CESMA) உருவாக்குதல்

2009
கொழும்பு மையத்திற்கு அப்பால் உள்ள முக்கிய நகரங்களுக்கான திட்டமிடல் மற்றும் கட்டட ஒழுங்குவிதிகளுடன் (ஒன்றில் ஐந்து) அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்

2010
"ஆசியாவின் அற்புதம்" என்ற கருத்தை அபிவிருத்தி செய்வதில் முன்னோடியாதல்

2016
மேற்கு பிராந்திய மெகாபொலிஸ் மாஸ்டர் திட்டம் 2030 ஐ உருவாக்கல் மற்றும் "மெகாபொலிஸ் அபிவிருத்திக்கான" பிரதான பங்காளராக உருவாதல்

2017
பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி பகுதிகளில் அபிவிருத்திகளை ஒழுங்குபடுத்துவதற்காக அதிகார பரவலாக்கல்

2018
கொழும்பு வர்த்தக தலைநகரம் மற்றும் கோட்டை நிர்வாக தலைநகரம் உட்பட முக்கிய நகரங்களுக்கு 29 அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல்

2019
சர்வதேச அளவில் போட்டியிட்டு "வருடத்தின் சிறந்த திட்டமிடலாளர் " விருதை சுவீகரித்தல்

2.2 தூரநோக்கு


திட்டமிடப்பட்ட, நிலைப்பேறான மற்றும் ஏற்கத்தகு நகரமயமாக்கலை நோக்கி



இலட்சியநோக்கு

பிரகடனப்படுத்தப்பட்ட நகர பகுதிகளின் பொருளாதார, சமூக ,சுற்றுசூழல் மற்றும் பௌதீக அபிவிருத்திக்காக ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் மாற்று அமுலாக்கலை ஊக்குவித்தல்

வேலை நிரல்



2.3 பொறுப்புகள் I தொழிற்பாடுகள் I மேற்பார்வை

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது ,தேசிய ராஜாங்க சட்டமன்றத்தின் 1978 ம் ஆண்டு 41 ம் இலக்க சட்டத்தின் கீழ் 1978 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6 ம் திகதி நிறுவப்பட்டதும் , நகர அபிவிருத்தி அதிகார சபை அமைச்சரினால் பிரகடணப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களின் பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பௌதீக அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் அமுலாக்கத்தை ஊக்குவிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு சட்டரீதியான நிறுவனமாகும் .

சட்டத்திற்கு இணங்க ,பின்வரும் பொறுப்புகள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் பரந்த எல்லைக்குள் அதிகாரசபையானது செயற்படுகின்றது.

- பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி பிரதேசங்களுக்கும் ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் பௌதீக மேற்கொள்வது மற்றும் அபிவிருத்தி செயல்பாடுகள் மற்றும் சேவைகள் தொடர்பான திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்..
- கைவிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்தல்.
- மூலதன முதலீட்டு ஊக்குவிப்பு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.
- நகர்ப்புற நில பயன்பாட்டுக் கொள்கையை உருவாக்கி செயல்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் தரங்களை உருவாக்குதல் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்திக்கான திட்டங்களைத் தயாரித்தல்.
- நகர பகுதிகளின் அபிவிருத்தி தொடர்பாக கட்டடம், பொறியியல் மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளை மேற்கொள்தல்.
- அபிவிருத்தி திட்டங்களைத் தொடர்ச்சியாக செயற்திட்டங்களை திட்டமிட்டு மற்றும் செயல்படுத்துதல்.
- அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை இயல்புநிலையில் நிறைவு செய்தல்.
- நாட்டின் நகர அபிவிருத்திக்காகஅசையா அல்லது அசையும் சொத்துக்களை கையகப்படுத்துதல் மற்றும் அப்புறப்படுத்துதல்.
- பிரகடனப்படுத்தப்பட்ட நகர பகுதிகளிலுள்ள குறை வருமான குடியிருப்புகளை அகற்றல் மற்றும் அக்காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் வீடமைப்பு முன்னேற்ற திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.
- அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களுக்கான அபிவிருத்தி திட்டமிடல் முன்மொழிவுகள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
- ஏனைய அரச நிறுவனங்களின் தேவைக்காக தொழில்நுட்ப திட்டமிடல் சேவையை வழங்குதல்.

மேற்பார்வை

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பாதுகாக்கும் அதே வேளை தேசிய நகர அபிவிருத்தியின் முன்னணி நிறுவனமாக பல அபிவிருத்தித் செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை முன்னெடுத்துள்ளது. இத்திட்டங்களுள் , வீட்டுத் திட்டங்கள், வவர்த்தக அபிவிருத்தி செயற்றிட்டங்கள் , சமூக வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டங்கள், பொழுதுபோக்குத் செயற்றிட்டங்கள், தேசிய மற்றும் உள்ளூர் மட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்கள் போன்றவற்றை அடையாளம் காண முடியும்.

2019 ஆம் ஆண்டில் கொழும்பில் உள்ள குறை வருமானம் பெறும் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் 2000க்கும் மேற்பட்ட குடியிருப்பு அலகுகளை வழங்குவதன் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றொரு அடியை எடுத்துள்ளது. குறித்த கருத்திட்டத்தின் கீழ் ,மாளிகாவத்தையில் லக்விரு செவன வீடமைப்புத் தொகுதியின் 380 அலகுகளும், தெமட்டகொடையில் சியபத் செவனவின் 266 அலகுகளும், ஹெலமுத்து வளாகத்தில் 1076 வீட்டுத் தொகுதிகளும், ஹெனமுல்லையில் உள்ள ரன்முத்து வீடமைப்புத் தொகுதியில் 576 வீட்டுத் தொகுதிகளும் கொழும்பு நகரத்தில் அமைதியான வாழ்வாதாரத்தைப் பெறுவதற்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொதுப் போக்குவரத்து முறைமையானது , சர்வதேச தரத்திற்கு இணையாக புதிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதோடு மாகும்புரவில் உள்ள அதன் முதல் பல் மாதிரி போக்குவரத்து மையம், அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டில் பொதுமக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

“சுகித புரவர அபிவிருத்தி செயற்திட்டத்தின் ” கீழ் பொது மக்கள் பொருளாதார மற்றும் சமூக நலன்களைப் இலகுவாகவும் வசதியாகவும் பெற்றுக்கொள்வதற்காக , பேருந்து நிலையங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பொது/வாராந்த சந்தை செயற்திட்டங்கள் போன்ற அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் பொதுமக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. மேலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையானது சமூகத்தின் சில விசேட குழுக்களுக்காக தமிழ் சிறுவர்களுக்கான ரக்வான அனாதை இல்லத்தை நிர்மாணித்தல் போன்ற சில விசேட திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

மேலும், மீரிகம , தொம்பே, வலஸ்முல்ல, மினுவாங்கொடை , வலிமட , பிபில மற்றும் மொனராகலை போன்ற பிரதேசங்களில் வர்த்தக தொகுதிகள் மற்றும் சந்தை அபிவிருத்தித் செயற்திட்டங்கள் அத்தோடு பல்செயற்பாட்டு கட்டட தொகுதி அபிவிருத்தித் செயற்திட்டங்கள் போன்றவற்றை நிர்மாணித்து குறித்த ஆண்டில் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.


மாத்தரையிலுள்ள ஆற்றங்கரை விடுதி,நுவரெலியாவிலுள்ள க்ரெகரி வாவி மற்றும் சுற்றுப்புற அபிவிருத்தி,எம்பிலிபிட்டியவிலுள்ள கவண்திஸ்ஸ வாவி மற்றும் சுற்றுப்புற அபிவிருத்தி, ஹோமகமவிலுள்ள நகர பூங்கா அபிவிருத்தி, தீவு முழுவதுமான ஹரிதா உயன செயற்திட்டங்கள் போன்ற திட்டங்களின் ஊடாக நகர பகுதிகளில் காணப்படும் இயற்கை சூழலை பாதுகாக்கும் அதே வேளை நகர வாசிகளுக்கு நேரடியான மற்றும் மறைமுகமான பொழுதுபோக்கு இடங்களை உருவாக்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை 2019 ம் ஆண்டில் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதிகாரசபையின் ஊழியர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக, குறிப்பிட்ட ஆண்டில் முக்கிய செயல்திறன் குறிகாட்டி (KPI) செயன்முறை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு,

ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் அதிகாரத்தில் உள்ள ஊழியர்களுக்கு பணி உயர்வுகள் பல வழங்கப்பட்டன.

மேலும், உற்பத்தித்திறன் மற்றும் ஊழியர்களின் வேலை திருப்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் நடைபெறும் அதிகாரசபையின் வருடாந்த நலன்புரி நடவடிக்கைகள் குறித்த ஆண்டிலும் வழங்கப்பட்டன. கடன் வசதிகள், விழாக்கால முன்பணம், மேலதிக முற்பணம் மற்றும் மருத்துவ கொடுப்பனவுகள் அத்தோடு அதிகாரசபைக்கு பேருந்து வாங்குவதற்கான குத்தகை வசதிகள் மற்றும் வளாகத்தில் தினப்பராமரிப்பு நிலையம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் என்பன கடந்த 2019 ம் ஆண்டில் வழங்கப்பட்டது.

2.4 ந.அபி.அதி.ச. பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகள்



2.5 முகாமைத்துவ சபை

கலாநிதி .ஜகத் முனசிங்க - தலைவர்
தலைவர் ந.அபி.அதி.ச
பணிப்பாளர் நாயகம், தேசிய பௌவதீக திட்டமிடல் நிறுவனம்
PhD National -University of Singapore,
Msc. (Tow. & Cont.Pl) - UOM, Msc. (Archi) – UOM, Bsc. (Built Environment) - UOM, AIASL, MITPSI





திரு. எஸ்.எஸ்.பி. ரத்நாயக்க - செயலாளர்
பணிப்பாளர் நாயகம், ந.அபி.அதி.ச
BSc.Eng (Hons), CEng, MIE(SL), PG Diploma(H&T)

திரு.சந்தன ரணசிங்க
பதில் பணிப்பாளர் ந.அபி.அதி.ச அங்கத்தவர்
MBA - University of Jayawardenapura
Bsc. Eng - University of Moratuwa





திரு.மாதவ வைத்தியரத்ன
மேலதிக பணிப்பாளர் ,பெருநகரம் & மேற்கத்தைய அபிவிருத்தி அமைச்சு அங்கத்தவர்
MBA, MSc. - (IT), M.A. Bsc. (Chemistry) Special

திரு. பி. சனத் பனவென்னகே
பணிப்பாளர் நாயகம்- - ஆர்தர் சி. கிளார்க் மையம், அங்கத்தவர்
Msc. - University of Jayawardenapura , MBA. - University of Jayewardenepura, Ceng., MIET





திரு. ஏ.ஜி.எம்.எம். விமலசூரிய
பணிப்பாளர் - வளிமண்டலவியல் திணைக்களம், சிரேஷ்ட விரிவுரையாளர் - மொறட்டுவை பல்கலைக்கழகம் அங்கத்தவர்
BSc. (Hon), Dip. in Meteorology & Climatology

திரு. L.S பலன்சூரிய
தலைவர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அங்கத்தவர்
BA - University of Peradeniya , Small and Medium Scale Industrial H. Dip - University of Philippines, Public Relation Training Dip-IBM





திரு.வித்ய தில்ருக் அமரபால
ஆலோசகர் - ஆற்றல், முதலீட்டு ஊக்குவிப்பு, திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுலாக்கல் அங்கத்தவர்
MBA, Member of AMT, Member of IEEE

திரு. எச்.டி.கே. பத்மசிறி
செயலாளர் - மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அங்கத்தவர்
MPAd - University of SJ
BA. - University of Peradeniya





திரு. ஏ.டி.எல்.பி. சமரசிங்க
மேலதிக செயலாளர்- போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு அங்கத்தவர்
Member of Institute of Engineering and Technology - UK, Chartered Engineer, MBA in Electronic Governance UOM, Bachelor in Management - OUSL, IET - UK

திருமதி பி.பி.ஜ.ஏ. பெரேரா
உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) - மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு
அங்கத்தவர்
Msc. Agriculture (Sp in food Sc. &Tech)-University of Peradeniya, BSc. Agriculture(Sp) - University of Peradeniya.





திரு. எச். ஹேவகே
மேலதிக செயலாளர் - (நிர்வாகம் மற்றும் நிதி) கல்வி அமைச்சு
அங்கத்தவர்
BSc. (Public Ad.) Special, M.A. (Economics), Member of AAT (SL), Licentiate Certificate of the ICASL

திரு. W.D.A. சுனில் பெரேரா
நிதி ஆலோசகர் - இலங்கை நில மீட்ட மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்
அங்கத்தவர்
Post Graduate Diploma in Busines and Financial Administration, Bsc. (Mgt) Sp. University of Sri Jayawardenapura, Fellow of ICASL, Fellow of CIMA,Fellow of AAT





திரு. எச்.எச்.கஸ்தூரியாராச்சி
மேலதிக பணிப்பாளர் நாயகம் - பொது நிறுவனங்களின் நிறுவனம்
அங்கத்தவர்
B.Com (Special) Hons, LLB, MAAT

பொறியியலார் .டபிள்யூ.பி. பலுகஸ்வெவ
மேலதிக செயலாளர் - நகர அபிவிருத்தி
அங்கத்தவர்
BSc. (Civil Engineering), CEng, MIE (SL), MSc. (Ground water Hydrology)





திருமதி ஈ.ஏ.ஆர். ரேணுகா
மேலதிக செயலாளர் – காணி அமைச்சு
அங்கத்தவர்
B.Sc (Special) Degree (botany), Msc. (Sociology)

திரு. கே.டி. சித்ரபாலா
மேலதிக செயலாளர் - கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு
அங்கத்தவர்
B.Com (Special) Hons, Master of Commerce, PG Diploma in local Government Finance, Chartered public finance accountant,





திரு. எஸ். மகேஸ்வரன்
பணிப்பாளர்செயற்றிட்டம் - போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு
அங்கத்தவர்
BSc. Engineering, MIE (SL), PG Diploma in Construction Project Management, Dip in Public Procurement & Construction management, Class I officer in SL Engineering Service.

திரு.டி.சமத் டி சில்வா
தலைவர் - வாட்டர்ஸ் எட்ஜ்
அங்கத்தவர்
BSc. Engineering (Electrical & Electronic)





திரு.W.H. கருணாரத்னா
செயலாளர் – காணி அமைச்சு அங்கத்தவர்
B.Com (Special) Hons, LLB, MAAT



திரு. கே. பிரதீப யோகச்சந்திரா

உதவிச் செயலாளர் – சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.

அங்கத்தவர்
B.Sc Hons Attorney at Law, Master of International Studies

பிரதான பணியாளர்கள்

இல	தொழில்நிலை	பெயர்
1	தலைவர்	கலாநிதி ஜகத் நந்தன முனசிங்க (11.12.2019 வரை)
		பட்டய கட்டடக் கலைஞர் ஹர்ஷன் டி சில்வா
2	பணிப்பாளர் நாயகம்	திரு. எஸ்.எஸ்.பி. ரத்நாயக்க (18.11.2019 வரை)
		திரு. என்.பி.கே. ரணவீர
3	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திரு. கே.ஏ.டி. சந்திரதாசா (11.03.2019 வரை)
		திரு. டி.எம்.பி. ரணதுங்க
4	பிரதி பணிப்பாளர் நாயகம் (நிதி)	திருமதி டபிள்யூ.வி. சாயா திலினி
5	பிரதி பணிப்பாளர் நாயகம் (செயற்றிட்டம்)	திரு. எம்.சி. விதானராச்சி
6	பிரதி பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)	திரு. டி.எம்.பி. ரணதுங்க (03.06.2019 வரை)
		திரு எம்.பி. ரணதுங்க
7	பிரதி பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை) ஒப்பந்தம்	திருமதி சம்பிகா டி சில்வா
8	பணிப்பாளர் (அமுலாக்கம்)	திரு. எம்.பி. ரணதுங்க (23.06.2019 வரை)
	பதில் பணிப்பாளர் (அமுலாக்கம்)	திரு. எம்.எச்.வி. ரத்னகுமார் (08.09.2019 வரை)
	பணிப்பாளர் (CMR)	திரு. எச்.ஜே.சி. ரணவீர (09.12.2019 வரை)
	பணிப்பாளர் (CMR)	திரு.M.M.L.P.விஜயரத்ன
9	பணிப்பாளர் (நில அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்)	திரு.கே.எல்.டபிள்யூ. பெரேரா (29.10.2019 வரை)
	பதில் பணிப்பாளர் (நில அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்)	திருமதி எஸ்.என், திஸாநாயக்க (23.12.2019 வரை)
		திரு. எச்.ஏ. தயானந்த
10	பணிப்பாளர் (GIS)	செல்வி ஜே.பி.எஸ். சோமசேகர
11	பணிப்பாளர் (அபிவிருத்தி திட்டமிடல்)	திரு. எம்.எம்.எல்.பி. விஜேரத்ன (03.03.2019 வரை)
		திரு.எச்.ஜே.சி. ரணவீர
	பணிப்பாளர் (தந்ரோபாய திட்டமிடல்))	திருமதி ஆர்.எல்.பி.பி. நவரத்ன (18.12.2019 வரை)
		திருமதி ஏ.டி.பி. டி அல்விஸ்
12	பதில் பணிப்பாளர் (மனித வளம் &முகாமைத்துவம்)	திருமதி K.M.P.G.D.K.கெகுலந்தர
13	பணிப்பாளர் (நடுத்தர வருமான வீட்டுத் திட்டம்)	திரு. இ.ஏ.சி. பிரியசாந்த


14	பணிப்பாளர் (நகர மறுசீரமைப்பு திட்டம்)	பிரிகேடியர் எஸ்.ஏ.ஆர். சமரசிங்க
15	பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்)	திரு. எல்.ஏ.டி.ஜே. சிசிர குமார
16	பதில் பணிப்பாளர் (PPM)	திரு.ஆர்.டி.என்.ரணசிங்க (18.12.2019 வரை)
	பணிப்பாளர் (PPM)	திரு. K.H.M.W.K. அபேரத்னே
17	பணிப்பாளர் (சுற்றுச்சூழல் மற்றும் தரைத்தோற்றமைப்பு)	திருமதி சி.கே. கலுபஹான
18	பணிப்பாளர் (முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை)	திரு. L.N.N.A. சமரசிங்க
19	பணிப்பாளர் (சட்டம்)	திருமதி டி.லியனாராச்சி
20	பணிப்பாளர் (நிதி)	திரு. எச்.ஆர்.எஸ்.சி. குணதிலக
21	பணிப்பாளர் (வடமேல் மாகாணம்)	திரு. W.J. செனவிரத்ன (28.02.2019 வரை)
		திரு.என்.ஏ.எஸ்.என்.நிஸ்ஸங்க (18.12.2019 வரை)
		திரு. இ.எம்.எஸ்.பி. ஏகநாயக்க
22	பணிப்பாளர் (சப்ரகமுவ மாகாணம்)	திரு. டி.எம்.எஸ்.எம். திசாநாயக்க
23	பணிப்பாளர் (தென் மாகாணம்)	திரு. K.H.M.W.K. அபேரத்னா (19.12.2019 வரை)
		திரு. எச்.ஜே.சி. ரணவீர
24	பணிப்பாளர் (ஊவா மாகாணம்)	திரு. எச்.எம்.ஏ.ஆர். மெடவல (18.12.2019 வரை)
		திரு. டி.எம்.எஸ்.எம். திசாநாயக்க
25	பணிப்பாளர் (அபிவிருத்தி திட்டமிடல் – வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்)	திரு.வை.ஏ.ஜி.கே. குணதிலக
26	பணிப்பாளர் (வடமத்திய மாகாணம்)	திரு.எல்.ஜே.லியனகே
27	பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்)	திரு. இ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க (07.03.2019 வரை)
		திரு. எம்.எம்.எல்.பி. விஜேரத்ன (15.12.2019 வரை)
		திரு. எல்.ஜே.லியனகே
28	பணிப்பாளர் (மேற்கு மாகாணம்)	திரு. எச்.ஜே.சி. ரணவீர (05.03.2019 வரை)
		திரு.வை .ஏ.ஜி.கே.குணதிலக
29	பணிப்பாளர் (மத்திய மாகாணம்)	திரு என்.ஏ.எஸ்.என். நிஸ்ஸங்க(07.03.2019 வரை)
		திரு.கே.எம்.எஸ்.பி. ஏகநாயக்க (18.12.2019 வரை)
		திரு என்.ஏ.எஸ்.என். நிஸ்ஸங்க

30	பணிப்பாளர் (வட மாகாணம்)	திரு. என்.பி.கே.ரணவீர
31	தலைவர் (வணிக ஊக்குவிப்பு)	திரு. ஆர்.எம். தனஞ்சய சிறிவர்தன
32	தலைமை உள்ளக கணக்காய்வாளர்	திருமதி என்.பி. திசாநாயக்க
33	பணிப்பாளர் (செயற்திட்ட முகாமைத்துவம்)	திரு. ஜி.என். பிரேமவர்தன
34	பணிப்பாளர் (ஆலோசனை - கட்டடக்கலைஞர்)	திரு. ஜி.என். பிரேமவர்தன
35	பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) / அலகு தலைவர் (அமுலாக்கள் கணக்காய்வு மற்றும் கண்காணிப்புப் பிரிவு)	திருமதி ஏ.டி.பி. அல்விஸ் (03.09.2019 வரை)
	பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) / அலகு தலைவர் (அமுலாக்கள் கணக்காய்வு மற்றும் கண்காணிப்புப் பிரிவு)	திரு. எம்.எச்.வி. ரத்னர்குமார்
36	பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)	திருமதி ஏ.டி.பி. அல்விஸ் (16.12.2019 வரை)
		திருமதி ஆர்.எல்.பி.பி. நவரத்ன
37	அலகு தலைவர் (திட்டமிடல்- தகவல் முறைமை)	எம்.எம். அனுர பிரசன்ன (03.09.2019 வரை)
38	பணிப்பாளர் (சொத்து முகாமைத்துவம்)	திரு எம்.எம். அனுர பிரசன்னா
39	பிரதி பணிப்பாளர்./ அலகு தலைவர் (ஆலோசகர் - வட மத்திய மாகாணம்)	திருமதி பி.எல்.கே. இந்திக பாலசூரிய (12.06.2019 வரை)
40	பணிப்பாளர் (செயற்திட்ட முகாமைத்துவம்-வட பிராந்தியம்)	திருமதி பி.எல்.கே. இந்திக பாலசூரிய
41	பிரதி பணிப்பாளர்./ அலகு தலைவர் (கட்டட விண்ணப்பங்களை வழங்குதல்)	திருமதி. டபிள்யூ.ஏ. ரூபா ரஞ்சனி
42	பிரதி பணிப்பாளர்./ அலகு தலைவர் (ஆலோசகர் - தென் மாகாணம்)	திருமதி லாவண்யா வீரவுரிய (12.06.2019 வரை)
43	பணிப்பாளர் (செயற்திட்ட முகாமைத்துவம்- தென் பிராந்தியம்)	திருமதி லாவண்யா வீரவுரிய


44	பிரதி பணிப்பாளர்./ அலகு தலைவர் (ஆலோசகர் - மேல் மாகாணம்)	திருமதி டபிள்யூ.டி. திலகரத்னா (12.06.2019 வரை)
45	பணிப்பாளர் (செயற்திட்ட முகாமைத்துவம் -மேல் பிராந்தியம்)	திருமதி W.T. திலகரத்னா
46	பணிப்பாளர் (வசதிகள் முகாமைத்துவம்)	திரு. H.G. சரத்சந்திரா
47	பணிப்பாளர் (முன்னேற்ற கண்காணிப்பு)	திரு. P.D.K.பத்திரன
48	பணிப்பாளர் (கட்டடக்கலை)	திரு. எஸ்.பி.கே.கப்புகமராச்சி

2.6 நிறுவன மரம் I முகாமைத்துவ கட்டமைப்பு

அதிகாரசபையின் முகாமைத்துவ கட்டமைப்பு



- 2019 ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் அதிகாரசபையின் முகாமைத்துவ கட்டமைப்பு



- மனிதவள கட்டமைப்பு நிரந்தர வெற்றிடங்களை அடிப்படையை கொண்டது

2.7 மூன்று கீழ்நிலை மட்ட அணுகுமுறை

அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபை வழங்கும் ஒட்டுமொத்த பங்களிப்பு தேசத்தின் அனைத்து குடிமக்களுக்கும் சேவை செய்கிறது என்பதைக் குறிப்பிடுவது மிக முக்கியமானதாகும் . சட்டத்தினால் வழங்கப்பட்ட பரந்த நோக்கத்தின் காரணமாக இலங்கையிலுள்ள ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது நகர அபிவிருத்தி அதிகாரசபை தனது கடமைகளை நாட்டிற்கு எவ்வித வேறுபாடுகளுமின்றி நிறைவேற்றுகின்றது. இந்த பரந்த நோக்கம் காரணமாக, நகர அபிவிருத்தி அதிகாரசபை பல்வேறு நிலைகளில் அனைத்து நிலைபெற அபிவிருத்தி இலக்குகளையும் பூர்த்தி செய்கிறது.

மூன்று கீழ்நிலை மட்ட அணுகுமுறை (டிபிஎல்) என்பது சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நிதி ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்ட கணக்கியல் கட்டமைப்பாகும். சில நிறுவனங்கள் டிபிஎல் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டு, அதிக வர்த்தக பெறுமதியை உருவாக்க தங்கள் செயல்திறனை பரந்த கண்ணோட்டத்தில் மதிப்பிடுகின்றன..

TBL எண்ணக்கருவின் அடிப்படையில் , நகர அபிவிருத்தி அதிகாரசபையானது இவ்வெண்ணக்கருவில் குறிப்பிடப்பட்ட மூன்று பகுதிகளை குறிப்பாக மக்கள், இலாபம் மற்றும் கோள் என்பவற்றை நிறைவேற்றியுள்ளது என்பதை தெளிவாக விளக்குகின்றது.ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் பொறுப்பான அமைச்சரால் 1978 ஆம் ஆண்டின் 41ம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபை நிறுவப்பட்டது.தேசத்தின் நிலைபேறான அபிவிருத்தியை அடையும் நோக்கில் சட்டத்தால் எடுத்தியம்பப்பட்டதற்கு ஏதுவாக தேவையான பகுதிகளை பிரதானமாக



அடையாளப்படுத்துவதோடு நகர அபிவிருத்தி அதிகார சபை தனது ஒருங்கிணைப்பு திட்டம் மற்றும் ஆண்டிற்கான செயற்பாட்டு திட்டங்களில் ஏனைய பங்குதாரர்களுக்காக அர்பணித்துள்ளது. சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த செயல்பாடுகளின் பகுப்பாய்விற்கு அமைவாக அனைத்து தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் குறிப்பிடுவது சரியானதாகும் .

அதனடிப்படையில் , அதிகாரசபையானது அதன் சட்டங்கள் மற்றும் அவ்வப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்கக் கொள்கை ஆவணங்களுக்கு இணங்க, சமூக அபிவிருத்தியின் பொருட்டு மக்கள், கோள் மற்றும் இலாபம் ஆகியவற்றிற்கு கணிசமான முறையில் பங்களிப்பதன் மூலம் TBL கொள்கைகளை நிவர்த்தி செய்யும் அதே வேளை ,போதிய அளவிலான மனித, நிதி மற்றும் பௌதீக வளங்களைக் கொண்ட ஒரு நிலைபேறான நிலையான பொது நிறுவனமாக சிறந்து விளங்குகின்றது.

TBL இல் கூறப்பட்ட மூன்று பகுதிகள் 2019 ஆம் ஆண்டிலும் போதுமான அளவில் அவதானிக்கப்பட்டுள்ளது . 2019 ஆம் ஆண்டில் இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பகுதிகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவுகள் மற்றும் அலுவலகங்களின் திட்டமிடல், செயற்த்திட்டம் மம்மற்றும் தொடர்பாக விரிவாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.அத்தோடு இவ்வாண்டறிக்கையானது நகர அழகுபடுத்தல்,நகர அபிவிருத்தி திட்டம் மற்றும் நிறைவு செய்யப்பட்ட திட்டமிடலும் பணிகள் போன்றவற்றை உள்ளடக்கிய "ஆண்டின் சிறப்பம்சங்களை "உள்ளடக்கியுள்ளது.மேலும், சமூகத்தின் வரியா பகுதியினருக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட வீட்டமைப்பு திட்டங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.2019 ம் ஆண்டில்

2019 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழலுக்கு கார்பனீரொஸ்சைட் உமிழ்வைக் குறைப்பதற்காக சுற்றுச்சூழல் நட்பு திட்டங்களை செயல்படுத்த சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

பொதுத்துறையில் முன்னணியான சட்ட மற்றும் வர்த்தக அமைப்பாக திகழும் அதிகாரசபையானது , அரசாங்கத்தின் சார்பாக ஏராளமான கைவிடப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை நிறைவு செய்துள்ளதோடு மக்களுக்கு (பொதுமக்கள்) நியாயமான முறையில் சேவை வாங்குவதற்கும் சுருட்டுசூழலுக்கு பாதிப்பற்ற வகையிலும் கணிசமான இலாபத்தை ஏற்படுத்த TBL எண்ணக்கருவை அதன் அனைத்து செயல்பாடுகளிலும் பிரயோகித்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மூன்று பகுதிகள் கீழே சுருக்கப்பட்டுள்ளன.

(அ) மக்கள்

நகர அபிவிருத்தி அதிகாரசையின் பிரதான தொழிற்பாடு என்ற அடிப்படையில்,, நாட்டின் வர்த்தக மற்றும் நிர்வாகத் தலைநகரத்தை உள்ளடக்கிய பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி பகுதிகளுக்கான 29 அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்து வர்த்தமானப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டங்கள் ஒவ்வொரு பகுதியிலும் சமூக, பொருளாதார, பௌதீக மற்றும் சுற்றுச்சூழல் துறைகளை சமமாக கருத்தில் கொண்டுள்ளது.

நகர அபிவிருத்தி திட்டங்களுக்கு ஏற்ப, பேருந்து நிறுத்தங்கள், விளையாட்டு மைதானங்கள், பொதுப் பூங்காக்கள், நடைபாதைகள், சந்தை பகுதி அபிவிருத்தி, மற்றும் நிர்வாக வளாகங்கள் உள்ளிட்ட செயற்த்திட்டங்களை உள்ளடக்கிய சமூக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நாட்டின் அனைத்து பகுதியிலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதோடு இது மக்களின் வாழ்க்கை தரத்தையும் உயர்த்துகிறது. கொழும்பு நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் உள்ள பின்தங்கிய குடியிருப்புகளின் வாழ்க்கை முறையை மேம்படுத்தும் நோக்கத்துடன், நகர மறுசீரமைப்பு திட்டம் 2011 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அரசாங்கத்தின் சார்பாக ஆரம்பிக்கப்பட்டது.

- பிரேரிக்கப்பட்ட பகுதிகளில் அனைத்து திட்டமிடல், அமுலாக்கம் மற்றும் செயற்திட்ட திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான செப்பிவையை வழங்கும் பொருட்டு அபிவிருத்தி திட்டங்கள், துணை

திட்டங்கள் மற்றும் தொடர்புடைய திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தவும் 10 மாகாண அலுவலகங்கள், 12 மாவட்ட அலுவலகங்கள், 2 துணை அலுவலகங்கள் காணப்படுகின்றன.

- நகர அபிவிருத்தி பகுதிகளில் வாடிக்கையாளர்களின் தேவைகளை குறிப்பிடப்பட்ட நேரத்தில் வினைத்திறனுடன் பூர்த்திசெய்வதற்காக முறையான முறைசாரா தளங்கள் மூலம் ஈடுபடல்.

- வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகள் / குறைகள் உள்ளிட்ட கருத்துக்கள் முறையான மற்றும் முறைசாரா ஊடகங்களின் மூலம் வரவேற்கப்படுவதோடு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, நிவர்த்தி செய்ய கவனம் செலுத்தப்படுகின்றது.

- நகர அபிவிருத்தி அதிகாரசபையானது இனங்காணப்பட்ட நோக்கங்களை அடைவதற்கும் நியாயமான முடிவுகளை எடுப்பதற்கும் தீர்மானம் எடுத்துள்ளதோடு , திட்டமிடப்பட்ட பெறுபேறுகளிலிருந்து வேறுபாடும் ஏதேனும் ஒரு பொதுமக்களையும் சுற்றுச்சூழலையும் பாதிக்கக்கூடிய விளைவுகளை சீர் செய்வதற்கும் எடுத்துள்ளது.

- புதுப்பிக்கப்பட்ட கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் விசேட துறைகளின் பொறுப்பான அதிகாரிகள் என்பன தெளிவாக குறிப்பிடப்பட்டு இணையதளத்தில் வெளியிடப்படுவதோடு , இது பொது மக்களிடையே நம்பிக்கை மற்றும் நல்ல பிம்பத்தை உருவாக்குகின்றது..

- கைவிடப்பட்ட அபிவிருத்தித் செயற்திட்டங்களை அதிகார சபைக்கும் பொது மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் நிறைவு செய்தல்

- சிறிய, நடுத்தர மற்றும் பெரிய செயற்திட்டங்கள் மூலம் பல்வேறு வேலை வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் தொழில்சார் வல்லுநர்கள் மட்டுமின்றி, சுயதொழில் உட்பட சிறிய அளவிலான ஏனைய வேலை வகைகளும் பயனடைதல்
- விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் இணங்குவது உள்ளக கணக்காய்வு கட்டுப்பாடுகள் மூலம் நன்கு மதிப்பிடப்படுவதால், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகளில் பொதுமக்களின் நம்பிக்கை மேம்படுத்தப்படும்.

2019 ஆம் ஆண்டில் மக்கள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை வழங்கிய பங்களிப்பு பின்வரும் திட்டங்கள் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றன.

1. நாவுல நகர சதுக்கம் மற்றும் சமூக மண்டபம்
2. பிலியந்தலை பேருந்து நிலைய அபிவிருத்தி
3. கோட்டை ராஜ மகா விகாரையின் அபிவிருத்தி
4. மாளிகாவத்தையில் 768 வீட்டு அலகுகள், கொலம்பேஜ் மாவத்தையில் 615 வீட்டு அலகுகள் போன்றவை.

(ஆ) கோள்

நாட்டுக்குத் தேவையான அபிவிருத்தி திட்டங்களைத் உருவாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இதன் இலக்காகும். உதாரணமாக,நிறைவுசெய்யப்பட்ட 29 அபிவிருத்தி திட்டங்களில் ஒன்றான நீர்த்திடல்-"நீர் நகரம்"என்ற கருத்துடனான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2019-2030 மற்றும் "இலங்கையின் இறையாட்சி மகுடம்"என்ற கருத்திட்டத்துடனான தலைநகர் நகர அபிவிருத்தித் திட்டம் 2019-2030 . வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு பொதுமக்களின் உள்கட்டமைப்பு மற்றும் பொழுதுபோக்கு தேவைகளை பூர்த்தி செய்யும் அதேவேளை சுற்றுச்சூழலை பாதுகாத்து மேம்படுத்தக்கூடிய சிறிய அளவு செயற்திட்டம் முதல் ,வானளாவிய திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- பசுமைக் கட்டடக் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தல் பசுமையான சூழலை பேணக்கூடிய வகையில் பாராளுமன்ற மைதானம், பெயரே ஏரி போன்ற பகுதிகளை பராமரித்தல்.
- வருடம் முழுவதும் தரைத்தோற்றமைப்பு நடவடிக்கைகள் மூலம் மரம் நடும் நிகழ்ச்சிகள். உதாரணம்,. பெயிர ஏரி, நுவரெலியா போன்றவை.
- மனிதனால் ஏற்படும் அனர்த்தங்களை கட்டுப்படுத்தவும் தீர்வுகளை உருவாக்கவும் ஈடுபடல் . உதாரணம். மீதொட்டமுல்ல குப்பை மேடு மீள் அபிவிருத்தி திட்டம்.
- செயற்திட்டங்கள் சமூகத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்காதவை என்பதை உறுதி செய்யும் பொருட்டு செயற்திட்டங்களை செயல்படுத்துவதற்கு முன் தொடர்புடைய பிற சட்டப்பூர்வ அமைப்புகளிடமிருந்து அனுமதிகள் / சான்றிதழ்களைப் பெறுதல்.

2019 ஆம் ஆண்டில் கோள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை வழங்கிய பங்களிப்பு பின்வரும் திட்டங்கள் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றன.

1. பொரலஸ்கமுவ வாவியை சுற்றியுள்ள பகுதி அபிவிருத்தி
2. பத்தரமுல்லையிலுள்ள ஜப்பான் நட்பு வீதி தரைதறோற்றமைப்பு மேம்பாடு
3. கலிடோ கடற்கரை பூங்கா

(இ) லாபம்

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது,சட்டத்தின் குறிக்கோளுக்கு அமைய , அரச பொது நிதிமூலத்திற்கு சுமையாக இல்லாமல் , அதன் செலவினங்களைச் எதிர்கொள்ளக்கூடிய கணிசமான இலாபத்தை பெற்று வருகின்றது. வாடகை, குத்தகை வாடகை, முதலீடு மற்றும் இதர வருமானம் (கட்டடத் வரைபடங்களின் அனுமதிகள் ,காணி உபப்பிரிவிடுகை திட்டம், பூர்வாங்க திட்டமிடல் அனுமதி வழங்குதல், பயன்பாட்டு மாற்றம் போன்றவை) அதிகாரசபையின் முக்கிய வருமான ஆதாரங்களாகும். வருடத்திற்கான ஒதுக்கப்பட்ட பணியைச் எதிர்கொள்வதற்கான அனைத்து ஈடுபாடுகளையும் கருத்தில் கொண்டு இலாபம் கணக்கிடப்படுகிறது.

- நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்படாத நகர்ப்புறப் பகுதிகளை பிரகடனப்படுத்தி அதிகாரசபையின் வருவாய் வழிகளை மேம்படுத்துவதற்காக வருங்கால முதலீட்டாளர்கள் மூலம் அபிவிருத்தி செய்தல்.
- SCI (நிறுவன நோக்கத்தின் அறிக்கை) கருத்தாக்கத்துடன் துறையிலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் போட்டியிடவும் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட இலாப இலக்கை அடையவும் பல பயிற்சி நிகழ்வுகள் , மூளைச்சலவை அமர்வுகள் போன்றவை முன்னெடுக்கப்படல்.
- அதிகாரசபையின் இலாபத்தை அதிகரிக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சொத்துக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கான வர்த்தக மாதிரிகளைத் தயாரித்தல்.

- நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளுக்கான முன்மொழிவுகளை உருவாக்குதல் மற்றும் சாதகமான செயற்திட்டங்களை பொருத்தமான முதலீட்டு தொகுதிகள் (PPP தொகுதிகள்) மூலம் 3வது தரப்பினருடன் இணைத்தல்துணை திட்டங்கள் மற்றும் பொழுதுபோக்கு திட்டங்கள் மூலம், அதிகாரசபையுடன் பொது மக்களும் பயனடைவதோடு நிறுவனங்களின் இலாபத்தையும் உச்சப்படுத்தல்.

பொறுப்பான பொது நிறுவனமாக ஆண்டில் ஈட்டிய கணிசமான இலாபத்தை வருமான அறிக்கை காட்டுகிறது

	ரூபா .மில்லியன்
வருமானம்	
வாடகை& குத்தகை	2,581
முதலீட்டு வருமானம்	1,918
ஏனைய வருமானம்	536
மொத்த வருமானம்	5,035
செலவீனம் :	
மொத்த செலவீனம்	(3,975)
ஆண்டுக்கான இலாபம்	1060

2.8 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரிவுகள்

தலைவரின் கீழுள்ள பிரிவுகள்

உள்ளக கணக்காய்வு பிரிவு

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகள் , தொழிற்பாடுகள் , நிதி முறைமைகள் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் ஆகியவற்றின் சுயாதீனமான மதிப்பீடுகளுக்கு உள்ளக கணக்காய்வு பிரிவு பொறுப்பானதாகும். கணக்காய்வு துறையானது அதன் காலமுறை மதிப்பாய்வுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களை உயர் நிர்வாகத்திற்கும், இயக்குனர்கள் சபையின் கணக்காய்வு பிரிவிற்கும் வழங்குகின்றது. உள்ளக கணக்காய்வு பிரிவின் முக்கிய செயல்பாடுகளாக , கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குவதைத் தீர்மானித்தல், உள்ளக கட்டுப்பாடுகளின் தரத்தை மதிப்பிடுதல், இடர் நிர்வாகத்தின் தரத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதை மதிப்பீடு செய்தல் ஆகியற்றை உள்ளடக்குகின்றது.

பணிப்பாளர் நாயகத்தின் கீழுள்ள பிரிவுகள்

நடுத்தர வருமான வீடமைப்பு பிரிவு

வீடமைப்பு பிரிவின் பிரதான பங்கானது நடுத்தர வருமான வீடமைப்பு செயற்த்திட்டங்களை முன்னெடுத்தலாகும்.இதன் தொழிற்பாதுகாவன ,பொருத்தமான நடத்தற வருமான வீடமைப்பு செயற்த்திட்டங்களை உருவாக்குதல்,அத்தகைய செயற்த்திட்டங்களை அமுலாக்கி முகாமைத்துவம் டச்செய்தல் என்பதாகும்.இத்தகைய செயற்திட்டங்கள்,வர்த்தக நோக்கத்தை அடிப்படையாக கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நகர்ப்புற மறுசீரமைப்பு செயற்த்திட்ட பிரிவு (URP)

இப்பிரிவின் பொறுப்பானது, நகர்ப்புறத்தில் அமையப்பெற்ற பின்தங்கிய குடியேற்றவாசிகளுக்கு புதிய வீடுகளை வழங்கும் நோக்கத்திற்காக நகர்ப்புற மீளுருவாக்கம் திட்டங்களை செயல்படுத்துவது மற்றும் நகர்ப்புற மையங்களில் பயன்படுத்தப்படாத காணிகளை அபிவிருத்தி நோக்கங்களுக்காக விடுவிப்பதாகும் . நகர்ப்புற மறுசீரமைப்பு செயற்த்திட்ட பிரிவு, இடமாற்றம் செயற்த்திட்டங்களை எளிதாக்குவதோடு முறையாக நிர்வகிக்கிறது.

தகவல் தொழில்நுட்ப முறைமை பிரிவு (ITS)

மேலும், இந்த பிரிவு வன்பொருள் மற்றும் மென்பொருள், வலையமைப்பு மற்றும் முகாமைத்துவ முறைமைகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு உட்பட தகவல் தொழில்நுட்ப அமைப்புகளின் நிர்வாகத்தையும் கையாளுகிறது. மேலும், இந்த பிரிவு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இன் அதிகாரப்பூர்வ வலைத்தளம் மற்றும் பிற சமூக ஊடக தளங்களின் நிர்வாகத்திற்கு பொறுப்பாகும்.

சட்டப் பிரிவு

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டப் பிரிவு நிறுவனத்திற்கு சட்ட ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறது, மேலும் நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்துவதிலும் பாதுகாப்பதிலும் ஈடுபட்டுள்ளது. மேலும், நிறுவனத்தின் சட்டப்பூர்வ உரிமைகளின் அதிகபட்ச பாதுகாப்பையும், நிறுவனத்தின் சட்டப்பூர்வ கடமைகளை முறையாக நிறைவேற்றுவதையும் உறுதி செய்யும் அதே வேளையில் சட்ட ஆவண வரைவு மற்றும் செயல்படுத்தலுக்கு பங்களிக்கிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட தந்திரோபாய பிரிவு

ஒருங்கிணைக்கப்பட்ட தந்திரோபாய பிரிவு, சவால்கள் மற்றும் குறிக்கோள்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க நிறுவன நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்களைக் கணக்கெடுக்கிறது. இது தனிப்பட்ட தந்திரோபாய நோக்கங்களை ஒரு ஒட்டுமொத்த அணுகுமுறையாக ஒருங்கிணைத்து, சம்பந்தப்பட்ட பிரிவுகளிடமிருந்து கருத்துக்களை பெறுகின்றது.

இந்தப் பிரிவு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத் திட்டத்தை ஒழுங்குபடுத்தும் பொறுப்பில் உள்ளது. இப்பிரிவு ஒவ்வொரு பிரிவின் தலைவருக்கும் எதிர்க்களத்திற்கு பொறுப்பான திட்டத்தின் பகுதியை தயாரிக்க அறிவுறுத்துவதோடு பிரிவு தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை ஒன்றிணைத்து இறுதி தந்திரோபாய திட்டத்தை தயாரிக்கும்.

அதோடு, ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தின் மூலம் KPI அமைப்பின் தேர்ச்சி கண்காணிப்பு முறையை நிலைநிறுத்துகின்றது.

பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (திட்டமிடல்) கீழுள்ள பிரிவுகள்

அனைத்து திட்டமிடல் மற்றும் அமுலாக்கள் நடவடிக்கைகளும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் நாயகத்தால் (திட்டமிடல்) நேரடியாகக் கண்காணிக்கப்பட்டு வழிநடத்தப்படுகின்றன. பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (திட்டமிடல்) மேற்பார்வையின் கீழ் 04 பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் இயங்குகின்றன.

கொழும்பு மெட்ரோ(பெருநகர) பிராந்திய பிரிவு

கொழும்பு மெட்ரோ பிராந்திய(CMR) பிரிவு முன்பு அமுலாக்கல் பிரிவு என்று அழைக்கப்பட்டது. இது 2019 இல் அதன் புதிய பெயரால் நிறுவப்பட்டது மற்றும் கொழும்பு மெட்ரோ பிராந்தியத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சிப் பகுதிகளில் அபிவிருத்தியை நிர்வகிப்பதற்குப் பொறுப்பான பிரதான பிரிவாகும். கொழும்பு மெட்ரோ பிராந்திய பிரிவு குறித்த பகுதிகளுடன் தொடர்புடைய திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

தந்திரோபாய திட்டமிடல் பிரிவு

தந்திரோபாய திட்டமிடல் பிரிவின் பங்கு, அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பாக அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகளுடன் அவற்றின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக அபிவிருத்தித் திட்ட தயாரிப்பு செயல்முறையை ஒருங்கிணைப்பதாகும். தந்திரோபாய திட்டமிடல் பிரிவு தொடர்புடைய மாகாண அலுவலகங்களால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களின் செயல்முறையை கண்காணிக்க தொடர்ச்சியான முன்னேற்ற கண்காணிப்பு கூட்டங்களை நடத்துகிறது. மேலும், தந்திரோபாய திட்டமிடல் பிரிவு, அபிவிருத்தி திட்ட தயாரிப்பு பணிகளை எளிதாக்குவதற்கு திட்டமிடல் செயல்முறையின் தேவையான கட்டங்களில் தொடர்புடைய பட்டறைகளையும் ஏற்பாடு செய்கிறது. தந்ரோபாய திட்டமிடல் பிரிவானது, திட்டமிடல் செயல்முறையின் பல்வேறு கட்டங்களில் சம்பந்தப்பட்ட மாகாண அலுவலகங்களால் நடத்தப்படும் பங்குதாரர் சந்திப்புகளில் பங்குபெறுவதோடு தேவையான வசதிகளையும் வழங்குகிறது.

மேலும், தந்திரோபாய திட்டமிடல் பிரிவு வர்த்தமானி அறிவித்தல் மூலம் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை வெளியிடுவதற்கு வசதிகளை வழங்குகிறது. 1978 ஆம் ஆண்டின் 41ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்ட விதிகளின்படி, 'நகர அபிவிருத்தி பகுதிகளை' பிரகடனப்படுத்துவது தொடர்பான பணிகளை ஒருங்கிணைப்பதற்கும் தந்திரோபாய திட்டமிடல் பிரிவு பொறுப்பாக செயல்படுகின்றது.அத்தோடு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான திட்டமிடல் குழுக்கூட்டத்தை நடாத்துவதற்கு இப்பிரிவு பொறுப்பானதாகும்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு (R & T)

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல், அமுலாக்கம் மற்றும் செயற்திட்ட செயல்பாடுகளை மேம்படுத்த புத்தாக்க கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை ஆராய்வதே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் பிரதான பங்காகும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவானது விசேடமாக ஆய்வுகள் மூலம் நவீன திட்டமிடல் கோட்பாடுகள், கருவிகள், மாதிரிகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதிலும், அவற்றை திட்டமிடல் பயிற்சிகளுக்குள் பிரயோகித்து அதன் பொருத்த தன்மையை சோதிப்பதிலும் கவனம் செலுத்துகிறது. நகர அபிவிருத்தி அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட திட்டமிடல் செயல்முறை மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

மேலும்,ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு தேவையான ஆராய்ச்சி சான்றுகள் மற்றும் புதுமையான தொழில்நுட்ப அடிப்படையிலான அபிவிருத்திகளுடன் அமுலாக்கல் செயன்முறையில் மேம்பாடுகளை எளிதாக்குகிறது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொடர்புடைய பிரிவுகளுடன் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களுக்காக திட்டங்களைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல் ஆகியவற்றையும் மேற்கொள்கிறது

.

இதற்கு மேலதிகமாக , ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்முறை அலுவலர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைப்பதற்கும் பொறுப்பாக திகழ்கின்றது . மேலும், கல்வியாளர்கள், தொழில் வல்லுநர்கள், ஆர்வமுள்ள குழுக்கள் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைப்பைத் ஏற்படுத்துவதும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் பங்காகும் .

புவியியல் தகவல் முறைமை பிரிவு (GIS)

நகர அபிவிருத்தி அதிகார சபையிலுள்ள திட்டமிடல்சார் ஆதரவுப் பிரிவுகளுள் புவியியல் தகவல் முறைமையில் நிபுணத்துவம் பெற்ற பிரிவு இதுவாகும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குள் திட்டமிடல் பணிகளுக்குத் தேவையான தரவுகளின் சேகரிப்பு, தயாரித்தல், செயலாக்கம் மற்றும் பகிர்தளித்தல் ஆகியவை அதன் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். விசேடமாக , நகர அபிவிருத்தி அதிகாரசபையின் புவியியல் இடவமைவு தகவல்தளத்தை நிர்வகிப்பதோடு தொடர்புடைய மாகாண அலுவலகங்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவியையும் வழங்குகின்றது.அத்தோடு , இப்பிரிவு பெரிய அளவிலான வரைபடங்களைத் பெற வசதியளிக்கின்றது. அச்சிடுவதைக் கையாளும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பதிப்பக அலகும் இந்தப் பிரிவின் கீழ் இயங்குகிறது.

மாகாண அலுவலகங்கள்


நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண அலுவலகங்கள் இலங்கையின் அனைத்து ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாகாண அலுவலகமும் பொறுப்பான மாகாண பணிப்பாளரால் வழிநடத்தப்படுகிறது, அதன்படி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குள் ஒன்பது மாகாண பணிப்பாளர்கள் காணப்படுகின்றனர். மேலும், சில மாகாண அலுவலகங்களின் கீழ் 12 மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.


மாகாண அலுவலகங்கள் தங்கள் மாகாணங்களுக்குள் பிரேரிக்கப்பட்ட நகர அபிவிருத்தி பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொறுப்பானதாகும். இவ்விமான அலுவலகங்கள் பிரேரிக்கப்பட்ட பகுதிகளுக்குள் திட்டமிடல், அமுலாக்கம் மற்றும் செயற்த்திட்ட தொழிற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்கின்றன.

மேலும், சில விசேட திட்டங்கள் மற்றும் செயற்த்திட்ட நோக்கங்களுக்காக ஒரு சில துணை அலுவலகங்கள் நிறுவப்பட்டு, அந்தந்த மாகாண பணிப்பாளர்களின் வழிநடத்துதலின் கீழ் இயங்குகின்றன

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண அலுவலகங்கள் / துணை அலுவலகங்கள்



செயலிடங்கள்



Ⓟ மாகாண அலுவலகம்

Ⓓ மாவட்ட அலுவலகம்

Ⓢ துணை அலுவலகம்

பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (செயற்திட்ட முகாமைத்துவம்) கீழ் உள்ள பிரிவுகள்

செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு

பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (செயற்திட்ட முகாமைத்துவம்) கீழ் மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன . அதாவது செயற்திட்ட முகாமைத்துவம் மேற்கு பிராந்தியம் (RI), செயற்திட்ட முகாமைத்துவம் தெற்கு பிராந்தியம் (RII) மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் வடக்கு பிராந்தியம் (RIII) என்பனவாகும். அதோடு, தேர்ச்சி கண்காணிப்பு மற்றும் கொள்முதல் அலகுகள் பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (செயற்திட்ட முகாமைத்துவம்) கீழ் செயல்படுகின்றன .

நாடளாவிய ரீதியில் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களால் அடையாளம் காணப்பட்ட செயற்திட்டங்கள் திறைசேரியின் நிதியுதவியுடன் மேற்கூறிய மூன்று பிரிவுகளால் பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (செயற்திட்ட முகாமைத்துவம்) கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக , நகர அபிவிருத்தி அதிகார சபையின் சொந்த நிதியில் இனங்காணப்பட்ட மற்றும் வாடிக்கையாளர் நிதியளிப்பு செயற்த்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட பெரும்பாலான செயற்திட்டங்கள், பணிப்பாளர் நாயகத்தின் (செயற்திட்ட முகாமைத்துவம்) கீழ் உள்ள மூன்று பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகின்றன. நாடு முழுவதும் உள்ள செயற்த்திட்டங்கள் அந்த மூன்று பிரிவுகளுக்கும் கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கு பிராந்திய செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (RI)

மேல்மாகாணத்தில் திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் வரும் அனைத்து செயற்திட்டங்களையும் இந்தப் பிரிவு மேற்கொள்கிறது. அதற்கு மேலதிகமாக, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சொந்த நிதியுடனான செயற்திட்டங்கள் மற்றும் சில தெரிவு செய்யப்பட்ட ஆலோசனைத் செயற்திட்டங்களும் மேற்கு மாகாணத்தில் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

தென் பிராந்திய செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (RII)

இந்த பிரிவு தெற்கு, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் வரும் அனைத்து செயற்திட்டங்களையும் மேற்கொள்கிறது. அதுமட்டுமல்லாமல், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சொந்த நிதியுதவி செயற்திட்டங்கள் மற்றும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி ஆலோசனை செயற்திட்டங்களும் இந்த பிரிவால் மேலே உள்ள 4 மாகாணங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு பிராந்திய செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (RIII)

வடக்கு, வடமேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் வரும் அனைத்து செயற்திட்டங்களையும் இந்தப் பிரிவு மேற்கொள்கிறது. அதுமட்டுமல்லாமல், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சொந்த நிதியுதவி திட்டங்கள் மற்றும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி ஆலோசனைத் செயற்திட்டங்களும் இந்தப் பிரிவினால் மேற்படி 4 மாகாணங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

பொறியியல் சேவைகள் பிரிவு

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வளாகம் மற்றும் செத்சிறிபாய கட்டம் I கட்டடத்தின் பொறியியல் சேவை தேவைகள், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கு இந்த பிரிவு பொறுப்பானதாகும். குடிநீர், மின்சாரம், குளிரூட்டல் இயந்திரம் மற்றும் தீ பாதுகாப்பு பராமரிப்பு மற்றும் பொறியியல் சேவைகளையும் இது வழங்குகின்றது.அத்தோடு , சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான பொறியியல் கட்டமைப்பு சேவைகளும் இப்பிரிவால் வழங்கப்படுகின்றன. வீடமைப்புத் திட்டங்கள், மாவட்ட மற்றும் துணை அலுவலகங்கள், சந்தை வளாகங்கள், தரைதோற்றமைப்பு பகுதிகள் மற்றும் பூங்காக்கள் தொடர்பான பராமரிப்புப் பணிகளும் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதி பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை) கீழ் உள்ள பிரிவுகள்

செயற்திட்ட ஆலோசனை பொறியியல் பிரிவு

செயற்திட்ட ஆலோசனை பொறியியல் பிரிவின் கீழ் கீழ்க்கண்டவாறு இரண்டு பிரிக்கப்பட்ட பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்டங்களுக்கு உள்ளக ரீதியிலும் மற்றும் ஏனைய நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்கு வெளியாக ரீதியிலும் திட்ட ஆலோசனை சேவைகளை வழங்குவது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆலோசனைப் பிரிவின் பிரதான பங்காகும்.

பொறியியல் ஆலோசனை பிரிவு

குறியீட்டு அடிப்படையிலான கட்டமைப்பு வடிவமைப்புகள், விவரங்கள் வரைதல்கள், மதிப்பாய்வுகள், திறன் மதிப்பீடுகள், தள ஆய்வுகள், ஆவண ஒப்புதல்கள் மற்றும் பொறியாளர் மதிப்பீடுகள், செலவு ஆலோசனை, ஒப்பந்தத்திற்குப் பிந்தைய மாறுபாடு சரிபார்ப்பு, நகர அபிவிருத்தி அதிகாரசபையால் உள்ளக ரீதியாகவும் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களால் வெளியாக ரீதியாகவும் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான அனுமதிகளை பெறல் என்பன இப்பிரிவின் பொறுப்பாகும்.

வடிவமைப்பு செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை (DPM & C)

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சிறப்பு திட்டங்களாக அடையாளப்படுத்தப்படும் திட்டங்களுக்கு கட்டடக்கலை ஆலோசனை வழங்கும் பிரிவாகும். இந்தத் திட்டங்கள் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுவதோடு , பொறியியல் ஆலோசகர்கள், கட்டமைப்பு மற்றும் MEP போன்ற பிற தொழில்முறை நிபுணத்துவத்துடன் ஒருங்கிணைந்த சிறப்பு நிபுணத்துவ அறிவு தேவைப்படும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களாகவும் கருதப்படும்.

சுற்றுச்சூழல் மற்றும் தரைத்தோற்றமைப்பு பிரிவு

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் செயல்படுத்தப்படும் சுற்றுச்சூழல் மற்றும் தரைத்தோற்றமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்ககளின் வடிவமைப்பு, திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்குப் பொறுப்பான பிரிவு இதுவாகும். அத்தோடு , இந்த பிரிவு வெளிப்புற தரப்பினரால் செயல்படுத்தப்படும் சுற்றுச்சூழல் மற்றும் தரைத்தோற்றமைப்பு திட்டமிடல் தொடர்பான செயற்திட்டங்களுக்கு ஆலோசனை சேவைகளையும் வழங்குவதோடு , திட்டமிடல் மற்றும் கட்டட ஒழுங்குமுறையில் பசுமைக் கட்டடக் எண்ணக்கருவை செயல்படுத்துவதும் சுற்றுச்சூழல் மற்றும் தரைத்தோற்றமைப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்படுகின்றது..

பிரதி பணிப்பாளர் நாயகத்தின்(சொத்து & காணி முகாமைத்துவம்) கீழுள்ள பிரிவுகள்)

காணி அபிவிருத்தி & முகாமைத்துவ பிரிவு

காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணியானது, நகர அபிவிருத்தி பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்குள் அடையாளம் காணப்பட்ட காணிகளை கையகப்படுத்துதல், கொள்வனவு செய்தல் ஆகும். அபிவிருத்தி திட்டங்களை முன்மொழிவதோடு அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்காக காணிகளை ஒதுக்குதல் மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளினூடாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இடமாற்ற வசதிகளை வழங்குதல் மற்றும் காணி வங்கியை நிர்வகித்தல்.

வர்த்தக மேம்படுத்தல் பிரிவு

அதிகாரசபையின் இலாபத்தை அதிகப்படுத்தும் நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சொத்துக்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான வணிக மாதிரிகளைத் தயாரித்தல்.

காணி & சொத்து முகாமைத்துவ பிரிவு

காணி & சொத்து முகாமைத்துவ பிரிவின் பங்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான நிலங்களுக்கான திட்டங்களை உருவாக்குவது மற்றும் பொருத்தமான முதலீட்டு மாதிரிகள் மூலம் மூன்றாம் தரப்பினருடன் சாத்தியமான திட்டங்களை இணைப்பதாகும்.

பிரதி பணிப்பாளர் நாயகத்தின்(நிதி & நிர்வாகம்) கீழுள்ள பிரிவுகள்

நிதி பிரிவு

அதிகாரசபையின் நிதியை திறம்பட நிர்வகிப்பதற்கு இப்பிரிவு பொறுப்பாகும். மேற்கூறிய பணியை நிறைவேற்றுவதற்காக, நிதிப் பிரிவு, அதிகாரசபையின் ஆண்டு/மாதாந்திர கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குதல், ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் திருத்துதல், புதிய திட்டங்கள்/முயற்சிகளுக்கான நிதித் திட்டமிடல், செயற்திட்ட மதிப்பீடு, போன்ற பல செயல்பாடுகளை மேற்கொள்கிறது. வெளிப்புற நிதி ஆதாரங்களின் ஏற்பாடு மற்றும் முதலீட்டு விபரங்களை திறம்பட நிர்வகித்தலும் இதன் பொறுப்பாகும்..

மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரிவு

புதிய ஆட்சேர்ப்பு, பயிற்சி, பதவி உயர்வுகள் மற்றும் அதிகாரசபையின் குறிக்கோளை அடையக்கூடிய அனைத்து மனிதவள முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் இந்தப் பிரிவு பொறுப்பானதாகும். மேலும், அதிகாரசபையின் பொது நிர்வாகம் மற்றும் போக்குவரத்து வசதிகளை நிர்வகித்தல், ஊழியர்களின் திறமையைப் ஊக்குவித்தல் மற்றும் மனித வளங்களின் ஒழுக்கத்தைப் பேணுதல் ஆகியவையும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

சொத்து விபர முகாமைத்துவ பிரிவு (PPM)

குத்தகை தவணைகளிலிருந்து நிதி கிடைப்பனவுகள்- வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனி		(4,349,552,293)			
பணிக்கொடை நிதி கொடுப்பனவுகள்		(35,290,630)		(25,860,069)	
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான கிடைத்த தேறிய நிதி கிடைப்பனவுகள்			1,629,590,091		3,213,012,488
மூலதன செயற்பாடுகளின் மூலம் கிடைத்த கிடைப்பனவுகள்/ காசுப் பாய்ச்சல்					
பெற்றுக் கொள்ளப்பட்ட பங்கிலாபம்		31,440,618		29,830,517	
வட்டி கிடைப்பனவுகள் - ஏனையவை		1,874,166,859		1,896,339,932	
நிலையான சொத்துக்கள் கொள்வனவுகள்/அப்புறப்படுத்தல்கள்		(99,491,134)		(144,110,873)	
கட்டுநிதி கிடைப்பனவுபகள்		207,754		2,051,020	
காணிகள் மற்றும் கட்டிடங்களின் அதிகரிப்பு / குறைவு		(4,945,392,520)		(1,207,545,535)	
மூலதன நிறைவிலா வேலைகள் அதிகரிப்பு / குறைவு		(2,335,113,375)		1,245,544,106	
வர்த்தக இருப்புகளில் அதிகரிப்பு / குறைவு		(1,500,331,501)		(9,869,236,926)	
காணிகள் கையகப்படுத்தியதால் வழங்கிய நட்டஈடு		(853,596,804)		(1,641,028,352)	
அறவீடுகள்.:(கொடுப்பனவுகள்)துணைமைக் கம்பனிகள்		372,118,773		217,312,856	
நிலையான வைப்புக்களில் முதலீடு		(6,260,223,123)		6,610,684,484	
குறுகிய கால முதலீடுகள்		579,384,935		(1,009,981,779)	
காணிகள் விற்பனை மூலம் கிடைத்த இலாபம்		-		7,181,444	
நிலையான சொத்துக்கள் விற்பனை மூலமான இலாபம்		19,986,172		-	
URPCC வீடுகள் விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபம்		-		713,000,000	
நடுத்தர வருமானம் வீடுகளை விற்பனை மூலம் கிடைத்த இலாபம்		1,709,575,000		-	
மூலதன செயற்பாடுகளின் மூலமான கிடைத்த தேறிய நிதி கிடைப்பனவுகள்/ **(நிதி பாய்ச்சல்)**			(11,407,268,345)		(3,149,959,106)
நிதி செயற்பாடுகளின் மூலமான கிடைத்த தேறிய நிதி பாய்ச்சல					
தேசிய சேமிப்பு வங்கியின் கடன்கள் திருப்பிச் செலுத்துதல்		(264,000,000)		(264,000,000)	
வங்கிக்கடன் கிடைப்பனவுகள்		-		1,750,000,000	
குறுகியகால கடன் கிடைப்பனவுகள்-BOC		-		(1,750,000,000)	
நகர புத்துயிரளிப்புக் கடன்திட்டத்துக்காக அரச மானியங்கள்		7,568,550,293		4,595,631,587	
நிதி செயற்பாடுகள் மூலமாக கிடைத்த தேறிய நிதி கிடைப்பனவுகள் / (பாய்ச்சல்கள்)			7,304,550,293		4,331,631,587
காசும் காசு சார்ந்தவைகளின் தேறிய அதிகரிப்பு			(11,922,841)		32,179,291
வருட தொடக்கத்தில் காசு மற்றும் வங்கி நிலுவைகள்	**B**		38,473,280		6,293,990
வருட இறுதியில் காசு மற்றும் வங்கி நிலுவைகள்	**A**		26,550,439		38,473,280
வருட இறுதியில் காசு மற்றும் வங்கி நிலுவைகள்			**A**		**A**
வங்கி மேலதிகப்பற்று			(1,368,058)		(1,630,384)
அனுகூலமான வங்கி நிலுவை			27,203,077		39,814,059
சில்லறைக் காசு மற்றும் கையிலுள்ள காசு			715,419		289,604
			26,550,438		38,473,280

நகர அபிவிருத்தி அதிகாரசபை

நிதி பாய்ச்சல் கூற்று (தொகுதிக்காக)

2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான

செயற்பாடுகள் மூலமான கிடைப்பனவுகள்		12/31/2019 ரூ			12/31/2018 ரூ	
வரிக்கு முன்னர் தேறிய நட்டம்			1,648,256,580			1,524,586,982
கூட்டுத்தொகை : அறவிட முடியாக்கடன்களுக்கான ஒதுக்கங்கள்		16,448,481			12,821,974	
பெறுமானத்தேய்வு ஒதுக்கங்கள்		570,334,153			571,092,693	
பணிக்கொடைகளுக்கான ஏற்பாடுகள்		57,859,822			46,900,976	
முன்னர் செலுத்தப்பட்ட அங்கத்தவர் கிரயம்		25,135,868	669,778,324		26,737,310	657,552,952
			2,318,034,904			2,182,139,934
கழிப்பனவு : வாடகை		1,565,340,912			1,346,077,088	
குத்தகை வாடகை		618,419,146			779,860,784	
அரச மானியங்களை பதிவளிப்பாதற்கான ஒதுக்கீடுகள்		15,717,001			15,717,001	
பங்கிலாப கிடைப்பனவுகள்		7,790,622			4,479,210	
சம்பந்தப்பட்ட கம்பனிகளின் முதலீட்டுப் பகுதி		(23,084,592)			160,800,185	
காணிகள் மற்றும் கட்டிடங்களின் விற்பனை மூலம் கிடைத்த வருமானம்		-			(30,729,424)	
நிலையான சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் பெற்ற இலாபம்		19,986,172			-	
URPCC வீடுகளை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபம்		-			46,841,693	
நடுத்தர வருமான வீடுகள் விற்பனையின் மூலம் கிடைத்த வருமான		459,989,308				
வட்டி வருமானம்		1,911,461,962	4,575,620,532		1,977,320,843	4,300,367,380
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்படு இலாபம் / (நட்டம்)			(2,257,585,628)			(2,118,227,446)
தொழிற்படு மூலதன மாற்றங்கள்						
வரத்தக மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர (அதிகரித்தல்) /குறைவு		(3,112,525,512)			5,354,316,172	
கடன்படுநர் (அதிகரித்தல்) / குறைவு		(355,653,028)			(567,741,580)	
உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் -UDSP((அதிகத்தல்) ∴குறைவு		(18,728,220)			-	
UDSPகடன் - (அதிகரித்தல்) / குறைவு		(92,873,842)			-	
ஊழியர்கள் கடன்படுநரின்(அதிகரித்தல) / குறைவு		3,027,111			(11,377,727)	
இருப்புகள் மற்றும் வைப்புக்கள்(அதிகரித்தல) / குறைவு		8,197,615,614			(9,563,642,588)	
முற்பணங்கள் மற்றும் வைப்புக்களில் (அதிகரித்தல) / குறைவு		350,335,184			2,931,069,988	
ஒப்பந்தத்திற்கு செ.வே (அதிகரிப்பு) / குறைவு (URPC)		(197,888,986)			(252,156,654)	
			4,773,308,321			(2,109,532,388)
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான கிடைப்பனவுகள்/ **(நிதிப்பாய்ச்சல்)**						
வாடகை வருமானம்		1,555,343,092			1,181,344,346	
வருமான வரி/ஆர் சேவைக் கட்டணங்கள்/தக்கவைக்கப்பட்ட வரி கொடுப்பனவுகள்		(404,909,785)			(309,044,974)	
குத்தகை தவணைகளிலிருந்து நிதி கிடைப்பனவுகள்		966,042,880			2,691,782,319	
பணிக்கொடை நிதி கொடுப்பனவுகள்		(34,349,700)			(28,515,219)	
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான கிடைத்த தேறிய நிதி கிடைப்பனவுகள்			2,082,126,487			3,535,566,472
மூலதன செயற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சல்						
கிடைக்கப்பெற்ற பங்கிலாபம்		7,458,845			4,147,433	
வட்டி கிடைப்பனவுகள்		1,893,956,400			1,958,614,168	
நிலையான சொத்துக்கள் கொள்வனவுகள்/அப்புறப்படுத்தல்கள்		(148,115,744)			(294,836,068)	
கட்டுநிதி கிடைப்பனவுபகள்		207,753			2,051,020	
அருவச்சொத்து அதிகரிப்பு / குறைவு		(6,782,452)			-	
காணிகள் மற்றும் கட்டிடங்களின் அதிகரிப்பு / குறைவு		(4,839,048,731)			(1,461,288,477)	
மூலதன நிறைவிலா வேலைகள் அதிகரிப்பு / குறைவு		(2,495,477,727)			1,283,513,804	
வர்த்தக இருப்புகளில் அதிகரிப்பு ∴ குறைவு		(1,500,331,501)			(9,869,236,926)	
காணிகளைக் கையகப்படுத்துவதற்கான நட்டஈடு கொடுப்பனவுகள்		(853,596,804)			(1,641,028,352)	
நிலையான வைப்புக்களின் முதலீடு		(6,212,005,089)			6,568,125,424	
குறுகிய கால முதலீடுகள்		574,367,661			(905,366,890)	
காணிகள் விற்பனை மூலம் கிடைத்த வருமானம்		-			7,181,444	
நிலையான சொத்துக்கள் விற்பனை மூலமான இலாபம்		19,986,172				
URPCC வீடுகளை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபம்		-			713,000,000	
நடுத்தர வருமானம் வீடுகளை விற்பனை மூலம் கிடைத்த இலாபம்		1,709,575,000				
மூலதன செயற்பாடுகளின் மூலம் கிடைத்த கிடைப்பனவுகள்/ காசுப் பாய்ச்சல்			(11,849,806,216)			(3,635,123,419)
மூலதன செயற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சல்						
தேசிய சேமிப்பு வங்கியினால் கடன் திருப்பிச் செலுத்துதல்		(264,000,000)			(264,000,000)	
வங்கிக் கடன் கிடைப்பனவுகள் PB		-			1,750,000,000	
குறுகியகால கடன் கிடைப்பனவுகள்-BOC		-			(1,750,000,000)	
நகர புத்துயிரளிப்புக் கடன்திட்டத்துக்காக அரச மானியங்கள்		7,568,550,293			4,595,631,587	
நிதி செயற்பாடுகள் மூலமாக கிடைத்த தேறிய நிதி கிடைப்பனவுகள் / (பாய்ச்சல்கள்)			7,304,550,293			4,331,631,587
காசும் காசு சார்ந்தவைகளின் தேறிய அதிகரிப்பு			52,593,257			4,314,806
வருட தொடக்கத்தில் காசு மற்றும் வங்கி நிலுவைகள்	**B**		(26,317,634)	B		(30,632,439)
வருட இறுதியில் காசு மற்றும் வங்கி நிலுவைகள்	**A**		26,275,623	A		(26,317,634)
வருட இறுதியில் காசு மற்றும் வங்கி நிலுவைகள்			**A**			**A**
வங்கி மேலதிகப்பற்று			(49,750,033)			(110,958,824)
அனுகூலமான வங்கி நிலுவை			71,665,907			77,089,960
சில்லறைக் காசு மற்றும் கையிலுள்ள காசு			4,359,750			7,551,230
			26,275,623			(26,317,634)

1. தாபன மற்றும் குழுமத்தின் தகவல்கள்

1.1. தாபனத் தகவல்கள்

1.1.1 அறிக்கையிடல் அலகு

நகர அபிவிருத்தி அதிகார சபையானது தேசிய அரச பேரவையின் 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க சட்டத்தின் கீழ் 06/09/1978 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். அதிகார சபையின் பிரதான அலுவலகம் பத்தரமுல்ல, செத்சிறிபாய 6ஆம் மாடியில் அமைந்துள்ளது. தொகுதியின் 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபையின் மற்றும் அதன் துணைமைக் கம்பனிகளைக் கொண்டுள்ளது.

1.1.2 ஒருங்கிணைந்த நிதிக்கூற்று

2019 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் "அதிகாரசபை", நகர அபிவிருத்தி அதிகாரசபை தாய்க்கம்பனியாக குறிப்பிடப்படுவதுடன் "தொகுதி" அது ஒருங்கிணைந்த கம்பனிகளை உள்ளடக்கியுள்ளது.

1.1.3 நிதி அறிக்கைகளின் அங்கீகாரம் மற்றும் பொறுப்பு

2007 இலக்கம் 07 கொண்ட கம்பனிகள் சட்டத்தின் மற்றும் நிதி அறிக்கைகள் நியமங்களின்(SLFRSs) & (LKASs) ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் சமர்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இதற்கமைய, ஒருங்கிணைந்த நிதிக்கூற்று 2021 ஏப்ரல் 22 ஆம் திகதி பணிப்பபாளர் சபையினால் வெளியிடுவதற்கு அங்கீகாரம் அளித்தது.

1.1.4 முக்கியமான நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

நகர அபிவிருத்தி அதிகாரசபையின், இலங்கைக்குள் நகர திட்டமிடல் வடிவாக்கம் மற்றும் முறைசார் நகர அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பல நோக்கு நிறுவனமொன்றாகும்.

இணக்கக் கூற்று

விரிவான வருமானக்கூற்று, நிதிநிலைக் கூற்று 14, அதிகாரசபையின் மற்றும் தொகுதியின் பங்கு மாற்றக் கூற்று மற்றும் அதிகாரசபையின் மற்றும் தொகுதியின் நிதி பாய்ச்சல் கூற்று, ஒருங்கிணைந்த நிதிநிலை கூற்றுக்களுக்கான குறிப்புகளுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA இலங்கை) மூலம் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு (SLFRS/ LKAS) அமைய மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்துக்கமைய தயாரிக்கப்பட்டது.

1.1.1 குழுமத்தின் தகவல்கள்

1.2.1. துணை நிறுவனங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்கள்

வரையறுக்கப்பட்ட வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனம், வரையறுக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் ஹவுஸ் மற்றும் நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனி (தனியார்) ஆகிய முழு உரிமம் பெற்ற 03 துணை நிறுவனங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

மேலும், நகர அபிவிருத்தி அதிகாரசபை ஓசன் வீவ் டிவொலொப்மண்ட தனியார் கம்பனி, மற்றும் ஒனாலி ஹோல்டின்ஸ் பிஎல்சி நோக்கி குறிப்பிடத்தக்க செல்வாக்கை ஏற்படுத்தும் அதே சந்தர்ப்பத்தில் அவை நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்புடைய நிறுவனங்களாகும். மீளாய்வுக்கு உட்பட்ட நிதியாண்டில் அதிகாரசபையின் மற்றும் அதன் தொகுதியின் முக்கிய நடவடிக்கைகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை.

1.1.1 துணை நிறுவனங்கள் மற்றும் சார்ந்த நிறுவனங்களின் செயல்பாடுகளின் தன்மை

கம்பனியின் பெயர்	வகை	குறிக்கோள் மற்றும் முதன்மை செயல்பாடுகள்
வரையறுக்கப்பட்ட வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனம்	முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமாகும். 100%	வரையறுக்கப்பட்ட வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனம் 2009 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்ட நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டதுடன் உணவகம் மற்றும் உணவளிப்பு வசதிகள் மற்றும் செயல்பாடுகளை நிர்வகிப்பது அதன் வியாபாரத்தின் தன்மையாகும்.
வரையறுக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் ஹவுஸ்	முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமாகும். 100%	விடுதிகள், சுற்றுலா பங்களாக்கள், பூங்காக்கள் மற்றும் பிற பொழுதுபோக்கு வசதிகளை முகாமை செய்வதற்கும், செயல்முறைப்படுத்துவதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் வரையறுக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் ஹவுஸ் நிறுவப்பட்டது.
நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனி (தனியார்)	முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமாகும். 100%	நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனி (தனியார்) என்பது எந்தவொரு பகுதியிலும் ஏதேனுமொரு விதத்தில் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றினை அபிவிருத்தி செய்தல், கட்டமைத்தல் மற்றும் செயல்படுத்துதல் என்பதாகும். நிறுவனத்தின் முதலீட்டுச் சொத்து செத்சிறிபாய II ஆம் கட்ட கட்டிடமாகும்.
ஓசன் வீவ் டிவொலொப்மண்ட தனியார் கம்பனி	இணைந்த 43.39%	ஓசன் வீவ் டிவொலொப்மண்ட தனியார் கம்பனி தரமான தனியான வீடுகளை வழங்குவதன் மூலம் ஆதன மேம்பாட்டுத் துறையில் முன்னணி இடத்தைப் பெறுவதே இதன் நோக்கமாகும். நிறுவனத்தின் முக்கிய செயல்பாடாக அமைவது, கடைகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை வாடகைக்கு

		மற்றும் விற்பனை செய்வதற்கான சொத்துக்களை மேம்படுத்துவதாகும்.
ஒனாலி ஹோல்டின்ஸ் பிஎல்சி	இணைந்த 44.80%	ஒனாலி ஹோல்டின்ஸ் பிஎல்சி ஆதன மேம்பாடு மற்றும் ஆதன வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். நிறுவனம் முதலீட்டு சொத்து பிரிவினை வாடகைக்கு விடுவதன் மூலம் செயல்படுகிறது. நிறுவனத்தின் முதலீட்டு சொத்து கொழும்பு 04 இல் அமைந்துள்ள யுனிட்டி ப்ளாசா கட்டிடமாகும்.

துணை நிறுவனங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்களின் முதலீடு தொடர்பான தகவல்கள் 10 மற்றும் 11 குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.2 தயாரிப்பின் அடிப்படை மற்றும் பிற குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

1.2.1அளவீட்டின் அடிப்படை

குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதி நிதிக்கூற்றுக்குள் பின்வரும் பொருள் வகையிலான உருப்படிகள் தவிர்ந்த ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

- முதலீட்டுச் சொத்துக்களை மதிப்பிடுதல்.
- இனங்காணப்பட்ட உரித்துடைய பயன்களுக்கான பொறுப்பானது இனங்காணப்பட்ட உரித்துடைய பயன்களின் தற்போதய பெறுமதிக்குஇ அடையாளங் காணப்படாத காப்பீட்டுக் கணிப்பீட்டு இலாபத்தை திரட்டுதல் மூலமும்இ அடையாளங் காணப்படாத கடந்த சேவைகளின் கிரயம் மற்றும் அடையாளங் காணப்படாத நஷ்டஈடு கணிப்பீடு கழிப்பதன் மூலமும் இனங்காணப்பட்டுள்ளது.

1.3.2 கொடுக்கல் வாங்கல்கள் செயல்பாடுகள் மற்றும் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வகை

குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாக்களில் சமர்பிக்கப்பட்டிருப்பதுடன் அவை குழுமத்தின் செயல்பாட்டு நிதி அலகாக கொள்ளப்படுகின்றது. சகல நிதிசார் தகவல்களும் இலங்கை ரூபாக்களில் முன் வைக்கப்பட்டுள்ளது.

1.3.3 மதிப்பீடுகள் மற்றும் கருத்துரைகளின் பயன்பாடு

இலங்கை நிதி அறிக்கை தர நிர்ணயங்களுக்கு ஏற்ற வகையில் ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளை தயாரிக்கும் தேவைப்பாடாக அமைவது, சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்களின் பதிவு செய்யப்பட்ட பெறுபேறுகள் தொடர்பாக மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகள் தொடர்பாக முகாமைத்துவ தீர்மானங்களை எடுத்தல், மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் ஊகித்தல் போன்றவற்றை மேற்கொள்வதனை வேண்டி நிற்கின்றது. மதிப்பீட்டுப் பெறுமதிகள் உள்ளபடியாக பெறுபேறுகளினூடாக மாற்றமடைய முடியும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டு செல்லும் பெறுமதி தொடர்பாக முடிவு செய்யும்போது மதிப்பீடுகள் மற்றும் தொடர்புயை அனுமானம் வரலாற்று அனுபவங்கள்

மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் அமையப்பெறுவதுடன் அவை வேறு மூலங்களிலிருந்து தெளிவாக காட்டப்பட மாட்டாது.

மதிப்பீடுகள் மற்றும் கீழே காட்டப்பட்டுள்ள ஊகங்கள் நடைமுறை அடிப்படையில் அவதானிக்கப்படும். உரிய காலஎல்லைக்குள் மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்பட்டிருப்பதுடன் திருத்தங்கள் தாக்கம் விளைவித்திருப்பது, நடைமுறை நிதியாண்டுக்கு அல்லது எதிர்வரும் காலப்பகுதிக்காகவும் அவ்வாறு இல்லாதிருப்பின் நிகழ்கால மற்றும் எதிர்கால காலப்பகுதி என்ற இரண்டுக்கும் என திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளுக்குள் கீழே தரப்பட்ட குறிப்புகளின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட கணக்குக் கொள்கைகளிலிருந்து மிகவும் முக்கியத்துமான தாக்கங்கள் நிலவுகின்றதை இனங்கண்டுள்ளது.

கணக்கு மதிப்பீடுகள் / முடிவுகள்	**குறிப்பு இல.**	**பக்க இல.**
முதலீட்டுச் சொத்துக்களின் வகைப்பாடு	09	32

நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையின் மூலம் காட்டப்படுகின்ற உருப்படிகளின் பொருட்கூறுகள் சீராக்கங்கள் காரணமாக கணிசமான தாக்கம் இருப்பதாக ஊகிக்கப்பட்டுள்ளது.

கணக்கு மதிப்பீடுகள் / முடிவுகள்	**குறிப்பு இல.**	**பக்க இல.**
முதலீட்டுச் சொத்துக்கள்	09	32
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	08	30
ஊழியர் நலன்கள்	30	39

1.3 கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு

ஒவ்வொரு காலகட்டத்திற்கும் சமர்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளுக்காக கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டது.

1.4.1 ஒன்றிணைப்பிற்கான அடிப்படை

(அ) ஒன்றிணைப்பு

கொள்வனவு செய்யும் திகதியிற்கு கொள்வனவு செய்யும் அடிப்படையை பயன்படுத்தி வணிக ஒருங்கிணைப்பினை கணக்கிடப்பட்டுள்ளது. உதாரணம் குழுமத்திற்கு நிர்வாகத்தினை மாற்றும்போது, வியாபார அலகுகளில் நிதி மற்றும் செயல்பாட்டுக் கொள்கைகளை விதித்துரைப்பதற்கான அதிகாரம் அளிக்கப்படுவதைப்போன்று அதன் செயல்பாடுகளிலிருந்து பயனடைவது கட்டுப்படுத்தப்படும். நிர்வாகத்தனை

மதிப்பிடுவதனூடாக குழுமம் எதிர்கால வாக்களிக்கும் உரிமையினை அதன் கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

குழுமத்தின் புகழ் பெயர் அடையப் பெறும் ஒரு நாளில் பின்வரும் முறையில் கணக்கீடு மேற்கொள்ளப்படும்.

- கவனத்திற் கொள்ளப்படுகின்ற நியாயமான பெறுமதி
- கையகப்படுத்துகின்ற நபருக்குச் சொந்தமான கட்டுப்பாடற்ற பகுதி
- ஒரு வியாபார உள்ளீர்ப்பு பகுதியாக நிகழ்வதாயின், அக்குறித்த உள்ளீர்ப்புக்கு உரியவாறு முன்னர் காட்டப்பட்ட உரிமையின் சராசரி மதிப்பு
- அத்தகைய கையகப்படுத்தல் தொடர்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நியாயமான மதிப்பு

இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற சீராக்கம் எதிரான பெறுமானமாக காணப்படுகின்ற போது அது இலாபம் அல்லது நட்டத்துக்கு சீராக்கமும் மேற்கொள்ளப்பம். அதேபோன்று வியாபாரம் ஒருங்கிணைக்கும்போது கடன் மற்றும் உரிமை உத்தரவாதங்களுக்காக ஏற்கப்படும் கொடுக்கல் வாங்கல் செலவுகள் அதனூடாக உருவாக்கப்பட்ட செலவாக கருதப்படும்.

(ஆ)துணைக் கம்பனிகள்

குழுமத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற வணிக நிறுவனங்கள் துணை கம்பனிகளாக அழைக்கப்படுகின்றன. துணை நிறுவனங்களின் நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அவை முடியும் வரையில் அந்த துணைமைக் கம்பனிகளின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கப்படுகிறது. துணை நிறுவனங்களின் கணக்கியல் கொள்கைகள் அவசியம் ஏற்படுகின்ற போது, குழுமத்தின் மூலம் பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளுடன் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

(இ) இணைக்கப்பட்ட நிறுவனங்களில் முதலீடு (உரிமைக் கணக்கீட்டு அடிப்படையிலான முதலீடுகள்)

ஒரு துணைக்கம்பனியாக குறிப்பிடப்படுவது, குழுமத்தின் மூலம் குறிப்பிடத்தக்க செல்வாக்கினை ஏற்படுத்த முடியுமானதாக இருப்பினும் நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு செயல்பாடுகள் தொடர்பில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்த முடியாத குழுமத்திற்குச் சொந்தமான கம்பனியாகும். குழுமத்திற்குச் சொந்தமான சாதாரண பங்குகளில் 20% முதல் 50% வரை உள்ள வாக்களிக்கும் தத்துவத்தினை கொண்டிருக்கின்ற போது குறிப்பிடத்தக்க செல்வாக்கானது இருப்பதாக கருதப்படுகின்றது.

இணைக்கப்பட்ட கம்பனிகளின் முதலீட்டு கிரயத்தின் மீது அடையாளங் காணப்பட்டிருப்பதுடன் உரிமைகள் முறையினைப் பயன்படுத்தி கணக்கில் காட்டப்பட்டுள்ளது. முதலீட்டின் கிரயமாக கொடுக்கல் வாங்கல் கிரயம் உள்ளடங்கப்பட்டுள்ளது. இணைக்கப்பட்ட கம்பனிகளின் இலாபம் அல்லது இலாபங்களின் தொகுதியின் பங்கு மற்றும் ஏனைய விரிவான வருமானங்கள், சீராக்கங்கள் முதலியன ஆரம்பித்ததிலிருந்தே அவை நிறுத்தும் வரையில் அதன் தாக்கம் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்குள் உள்ளடங்கப்படும்.

ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது இடைநிலைக் கம்பனிகள் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழக்கூடிய இடைநிலை கம்பனிகளின் நிலுவைகள்

மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தேறாத வருமானம் மற்றும் செலவுகள் விலக்கப்பட்டுள்ளன.

அதிகாரசபையின் நட்டப் பகுதி உரிமைக் கணக்கு அடிப்படைக்கமைய அதிகமாக இருக்கும்போது உரிய முதலீட்டிற்கு பொருத்தமானவாறு முன் கொண்டுவரப்பட்ட பெறுமதி மற்றும் அதற்குரிய நீண்ட கால முதலீடுகள் பூச்சியமாக்கப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக நடைமுறையிலுள்ள நட்ட நிலைமைகள் நிகழ்கால பெறுமதியின் மீது சீராக்கம் செய்யப்படும். இவ்வாறான மேலதிக நட்ட நிலைமைகள் நிகழ்காலப் பெறுமதிக்கு குழுமத்தின் மூலம் உரிய முதலீடுகளுக்குரிய செலவினங்களைக் குறைப்பதன் மூலம் சீராக்கம் செய்யப்படுகின்றது.

(ஈ) ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்களை நீக்குதல்

ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது இடைநிலைக் கம்பனிகள் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழக்கூடிய தேறாத வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மற்றும் இடைநிலைக் கம்பனி நிலுவைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்படும். கொடுக்கல் வாங்கல்களிலினனால் எழக்கூடிய தேறாத வருமானங்களுடன் உரித்துடையவைகள் கணக்கீட்டு அடிப்படைக்கமைய முதலீடுகள், முதலீடுகளுக்கு எதிராக அகற்றப்பட்டுள்ளது. தேறாத நட்டங்களும் மேற்குறிப்பிட்ட தேறாத இலாபங்களும் அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட செயற்பாடுகளும் அதற்காக பின்பற்றப்படும். தேறாத நட்டங்கள் தேறாத இலாபங்கள் அதேவாறு நீக்கப்படுவதுடன் அந்நீக்கங்கள் இழப்பீட்டு பெறுமதிக்காக மட்டுப்படுத்தப்படும்.

1.4.2 வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல்கள்

சகல வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் நாணய அலகு ஒன்றிற்காக உரிய கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற சந்தர்ப்பத்திலேயே அன்றைய செலாவணி விகித அடிப்படையில் கணித்துக் கொள்ளப்படும். அவ்வாறு வெளிநாட்டு செலவு அலகின் மூலம் காட்டப்படும் சகல நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் தினத்திலேயே அன்றைய செலாவணி விகிதத்திற்கமைய நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படும்.

அதேவாறு வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட வெளிநாட்டு நாணய அலகொன்றின் மூலம் எடுத்துரைக்கப்படுகின்ற நிதிசாரா சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன பெறுமதியானது மதிப்பிடப்படுகின்ற போது நிலவிய செலாவணி பரிமாற்ற விகிதத்தினை பயன்படுத்தி மாற்றிக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு நிதி அலகுகள் மூலம் பரிமாற்றப்படுகின்ற நிதிசாரா சொத்துக்கள் மூலம் தோன்றிய இலாபம் அல்லது நட்ட நிலைமைகள் நிதி அறிக்கைகளில் பதிவு செய்தல் இடம்பெறும்.

1.4.3 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

அ). வழித் தோன்றல் அல்லாத நிதியியல் சொத்துக்கள; (Non – Derivative Financial Assets)

அதிகார சபையின் மூலம், கடன்பட்டோர் மற்றும் கிடைக்கவேண்டிய கணக்கு நிலுவைகளின் உரிய கடன்படுநர்கள், கிடைக்க வேண்டிய கணக்கியல் நிலுவைகள் தோற்றம்பெறும் திகதியிலே நிதிக்கூற்றுக்களுகளில் அறிக்கையிடப்படுகின்றன.. இதற்கு மேலதிகமாக மற்றைய அனைத்து நிதிச் சொத்துக்கள் சொத்துக்கள் கூற்றில் அச்சொத்துக்கள் தொடர்பில் அதிகாரசபையின் மூலம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட திகதியிலே அறிக்கையிடப்படுகின்றன.

அதற்கமைய எந்தவொரு நிதி சொத்துக்களால் உருவாகின்ற காசுப் பாய்ச்சலுக்கான உரிமை முதிர்ச்சிபெறும்போது அல்லது உரிமையை கையளிப்பதன் மூலம் இடப்பெயர்கின்ற ஏற்பாடுகள் மற்றும் இடர்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படமாட்டாது. அதற்கமைய நிதிச் சொத்துக்களின் உடமைக் கைமாற்றலின்போது அதிகாரசபையின் மூலம் தக்க வைக்கப்பட்டுள்ள வட்டிகள் தனியான ஒரு சொத்தாக அல்லது பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படுகின்றன. நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் சட்டரீதியான உரிமையுள்ள சந்தர்ப்பங்களில் மற்றும் தேறிய பெறுமதியை தீர்த்துக்கொள்ள முடியுமான சந்தர்ப்பங்களில் உரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளில் தேறியப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படுகின்றது.

இதற்கமைய அதிகார சபைக்குச் சொந்தமான பின்வரும் வழித்தோன்றிய நிதிச்சொத்துக்கள், கடன் பெறத்தக்கவைகள், நிதிசார் கடன்கள் மற்றும் விற்பனைக் கைப்படுத்துகை மேற்கொள்ள முடியுமான நிதிசார் பொறுப்புகள் உள்ளன.

(1) கடன்கள் மற்றும் கடன்பட்டோர்கள்

கடன் நிலுவைகள் மற்றும் கடன்பட்டோர்கள் நிதிச் சந்தையில் பட்டியல்படுத்தப்படாத நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுவதுடன், இந்த நிதிசார் சொத்துக்களின் கிடைப்பனவுகள் நிலையான அல்லது உறுதியான நிதிச் சொத்துக்கள் என முடிவுசெய்ய முடியும். முக்கியமாக சொத்துக்களை மதிப்பிடும்போது நியாயமான பெறுமதியின் அடிப்படையில் அதற்காக . நேரடியான அடைதகு முடியுமான செலவினங்கள் கைப்பற்றப்படும். அடிப்படை சொத்துக்கள் மதிப்பிடுவதற்கு புறம்பாக கடன்நிலுவைகள் மற்றும் கடன்படுநர் நிலுவைகள் கடன்தீர் நிலுவைகளின் அடிப்படையில் அட்டுரு வட்டி விகிதாசாரத்தினை பயன்படுத்தி, இழப்பீட்டு நட்டங்கள் அகற்றப்படுவதன் மூலம் கணக்கிடப்படும். இந்த கடன் நிலுவைகள் மற்றும் கடன்படுநர் நிலுவைகளில் காசும் காசு சார்ந்தவைகளும், ஊழியர் கடன்பட்டோர்கள், சந்தை மற்றும் ஏனைய கடன்படுநர்கள் மற்றும் தொடர்புடைய கடன்படுநர்களைக் கொண்டுள்ளது.

(ii)காசும் காசு சார்ந்தவைகளும்

காசு மீதி,நடைமுறை வைப்புக்கள் மற்றும் மூன்று மாதங்கள் அல்லது குறைவான முதிர்வு காலத்தினை கொண்டமைந்த நிலையான வைப்புக்கள் மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக்கள் அதிகாரசபையின் மூலம் ஏனைய தொடர்புடைய துணைக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கடன்தொகை காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும்போது காசும் காசு சார்ந்தவைகளில் உள்ளடக்கப்படுகின்றன.

(iii) முதிர்வடையும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதிசார் முதலீடுகள்

முதிர்வடையும் பொருட்டு நிறுத்திவைக்கப்பட்டுள்ள நிதியியல் முதலீடுகள் வழித்தோன்றல் நிதியியல் சொத்தாக பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் அந்த சொத்துக்கள் மூலம் கிடைக்கும் நன்மைகள் நிலையான விகிதத்தில் தீர்மானிக்க முடியும். மேலும் அந்தச் சொத்துக்கள் குறிப்பிட்ட முதிர்வு காலத்தினை கொண்டிருப்பதுடன், அதிகாரசபைக்குச் சொந்தமான அச்சொத்தினை நிறுத்தி வைத்துக்கொள்ளும் இயலுமை மற்றும் தேவைப்பாடுள்ளது.நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்யும்போது அடிப்படை கணக்கெடுப்புகளுக்கு புறம்பாக முதிர்ச்சிக்காக நிறுத்தி வைக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள் கடன் தீர்கால செலவு முறையில் அடிப்படையில் பயனுறும் வட்டி விகிதாசாரம் கையாளப்பட்டு, இழப்பீட்டு நட்டங்களைக் குறைத்து கணக்கிடப்படும்.

கடன்தீர் பெறுமதி கணக்கிடும்போது கையகப்படுத்துவதற்கான உயர் விலை மற்றும் மிகக்குறைந்த விலையினை பயன்படுத்தி பயனுறு வட்டி விகிதாசாரம் கணக்கிடப்படும். இந்த கடன்தீர் வட்டி திரட்டிய வருமானங்கள் மற்றும் செலவினக்கூற்றில் குறிப்பிடப்படுவதுடன் அதன் மூலம் தோன்றுகின்ற நட்டமாக இருப்பின் ஒன்றிணைந்த வருமானங்கள் மற்றும் செலவினக் கூற்றில் வேறு நிதிசார் சொத்துக்களின் மூலம் தோன்றிய கொடுப்பனவாக பதிவு செய்யப்படும்.

(M). வழித் தோன்றல் அல்லாத நிதியியல் பொறுப்புக்கள; (Non – DerivativeFinancial Liabilities)

அதிகாரசபையின் மூலம் கடன் பிணைகள் உரிய கடன் பிணைகள் தோற்றுவிக்கப்பட்ட திகதியில் நிதிக்கூற்றுக்களில் பதிவளிக்கப்படுகின்றன. மற்றைய அனைத்து நிதி பொறுப்புக்களும், உரிய கடன் பிணைகளுக்காக ஒப்பந்தம் செய்துகொண்ட திகதியில் நிதிக்கூற்றுக்களில் பதிவளிக்கப்படும். அதேவாறு அதிகாரசபையின் மூலம் கொடுப்பனவு செய்து விடுவிக்கப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட நிதியியல் பொறுப்புகள் நிதிக்கூற்றுகளில் பதிவளிக்கப்பட மாட்டாது.

அதிகார சபையானது வழித் தோன்றல் அல்லாத நிதியியல் பொறுப்புக்களை பிற நிதியியல் பொறுப்பு வகுதிக்குள் வகைப்படுத்துகின்றன. அத்தகைய நிதியியல் பொறுப்புக்கள் ஆரம்ப சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் காரணம் கற்பிக்க முடியுமான செலவுகள் உள்ளிட்ட மதிப்பிடப்படும். ஆரம்ப சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட நிதிசார் பொறுப்புகள் இரண்டாம் தர பயனுறுதி வாய்ந்த வட்டி விகிதாசாரத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

ஏனைய அனைத்தும் குறுகிய கால மற்றும் அல்லது சந்தை பெறுமதிகள் அல்லாத நியாய பெறுமதியின் மூலம் தோன்றுகின்ற பொறுப்புகள் வர்த்தக மற்றும் ஏனைய கடன் கொடுத்தோராக வகைப்படுத்தப்படும்.ஆரம்பநிலை வர்த்தகம் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் நியாயப் பெறுமதியின் மீது கணக்கிடல் இடம்பெறும். எவ்வாறாயினும் இந்த பொறுப்பு பெறுமதியிடும்போது அதிகார சபையின் மூலம் கடன் தீர் செலவு முறை பின்பற்றப்பட மாட்டாது. இவ்வாறு கடன்தீர்செலவு பின்பற்றப்படாமைக்கான காரணமாக

அமைவது உரிய கடன் கொடுத்தோருக்காக கொடுப்பனவுகள் கோரும் சந்தர்ப்பத்திலே மேற்கொள்வதற்கு தேவையேற்படவதானாலாகும். அதிகாரசபைக்கு சொந்தமான நடைமுறை நிதிசார் பொறுப்புக்களில் விவரங்களுடன் கூடிய பதிவு 24 ஆம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ளது. ஏனைய நிதிசார் பொறுப்புகள் , கடன் நிலுவைகள், வர்த்தகம் மற்றும் ஏனைய கடன் கொடுத்தவரின் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(i). இழப்பீட்டுக் கொள்கை

அரசாங்கத்தின் அறிவுறுத்தல்கள் மற்றும் கொள்கை முடிவுகளின் அடிப்படையில், பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையானது நாடளாவிய ரீதியில் காணிகளை கையகப்படுத்தியுள்ளது.காணிகள் கையகப்படுத்துதல் சட்டத்தின் 45 ஆவது பிரிவிற்கமைய, அக்குறித்த கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்காக இழப்பீடு செலுத்தும் சட்டப்பூர்வமான தன்மை காணிகள் கையகப்படுத்துதல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து தொடங்குகிறது.

இழப்பீட்டு ஆக்கக்கூறுக்கு மூலதன ஆக்கக்கூறு போல பின்வரும் முறையில் கணக்கீடுகளில் அடையாளம் காணப்பட்ட வட்டி ஆக்கக்கூறு அடங்கும்.

1. மூலதன ஆக்கக்கூறு: குறிப்பிட்ட காணி அளவுக்காக சம்பந்தப்பட்ட அதிகார சபையால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட மதிப்பு மூலதனக் கொடுப்பனவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

2. வட்டி ஆக்கக்கூறு: ஏற்றுக்கொள்ளப்பட்ட 7 நாட்கள் முதல் பணம் செலுத்தும் தேதி வரையிலான காலத்திற்காக நிலத்தின் உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய வட்டி.

   அதற்கமைய, ஐந்தொகையின் திகதியிற்கு கையகப்படுத்தப்பட்ட மொத்த காணிகள் அளவின் உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை, நிதிக்கூற்றுக்களில் இரண்டு பிரிவுகளின் கீழ் செலுத்த வேண்டிய இழப்பீட்டான நிதிக்கூற்றுக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

   (அ). வரவிருக்கும் நான்காவது ஆண்டில் செலுத்த வேண்டிய மொத்த இழப்பீடு தொகை மொத்த மதிப்பில் 20% ஆக இருக்கும் அனுமானிக்கப்படுமாயின், நடைமுறைச் சொத்தாக செலுத்த வேண்டிய மொத்தத் தொகை இழப்பீட்டுத் தொகையில் 20% ஆகும்.

   (ஆ) காணிகளுக்கான அட்டுறு இழப்பீடு தொகையாக நடப்பு அல்லாத பொறுப்புகளின் கீழ் மொத்த இழப்பீட்டு மதிப்பில் 80% மற்றொரு வருடத்திற்குப் பின்னர் செலுத்த வேண்டிய தொகை 80% என கருதப்படும்.

   இந்த இழப்பீட்டுத் தொகை தற்போதைய பொறுப்பு பகுதி காணிகள் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் மற்றும் நீண்ட கால முதலீடுகள் மூலம் கிடைக்கும் வட்டியைப் பயன்படுத்தி அந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் ஒட்டுமொத்த பணப்புழக்கத்தை பரிசீலித்த பின்னர் செலுத்தப்படுகிறது.கடந்த இரண்டு வருடங்களில் அதிகாரசபையின் நிதியளிப்பு பொறிமுறையிலிருந்து செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு.

வருடம்	**செலுத்திய இழப்பீட்டுத் தொகை(ரூ.)**
2017	908,000,000
2018	1,663,000,000
2019	507,332,975

1.4.4 சேதம்

1.4.4.1 வழித் தோன்றல் அல்லாத நிதியியல் பொறுப்புக்கள் (Non – DerivativeFinancial Liabilities)

அதிகார சபையினால் நியாய பெறுமதியின் மீது கணக்கிடப்படாத நிதி சொத்துக்கள் அனைத்தும் நிதிக்கூற்றுக்கள் அறிக்கையிடப்படுகின்ற திகதியிலே மதிப்பீடு செய்யப்படும். முக்கியமாக நிதிச் சொத்துக்கள் இழப்பீடுகள் கணக்கிடப்படுவது அக்குறித்த நிதிச் சொத்துக்கள் ஆரம்பநிலை கணக்கெடுப்புகளின் பின்னர் எதிர்மறை தாக்கம் நிதிப்பாய்ச்சலுக்கு ஏற்படுகின்றதை உறுதிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயாகும். அவ்வாறு குறிப்பாக ஏற்படுகின்ற தாக்கங்கள் கருதப்படுவது கடன்பட்டோர் கொடுப்பனவுகளைச் செலுத்துவதிலிருந்து தவறுதல் / மீறுதல் அதிகாரசபையின் மூலம் கடன் இணைப்பாக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துதல், கடன்பட்டோர் கடன் நொடிப்பு நிலையடைதல் அல்லது அவ்வாறான கடன்தீர்க்க இயலாத தன்மை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் மற்றும் உத்தரவாதங்களுக்காக சந்தை இழப்பு ஏற்படும்போதும் இதற்கு மேலதிகமாக உரிமைச் சான்றிதழ் ஒன்றின் நியாயப் பெறுமதி நீண்டகாலமாக நிலுவையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வாறான குறிப்பிட்டதக்க தாக்கங்களாக கருதப்படும்.

அதிகாரசபையினால் கிடைக்கவேண்டிய கடன் நிலுவைகளுக்கான இழப்பீடுகள் குறிப்பிட்ட அளவில் மேற்கொள்ளப்படும். இதற்கமைய சகல கருதக்கூடிய கிடைக்க வேண்டிய கடன்நிலுவைகளில் இழப்பீடுகள் கணக்கிடப்படும். நிதிச் சொத்துக்கான இழப்பீட்டு நட்டம் கடன்தீர் செலவு முறையின் மீது முன் கொண்டுவந்த நிலுவைகள் முக்கியமான பயனுறு வட்டி விகிதாசாரத்தின் கீழ் கணக்கிடப்பட்ட எதிர்கால நிதிப்பாய்ச்சல்களில் தற்போதைய பெறுமதி கருதுவதன் மூலம் கணக்கிடப்படும்.

இவ்வாறு மதிப்பிடுவதன் மூலம் ஏற்படுகின்ற இழப்பீட்டு நட்டம் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் கூற்றின் கீழ் பதிவு செய்யப்படுவதுடன் கடன்கொடுத்தோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஏற்பாடாகவும் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படும். இழப்பீட்டு நிதி சொத்துகளுக்கான உரிய வட்டி கழிவுகளின் அடிப்படைகளின் மீது சீராக்கம் செய்யப்படுவதுடன் இழப்பீட்டு நட்டம் குறைவடைதல் வருமானங்கள் மற்றும் செலவினக் கூற்றுக்களில் சீராக்கமும் மேற்காள்ளப்படும். விற்பனைக்காகவுள்ள முதலீடுகளின் இழப்பீட்டு நட்டம் கணக்கிடப்படுவது உரிய ஒருமித்த நட்டம் மற்றும் உரிய சொத்துக்களுக்கான உரிமையில் காட்டப்படுகின்ற நியாயமான பெறுமதி கருத்திற் கொண்டதன் பின்னரேயாகும்.இதற்கமைய விரிவான வருமான கூற்றில் அகற்ற படுகின்ற ஒரு மித்த நட்டம் அல்லது இலாபம் கையகப்படுத்துவதற்கு ஏற்கப்பட்ட செலவு, தேறிய அடிப்படை கொடுப்பனவுகள் மற்றும் கடன் தீர நியாயமான பெருமதியால் முன் கொண்டு

வந்த இழப்பீடு நட்டங்கள் அல்லது இலாபங்களின் வித்தியாசமாக குறிப்பிட முடியும். அவ்வாறு இழப்பீட்டு நட்டத்துக்கான ஒதுக்கீடுகள் ஏற்படுகின்ற மாற்றங்கள் வட்டி வருமானத்திறன் மீதான காலவரிசை பெறுமதியாக சீராக்கம் மேற்கொள்ளப்படும்.

1.4.4.2 நிதிசாரா சொத்துக்கள்

பொருட்பட்டி மற்றும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் நீங்கலாக அதிகாரசபைக்குச் சொந்தமான ஏனைய நிதி சாராத சொத்துகள் மீளாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு அறிவிப்புத் திகதியின் போதும் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மூலம் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் பற்றிய குறிப்பீடு உள்ளதா எனத் தீர்மானிக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உரிய சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயனுடைய பெறுமதிகள் பதிவு செய்யப்படும்.

சொத்தொன்றின் பயனடையும் மதிப்பாக குறிப்பிட்ட சொத்தின் அதன் பயன்பாட்டுப் பெறுமதி மற்றும் அதன் நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைச் செலவுகள் குறைத்து கிடைக்கப்பெறும் பெறுமதியிலிருந்து அதிக பெறுமதியினை கவனத்திற்குட்படுத்துவதன் மூலம் பதிவு செய்யப்படுகின்றது. இதற்கமைய, சொத்துக்களின் பயனுடைவுகள் சொத்துக்களின் மூலம் தோற்றுவிக்கப்படுகின்ற எதிர்கால நிதிப்பாய்ச்சல்கள் வரிக்கு முன்னரான கழிவுகள் விகிதாசாரம், சந்தை பயன்பாடுகள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட இடர்பாடு நிலைமைகள் என்பவற்றைப் கருத்திற்கொண்டதன் பின்னர் தற்போதைய பெறுமதிக்குக் கழிவிடப்படுகின்றன.இவ்வாறு இழப்பீட்டு நன்மைகள் மற்றும் சேதங்கள் பரிசோதனையின் பொருட்டு,அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மிகவும் சிறிய அலகுகளுக்கு (பண உற்பத்தி அலகு) பிரித்து ஒதுக்குதல் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மூலம் பிறப்பிக்கப்படுகின்ற நிதிப்பாய்ச்சல்கள் அவ்வாறு ஒதுக்கப்படுகின்ற அலகுகளிலிருந்து மாற்றமடையும்.

வியாபாரம் உள்ளீர்ப்பு செய்வதன் மூலம் ஏற்படும் மற்றும் செயற்பாட்டின் மூலம் தோற்றம் பெறுகின்ற நன்மதிப்பில் ஏற்படுகின்ற தீங்கு விளைவிக்கின்ற பெறுமதியின் மாற்றங்கள் நிதி பிறப்பிக்கும் அளவுகளில் சீராக்கம் செய்யப்படும். இதற்கமைய உரிய சொத்தின் அல்லது நிதி பிறப்பாகும் அலகுகளின் முன் கொண்டுவரப்பட்ட நிலுவையிலும் பார்க்க இலாப பெறுமதி அதிகமான சந்தர்ப்பங்களில் சேதம் இழப்பீட்டு நட்டமாக பதிவு செய்யப்படும்.

இவ்வாறு இடம்பெறுகின்ற இழப்பீட்டு நட்டம் முதல் தடவையாக உரிய சொத்துக்களின் நிதி பிறப்பாக்கும் அலகின் நன்மதிப்பு குறைவாக காட்டப்படுவதுடன் ஏனைய சொத்துக்களின் முன் கொண்டுவந்த நிலுவையில் விகிதாசார குறைவொன்றாக பதிவு செய்யப்படும்.

நன்மதிப்பின் மீது ஏற்படுகின்ற இழப்பீட்டுப் பெறுமதியின் குறைவு மீள கைப்பற்றப்பட மாட்டாது.ஏனைய சொத்துக்கள் தொடர்பாக முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட இழப்பீட்டு நட்டம் குறைவு அவ்வது நீக்குதல் இடம்பெற்றுல்லதாவென கணக்கிடப்படும். ஆதாயப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக இழப்பீட்டு நட்டம் மீண்டும் தயாரிக்கப்படுவதுடன் அவ்வாறான மாற்றமொன்று சீராக்கல் சொத்தின் முன்கொண்டுவரப்பட்ட நிலுவையும், பெறுமதி தேய்மானத்துடன் சீராக்கம் செய்ததன்

பின்னர் ஆதாயப் பெறுமதியிலும் பார்க்க குறைந்த பெறுமதி கொள்வதாயின் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

1.4.5 சொத்து, பொறி மற்றும் உபகரணம்

(i) இனங்காணலும் அளவிடுதலும்

சொத்து, பொறி மற்றும் உபகரணம் என்பன, ஒருமித்த தேய்மானம், ஒருமித்த சேத இழப்பு கழித்ததன் பின்னர் செலவுக்கு அல்லது உள்ளிருப்பு இனங்காணப்படும்.

சொத்து, பொறி மற்றும் உபகரணம் என்பனவற்றின் செலவு இனங்காணப்படுவது, அதனைக் கொள்வனவு செய்யும் பெறுமதிக்கு அல்லது அது எதிர்பார்க்கப்பட்ட பயன்படுத்தும் நிலைமைக்கு உருவாக்குவதற்காக ஏற்கப்படும் செலவாகும். சுயமாக தயாரிக்கப்படுகின்ற சொத்தொன்றில் கிரயமாக கருதப்படுவது அது எதிர்பார்க்கப்பட்ட பயன்படுத்தும் நிலைமைக்கு உருவாக்குவதற்காக ஏற்கப்படும் மூலப்பொருள் செலவு, நேரடிச் செலவு மற்றும் ஏதேனும் பிற நேரடிச் செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும். ஏதேனும் சொத்து, பொறி மற்றும் உபகரண விடயம் ஒன்றின் ஒவ்வொரு பகுதிகளுக்காக வெவ்வேறான பயனுறுதிக்காலத்தைக் கொண்டுள்ள போது, அவை தனி விடயங்களாக கணக்கிடப்படும்.

(ii) முதலீட்டுச் சொத்துக்கள் மீள வகுப்பாக்கம் செயதல்

தொகுதிக்குச் சொந்தமான சொத்து முதலீட்டுச் சொத்துக்களுக்கு மாறும்போது அச்சொத்து மீண்டும் நியாயப் பெறுமதிக்கு அளவிடப்படுவதுடன், அது முதலீட்டுச் சொத்தாக மீள வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. மீள் அளவீடு சம்பந்தமாக எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் உரிய சொத்துக்காக முன்னர் மேற்கொள்ளப்பட்ட இழப்பீடுகளின் அடிப்படையில் சீராக்கம் செய்யப்படும். இதற்கு மேலதிகமாக நடைமுறை இலாபம் ஏதும் இருப்பின், விரிவான வருமானக் கூற்றில் எண்கணித ஒதுக்கீடாக உரிமையாண்மையில் காட்டப்படும். இவ்வாறு கண்டறியப்பட்டுள்ள நட்டங்கள் வருமானங்கள் மற்றும் செலவினக்கூற்றில் பதிவு செய்தல் இடம்பெறும்.

(iii) சுமந்து செல்லும் செலவு

சொத்து, பொறி மற்றும் உபகரணம் என்பனவற்றுக்கு ஏதேனுமொரு பகுதி பிரதியீடு செய்யும்போது செலவு அதன் சுமந்து செல்லும் செலவாக கண்டறியப்பட்டிருப்பதுடன் அப்பகுதி சேர்ப்பதன் ஊடாக மொத்த ஆதன தொகுதிக்குள் எதிர்கால பொருளாதார நன்மைகள் தோற்றம் பெறுமாயின் அதன் செலவினை அளவிட முடியும். பிரதியீடு செய்யப்பட்ட பகுதியின் சுமந்து செல்லும் செலவை அகற்றவும் முடியும். சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் அன்றாடம் பராமரிக்கும் செலவு இலாபநட்டக்கணக்கினூடாக கண்டறிய முடியும்.

(iv)அகற்றுதல்

சொத்து, பொறி மற்றும் உபகரணங்களில் அடங்கியுள்ள ஏதேனும் உருப்படிகளை அகற்றும்போது அல்லது அதனை பயன்படுத்துவதனூடாக அதன் எதிர்கால பயன்கள் இல்லாத இல்லாதபோது அங்கு அகற்றுவதன் அடிப்படையின் எழும் இலாபம் அல்லது நட்டம் பங்கிலாப கணக்கிற்குள் ஏனைய வருமானங்களின் கீழ் இனங்காணப்படும்.

(v) பெறுமானத்தேய்வு

சொத்து, பொறி மற்றும் உபகரணங்களில் அடங்கியுள்ள ஒவ்வொரு உருப்படியும் அவற்றின் எவ்வாறு மதிப்பிடப்பட்ட பயனுறுதி வாய்ந்த ஆயுட்காலத்தின் மீது நேர்கோட்டு முறைக்கமைய பெறுமானத் தேய்வு மேற்கொண்டுள்ள விதம் இலாபநட்டக் கணக்கினூடாக இனங்காண முடியும். குத்தகை வசதியின் கீழ் உள்ள சொத்துகளின் பெறுமானத் தேய்வின் போது குத்தகை ஒப்பந்தத்திலுள்ள ஒப்பந்த குத்தகைக் காலம் மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் ஆகியவற்றில் குறைந்த காலப்பூராவும் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படும். இவ்வாறு குத்தகையின் அடிப்படையில் நடைமுறையிலுள்ள சொத்துக்கள் தொகுதியின் மூலம் பெறுமானத் தேய்வு இடம்பெறுவது உரிய சொத்தின் உரிமை குத்தகைக் காலத்திற்குப் பிறகு தொகுதியிற்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பங்களிலேயாகும். சொத்தின் தேய்மானம் அந்தச் சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்ற திகதியாக இருப்பதுடன், பெறுமானத்தேய்வு முடிவு செய்யப்படுவது, அந்தச் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக வகைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்திலேயாகும். (விற்பனைக்காக வகைப்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொகுதியிலிருந்து அகற்றுவதல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.) காணிகள் மற்றும் நிறைவுபெறாத வேலைகள் தேய்மானம் செய்யப்பட மாட்டாது.

மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு

சொத்துக்கள் தொகுதி	பயன்தரு ஆயுட்காலம்
கட்டிடங்கள்	50 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள்	05 வருடங்கள்
மரத்தளவாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்	10 வருடங்கள்
அலுவலக உபகரணங்கள்	05 வருடங்கள்
முறைமைகள் மற்றும் வலையமைப்புகள்	05 வருடங்கள்
புத்தகங்கள்	04 வருடங்கள்
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	05 வருடங்கள்

1.4.6. முதலீட்டுச் சொத்து

1.4.6.1 இனங்காணலும் அளவிடுதலும்

சொத்துக்கள், வாடகை வருமானத்தை உழைப்பதற்கோ அல்லது மூலதன பெறுமதி அதிகரிப்பதற்காகவோ அல்லது இரண்டிற்காகவோ வைத்துள்ள சொத்து மூலதனச் சொத்தாக வகைப்படுத்தப்படும். மூலதனச் சொத்து முதன்மையாக கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் செலவுகளை உள்ளடக்கியுள்ளது.

1.4.6.2 சுமந்து செல்லும் செலவு

முதலீட்டு சொத்து பதிவு செய்யும் திகதியிற்கு சந்தை நிலைமையைக் கவனத்திற் எடுத்துக்கொள்ளப்பட்டு சாதாரண பெறுமதிக்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. முதலீட்டுச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதி மாற்றமடைவதனூடாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அது எழும் காலத்திற்குள் வருமான கூற்றுக்குள் சேர்க்கப்படும்.

சர்வதேச மதிப்பீட்டு தர நிர்ணயக் குழு பரிந்துரைத்த மதிப்பீட்டு மாதிரிக்கமைய சாதாரண பெறுமதியினை மதிப்பிடுவதற்காக முகாமைத்துவத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வெளிவாரி சுயாதீன மதிப்பீட்டாளருக்கு ஒவ்வொரு மூன்று ஆண்டுகளின் முடிவிலும் முதலீட்டுச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதி மதிப்பிடுவதற்கு வழங்கப்படும்.

1.4.6.3 அகற்றுதல்

முதலீட்டுச் சொத்தை விற்பனை செய்யும்போதோ அல்லது பயன்பாட்டிலிருந்து நிரந்தரமாக மீள எடுக்கும்போதோ மற்றும் அவை அகற்றும்போதோ எதிர்காலத்தில் பொருளாதார ரீதியில் வருமானம் ஏதும் இல்லாவிட்டால் அந்த முதலீட்டுச் சொத்து அகற்றுதல் என அழைக்கப்படுகின்றது. அவ்வாறு அகற்றப்படும் முதலீட்டுச் சொத்துக்களின் எடுத்துச் செல்லப்படும் பெறுமதி மற்றும் தேறிய விற்பனைக்கும் உள்ள வேறுபாட்டை அவ்வாறு அகற்றப்படும் காலப்பகுதிக்குள் வருமானக் கூற்றுக்குள் அடையாளம் காணலாம்.

1.4.6.4 தற்போதைய செயல்முறை

கையகப்படுத்தும் செலவு மற்றும் அடிப்படையாகக் கொண்டு முன்னைய SLAS இயைவாக நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் மற்றும் முதலீட்டுச் சொத்து கட்டுமானச் செலவு SLFRS நிலைமாறும் திகதியில் (2011 திசெம்பர் 31 ஆம் திகதியிற்கு கருதப்பட்ட செலவு) அதிகாரசபையின் மூலம் நியாயமான மதிப்பின் கீழ் காணிகள் மற்றும் முதலீட்டுச் சொத்து கட்டுமானச் செலவு அளவிடப்பட்டது.

SLFRS 16 அதிகாரத்துக்கமைய 99 குத்தகைக்கு விடுவதற்காக வழங்கப்பட்டுள்ள காணி நிதிசார் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டு காணியில் கொண்டு செல்லும் பெறுமதியினைக் கண்டறிந்து இலாப நட்டக் கணக்கிற்கு குறிப்பிட்டதோர் இலாபம் அல்லது நட்டத்தைக் கண்டறிய முடியும். எவ்வாறாயினும், 99 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணயில் செயல்முறை உரிமை குத்தகைக் கால முடிவில் குத்தகைதாரருக்கு கையளிக்காததாலாலும், அரசு நிறுவனமாக தேவையான காணித் தகவல்களை கணக்குப் புத்தகங்களில் பராமரிப்பதையும் கருத்தில் கொண்டு, அதிகாரசபையால் அனைத்து விடயங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணி அவர்களின் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதுடன் ஏனைய

காணிகளை மறுமதிப்பீடு செய்து அது SLFRS நிலைமாற்றத்தின்போது கருதிய கிரயமாக கருதப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கடைசி SFRS நிலைமாற்த்திலிருந்து இது இடம்பெற்றது.

1.4.6.5. முதலீட்டுச் சொத்துக்களுக்கு அல்லது அதில் மாற்றம் செய்தல்.

பயன்பாட்டில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரம் முதலீட்டுச் சொத்துக்கு அல்லது அதில் மாற்றங்கள் செய்யப்படும். முதலீட்டுச் சொத்திலிருந்து உரிமையாளர் இருப்பிடச் சொத்து அல்லது இருப்புகளுக்கு (WIP) மாற்றம் செய்வதற்காக, பின்னர் கணக்கியலுக்காக கருதப்பட்ட செலவு பயன்பாடு மாற்றமடைந்த திகதியிலிருந்து நியாயமான மதிப்பாகும்.உரிமையாளரால் இருப்பிடமாகக் கொண்டுள்ள சொத்து முதலீடு சொத்து அல்லது இருப்பு (WIP) ஆகிவிட்டால், அதிகாரசபையின் மூலம் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள கணக்கியல் கொள்கையிற்கமையவாக, பயன்பாடு மாற்றமடையும் திகதி வரை அந்த சொத்துகாக கணக்கில் வைக்கப்படும்.

1.4.6.6 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்

கம்பனிகள் குழாம் துணை நிறுவனமொன்றின் முதலீட்டுச் சொத்தில் கணிசமான பகுதியை கையப்படுத்தியிருக்கும்போது,அத்தகைய முதலீட்டுச் சொத்து, ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளில் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களாகக் கருதப்படுவதுடன்,சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் குழு கணக்கியல் கொள்கையைப் பயன்படுததி கணக்கிடப்படுகின்றன.

1.4.7. குத்தகை

உரிய இணக்கப்பாட்டின் தன்மை மற்றும் அதன் மூலம் உரிய சொத்தைப் பயன்படுத்துவதற்காக கிடைக்கும் உரிமையை கருத்தில் கொண்டு எந்தவொரு இணக்கப்பாடும் குத்தகையாக வகைப்படுத்தப்படுகிறது.

- செயல்பாட்டுக் குத்தகை - அதிகாரசபை உரித்திடுநராக

அதிகாரசபையின் மூலம் ஏதேனும் சொத்துக்காக அனைத்து அல்லது போதியளவு ஏற்பாடுகள் மற்றும் இடர் கைமாற்றம் செய்யப்படாத சந்தர்ப்பங்கள் செயல்பாட்டுக் குத்தகையென பதிவு செய்ய முடியும்.

தொடர்புடைய செயல்பாட்டுக் குத்தகைத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஏற்படும் செலவு தொடர்புடைய செயல்பாட்டு சொத்தின் முன்னோக்கி கொண்டு வந்த நிலுவையுடன் சேர்க்கப்படுவதுடன் அது அந்த குத்தகை ஒப்பந்தத்துக்கான காலப்பகுதி பூராவும் வாடகை வருமானமாக கண்டறியப்படும். அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்தான செத்சிறிபாய வளாகம், பெரும்பாலான அரசு நிறுவனங்களுக்கு செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பதுடன் அதற்கு புறம்பாக அதிகாரசபை குத்தகை உரித்திடுநராக நாடளாவிய ரீதியில் காணி மற்றும் பெரும்பாலான கட்டிடங்கள் செயல்பாட்டுக் குத்தகையாக வழங்கி வாடகை வருமானங்கள் மற்றும் மூலதன மதிப்பு அதிகரிப்புகள் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படும்.

1.4.8 கட்டி முடிக்கப்பட்டது URPCC வீடுகள்

கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஏற்படும் அனைத்து மூலதன செலவுகளும் அந்தந்த கருத்திட்டத்திற்கு தனித்தனியாக மூலதனமாக்கப்படுகின்றன. கட்டுமான காலத்தில் மேற்கூறிய அனைத்து செலவுகளும் ஐந்தொகையில் WIP இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. கட்டுமானம் முடிந்ததும் இற்றையாகும்போது மூலதனமாக்கப்பட்டுள்ள அனைத்து செலவுகளும் முடிக்கப்பட்ட URPCC வீட்டுக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. பதவியணியினர் சம்பளம், போக்குவரத்து போன்றவை கருத்திட்டங்களை செயல்படுத்தும் அனைத்து மீண்டெழுஞ் செலவினங்கள் மற்றும் வீட்டுக் கருத்திட்டங்களின் பராமரிப்புச் செலவுகள் போன்றன ஆண்டுதோறும் இலாபம் மற்றும் நட்டம் என அறவிடப்பட்டுள்ளன.

1.4.9 மூலதன முடிக்கப்படாத வேலைகள்

பதிவுசெய்யப்படுகின்ற திகதியிற்கு பூர்த்தி செய்யப்படாத மூலதனச் செலவுகள், மூலதன வேலையாக முடிக்கப்படாத வேலைகளாக காட்டப்பட்டிருப்பதுடன், அவ்வாண்டுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பயன்படுத்துவதற்காகவுள்ள மூலதனச் சொத்துகள் சொத்து, பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1.4.10 கடன்வாங்கும் செலவு

இலங்கை கணக்கீட்டுத் தரம் 23 (LKAS 23)இற்கமைய, நேரடியாக கொள்வனவு செய்தல;, கட்டுமானங்கள் அல்லது தகைமையான சொத்தொன்றின் உற்பத்தி முதலியன சொத்தொன்றின் பகுதியாக மூலதனவாக்கம் செய்வதன் மூலம் ''கடன்பெறு செலவு'' அமையப்பெற்றுள்ளது. கடன் பெறு செலவின் மூலதனவாக்கம், தகைமைச் சொத்துக்கள் முழுமையாக நிறைவு செய்வதன் பின்னர் நிறுத்தப்படுகின்றது.

1.4.11 இருப்பு

இருப்பு கிரயம் அல்லது தேறிய தீர்ப்பனவுப் பெறுமதியிலும் பெறுமானமிடப்படுகின்றன. கிரய முறையின்போது, நிறையிடப்பட்ட பொதுவான செலவு அடிப்படையில் கையாளப்படுவதுடன் அதன் கிரயமாக இருப்புகளைக் கொள்வனவு செய்யும் செலவு மற்றும் அவற்றினை தற்போதைய அமைவிடத்துக்கு மற்றும், நிலைமைக்கு கொண்டு வருவதற்கு ஏற்கப்பட்ட செலவுகளையும் உள்ளடக்குகிறது.

1.4.12 பணியாளர் நன்மைகள்

(அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டம்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது பணியாளர்கள் சேவையை விட்டு வெளியேறிய பிறகு அவர்களுக்கு பலன்கள் கிடைக்கும் வகையில் அதிகாரசபையினால் அமைக்கப்பட்ட நிதியாகும். இதற்கான சட்டப்பூர்வ அல்லது ஊழியர் சகாயநிதி பொறுப்பை அதிகாரசபையினால் ஏற்காது. இவ்வாறு, அந்தந்த பங்களிப்புத் திட்டத்திற்கான ஏற்கப்பட்ட செலவினம் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முன் கொடுப்பனவு நிதிக்கூற்றுக்களில் ஒரு சொத்தாக எதிர்கால கொடுப்பனவுகளின் ஏற்படும் ஒரு குறைவு காரணமாக பதிவு செய்யப்படுகின்றன.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கை நிதியமும்

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக பங்களிப்பு செய்கின்ற பணியாளர்கள் அதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் கீழ் இயைபுடைய பங்களிப்புத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவர். இதற்மைகமைய அதிகாரசபையின் மூலம் மொத்த வேதனாதிகளிலிருந்து முறையே 15% மற்றும் 3% ஆக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்படும்.

(இ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - பணிக்கொடை

இலங்கை கணக்கீட்டுத் நியமம் 19 ஆன ஊழியர் ஏற்பாடுகளின் கீழ் வேலைவாய்ப்பின் பின்னர் கிகைக்கும் விளைவளவாக வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்து திட்டங்களும் உள்ளடங்குகின்றன. இதற்கமைய அதிகாரசபையின் மூலம் பணிக்கொடை கொடுப்பனவு, 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கமைய உரித்துடைய அனைத்து பணிக்கொடையாளர்களுக்கான ஒதுக்கீடு பணியாளர் ஒருவர் சேவையில் இணைந்து முதற் சேவை வருடத்தில் மேற்கொள்ளப்படும். பணிக்கொடைத் திட்டமானது இவ்வாறு ஊழியர் ஒருவருக்கு ஊழியர் நிறுவனத்துக்குள் சேவையாற்றிய காலஎல்லை மற்றும் மேலும் வெளிவாரி காரணங்களை கருத்திற்கொள்வதன் மூலம் கிடைக்கப்பெறுகின்றது. உரிய பணிக்கொடைத் திட்டத்துக்கான பொறுப்பின் நிகழ்காலப் பெறுமதி ஐந்தொகையில் காட்டப்படும். இதற்கமைய வருடாந்த காப்பீடு மற்றும் பிற தொடர்புடைய ஆபத்து கணிப்பீட்டு முறைப்படி எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் முறையின் அடிப்படையில் இலங்கை கணக்கியல் நியமங்கள் 19 இற்கமையவே ஊழியர்களுக்கான பணிக்கொடைப் பொறுப்பு கணக்கிடப்படுகின்றது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தில் தற்போதைய பெறுமதி அரச திறைசேரி முறிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கழிவுகள் விகிதாசாரத்தின் அடிப்படையில் கணிக்கிடப்படுகின்றது.. உரிய காப்பீடு மற்றும் பிற தொடர்புடைய ஆபத்து கணிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் நிதிக்கூற்றுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அக்குறித்த இலாபம் அல்லது நட்டம் ஏற்பட்ட சந்தரப்பத்திலேயே மேற்கொள்ளப்படும்.

1.4.12 ஒதுக்கீடுகள்

கடந்த காலத்தில் நிகழ்ந்த செயல்பாடுகள் தொடர்பாக தற்போதைய சட்டரீதியான, அல்லது நியதிச்சட்ட பொறுப்பு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதிகாரசபையின் மூலம் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஒதுக்கீடுகளுக்காக எதிர்கால நிதி செலவீடுகள் சரியான முறையில் கணக்கிடுவதற்கு முடிந்தமை ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் கருதப்படுகின்ற காரணமாகும். அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் ஐந்தொகையில் பதிவு செய்யப்படுகின்றது.வரிக்கு முன்னராக கழிவுகள் விகிதாசாரத்தினைப் பயன்படுத்தி சந்தைப்பெறுமதி மீது

எதிர்காலத்தில் ஏற்படுகின்ற நிதிச்செலவு நிகழ்காலப் பெறுமதிக்கு சீராக்கம் செய்வதன் மூலமாகும்.

1.4.13 விரிவான வருமானக் கூற்று

1.4.13.1 வருமானங்கள்

(அ) வாடகை வருமானங்கள்
முதலீட்டுச் சொத்துக்களினூடாக உழைக்கப்படுகின்ற வாடகை வருமானம், குத்தகை ஒப்ப்நதத்துக்கமைய நேர் கோட்டு முறையினைப் பின்பற்றி இலா நட்டக்கணக்கில் இனங்காணப்படுகிறது. வழங்கப்பட்ட குத்தகை உதவுதொகைகள், குத்தகை நியதியில் மொத்த வாடகை வருமானத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இனங்காணப்படுகிறது. உப குத்தகையிலிருந்து உழைக்கின்ற வாடகை வருமானம் தனிப்பட்ட வருமானங்களாக கண்டறியப்பட்டுள்ளது.

(ஆ) வழங்கப்பட்ட சேவைக்கான கட்டணங்கள்

மின்சாரம், நீர்க் கட்டணம், வாடி வீடு, வாடிக்கையாளர் கிடைக்கப்பெறும் முகாமைத்துவ வருமானம் கட்டணம் நீங்கலாக ஏனைய வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற சகல கட்டணங்களும் பண அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

(இ) கட்டுநிதி

அதிகாரசபையின் குத்தகை அல்லது வாடகை வருமானங்கள் பெறும் சொத்துக்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதி உரிய கட்டுநிதி கிடைத்த வருடத்திலே வருமானமாக அடையாளங் காணப்படும்..எவ்வாறாயினும், வாடிக்கையாளரகள் அல்லது அரசாங்கம் சார்பாக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக கிடைக்கும் கட்டுநிதி கருத்திட்ட இறுதியில் கருத்திட்ட அபிவிருத்தி கிரயத்திற்கு ஈடு செய்ய வெண்டுமென்பதால், அந்த தொகை பொறுப்புகளின் கீழ் காட்டப்படும்.

1.3.15.2 வட்டி வருமானம்

அனைத்து நிதி சொத்துக்கள், வட்டி நிறுத்திவைக்கும் நிதிச் சொத்துகள் விற்பனைக்கு அடிப்படையில் நடைமுறை சொத்துக்கள் பயனுறும் வட்டி விகிதாசாரத்தின் கீழ் கணக்கிடப்படும்.இந்த பயனுறும் வட்டி விகிதாசாரம் எதிர்காலத்தில் நிதிசார் கொடுப்பனவுகள் மற்றும் கிடைப்பனவுகளின் அடிப்படையில் நிதிசார் உத்தரவாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லை அல்லது குறுகிய காலத்துக்குள் பொருத்தமான விதத்தில் உரிய நிதி சொத்துக்கள் முன் கொண்டு வரும் நிலுவைக்கு சீராக்கம் செய்யப்படும்.

1.3.15.3 பங்கிலாப வருமானம்

பங்குரிமையாளர்களுக்கு பங்குரிமை கிடைக்கப்பெறு பட்சத்தில் பங்கிலாப வருமான கணக்குக் கூற்றுகளில் பதிவு செய்யப்படும்.

1.3.15.4 ஏனைய வருமானங்கள்

சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் அகற்றப்படும் பட்சத்தில் அவ்வாறு அகற்றப்படுகின்ற சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதியுடன் தொடர்புடைய செலவினங்கள் குறைக்கப்பட்டதன் பின்னர், எழும் இலாபம் அல்லது நட்டங்கள், வேறு வருமானங்களின் கீழ் இனங்காண முடியும்.

வெளிநாட்டு நாணய பெறுகை அல்லது இழப்புகள் நிகர அடிப்படையில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

1.3.15.5 அரச மானியங்கள்

அரச மானியங்கள் ஆரம்பத்தில் பிற்போடப்பட்ட வருமானமாக நியாயப் பெறுமதியின் அடிப்படையில் அதிகாரசபையின் மூலம் பதிவு செய்யப்படும். இதற்கமைய அரச நிதியேற்பாடுகள் அளிக்கப்படுகின்ற நிபந்தனைகளுடன் ஒப்பிடுவதன் மூலம் அதிகாரசபையின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் கணக்கில் ஏனைய வருமானங்களின் கீழ் இனங்காணப்படும்.

URPCC மற்றும் நடுத்தர வருமான பிரிவின் கீழ் வீடுகளை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானம்

இலங்கை அரசாங்கத்தின் வழிகாட்டலுக்கமைய,கொழும்பு நகரில் உள்ள பின்தங்கிய சமூகத்தினருக்கு சிறந்த தங்குமிட வசதிகளை வழங்கும் தேசிய கருத்திட்டமாக அதிகாரசபையின் மூலம் கொழும்பு நகரின் நகர புத்துயிரளிப்பு கருத்திட்டத்தை ஆரம்பிக்கப்பட்டதுடன் கட்டுப்படியான விலையில் வீடலகொன்றினை வழங்கும் நோக்கத்துடன் நடுத்தர வருமான பிரிவினருக்கான வீட்டுத் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது.

SLFRS 15 அமைய, மேலே உள்ள கருத்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானம் அடையாளம் காண்பதற்கு ஐந்து படிமுறை மாதிரியைப் பயன்படுத்த வேண்டும்.

- படிமுறை 01 - வாடிக்கையாளருடனான ஒப்பந்தத்தை அடையாளம் காணவும்
- படிமுறை 02 - ஒப்பந்தத்தில் செயல்திறன் பொறுப்புகளை அடையாளம் காணவும்.
- படிமுறை 03 – கொடுக்கல் வாங்கல் விலையை தீர்மானிக்கவும்
- படிமுறை 04 - கொடுக்கல் வாங்கல் விலையை ஒதுக்கவும்
- படிமுறை 05 - ஒரு செயல்திறன் பொறுப்பு நிறைவேற்றப்படும் போது வருமானத்தை அடையாளம் காணவும்.

உறுதியளிக்கப்பட்ட சொத்தை வாடிக்கையாளருக்கு கையளிப்பதன் மூலம் நிறுவனம் செயல்திறன் கடமையை நிறைவேற்றும்போது (அல்லது ஆக) அதிரசபை இலாபம் அல்லது நட்டத்தை அடையாளம் காணுவதுண்டு. வாடிக்கையாளர் அந்தச் சொத்தின் கட்டுப்பாட்டைப் பெறும்போது (அல்லது ஆக)

ஒரு சொத்து மாற்றப்படும். SLFRS 15 இற்கமைய, ஒரு செயல்திறன் பொறுப்பு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது காலப்போக்கில் நிறைவேற்றப்படலாம். இது காலப்போக்கில் செயல்திறன் பொறுப்பை நிறைவேற்றுகிறதா அல்லது ஒரு கட்டத்தில் செயல்திறன் பொறுப்பை நிறைவேற்றுகிறதா என்பது ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு நிறுவனம் காலப்போக்கில் ஒரு செயல்திறன் பொறுப்பை நிறைவேற்றவில்லை என்றால், செயல்திறன் பொறுப்பு ஒரு கட்டத்தில் நிறைவேற்றப்படுகிறது. அதன்படி, நகர அபிவிருத்தி அதிகாரசபையானது மேற்படி வீட்டுத்திட்டத்தினால் கிடைக்கும் வருமானத்தை அந்தச் சந்தர்ப்பத்தில் அடையாளம் காணும்.

1.4.13.6 **செலவினங்களை அடையாளங் காணல்**

(அ) ஏனைய செலவினங்கள்

IV. நியமத்தின் 81 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நீண்ட கால குத்தகையாளரால் செயற்பாட்டு குத்தகைகளின் நீண்டகால கொடுப்பனவு வருமானம் எளிய வகை அடிப்படையிலான அல்லது வேறு முறையொன்றின் அடிப்படையில் இனங்காணப்பட வேண்டும். அதிகாரசபையின் சொத்துக்கள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டதன் பின்னர் குத்தகைப் பெறுமதி அந்த குத்தகைக் காலம் முழுவதும் அதிகாரசபையின் வருடாந்த வருமானத்திற்கு எடுத்தல் ஒரே முறையில் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் ஒவ்வொரு செயற்திட்டத்தின் கீழ் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வருடாந்த, சலுகைக் காலத்துடன் மற்றும் ஒரே தடவையில் மொத்தப் பெறுமதியும் பெற்றுக் கொள்ளல் போன்ற வெவ்வேறு முறைமைகளின் மூலம் குத்தகை வழங்குதல் தொடர்பாக ஆண்டிற்குரிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா 43,499,430,189 மில்லியனான பிற்போடப்பட்ட நீண்டகால குத்தகை வாடகை தொடர்பாக போதியளவு வெளிப்படுத்தல் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 40 முதலீட்டு ஆதனங்கள்

i. நியமத்திற்கு முரணாக வருமான உழைப்பு அல்லாத நகர அலங்கார நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 35,810,126 பெறுமதியான 06 செயற்திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக இனங்காணப்பட்டுள்ள அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ரூபா 14,360,770,313 பெறுமதியான 23 செயற்திட்டங்கள் மற்றும்

முதலீட்டு ஆதனம் அல்லாத ரூபா 18,103,817 ஆன அதிகாரசபைக்கு சொந்தமான சுற்றுலா விடுதியும் முதலீட்டு ஆதனமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ii. நியமத்தின் 30, 32(அ) மற்றும் 34 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிற்சேர்க்கையுடன் 33-35 ஆம் பந்திகளில் காண்பிக்கப்படும் நியாயமான பெறுமதி படிவம் அல்லது பந்தி 56 இன் கிரய படிவம் நிறுவனமொன்றினால் அதன் கணக்கீட்டு கொள்கையாக தெரிவு செய்யப்பட்ட பந்தி இலக்கம் 53 இன் பிரகாரம் நியாயமான பெறுமதி நம்பிக்கையாக அளவிடுவதற்கு முடியாமல் காணப்படும் சந்தர்ப்பங்கள் தவிர அதன் அனைத்து முதலீட்டு ஆதனங்களுக்காக பயன்படுத்த வேண்டிய போதிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அதிகார சபையின் முதலீட்டு ஆதனங்களின் கீழ் நியாயமான பெறுமதி படிவம் அல்லது கிரயம் பிரகாரம் அது அளவிட கூடியதாக கருதாமல் அளவீட்டு முதலீட்டு ஆதனங்களின் கிரய வடிவம் பின்பற்றப்பட்டும் போது கூட இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 இன் 79(ஊ) பந்தியின் மூலமும் நியாயமான பெறுமதியை வெளிப்படுத்த வேண்டுமென்ற செயற்பாடு சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில ஆதனங்கள் கிரயத்திலும் சில மீள் மதிப்பீட்டு பெறுமதியிலும் மேலும் சில சந்தர்ப்பங்களில் பெறுமதி இரண்டினதும் கூட்டாக பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

III. நியமத்தின் பிரகாரம் எதிர்காலத்தின் போது முதலீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஆதனங்கள் இருந்தால் அவற்றை முதலீட்டு ஆதனங்களாக கணக்கீடு செய்தல் வேண்டும். அதிகார சபையின் காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரின் 2021 மார்ச் 11 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பாராளுமன்ற காணிக்குரிய 1167 ஏக்கர் அளவிலான மொத்தக் காணியில் 37 ஏக்கர் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அந்தக் காணிப் பகுதிகளை வெவ்வேறாக இனங்கண்டு பெறுமதி மதிப்பிடப்பட்டு முதலீட்டு ஆதனங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அந்த அபிவிருத்தி செயற்திட்டக் காணி இனங்காணக் கூடிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட விரிவான அட்டவணையொன்றும் காணப்படவில்லை.

(ஏ) 2019 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 164,567,351,800 ஆன அபிவிருத்தி செலவின கணக்குகள் 117 ஐ பரீட்சிப்பதற்கு அதற்குரிய பேரேட்டுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அம்மீதிகளை நிதிக்கூற்றுக்களுடனும் பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஐ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த பரீட்சை மீதியில் முன்னைய ஆண்டுகள் சீராக்கங்களாக குறிப்பிடப்பட்டிருந்த 1984 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 131,891,461 பெறுமதியான 19 வரவு மீதிக் கணக்குகளும், ரூபா 74,389,771,544 பெறுமதியான 3 செலவுக் கணக்குகள் மற்றும் பரீட்சை மீதியின் RETSUP என்ற பெயரில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 993,270,282 ஆன செலவுப் பெறுமதியொன்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அக்கணக்கு மீதியை உறுதிப்படுத்துவதற்காக அட்டவணைகளோ குறித்த சான்றுகள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் படாமைக்கான காரணமும் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இனங்காணப்பட்ட பணமாக 89 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 42,456,567 தொகை காசேட்டிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) அதிகார சபையின் பணிப்பாளராக சேவைபுரிந்து 2021 மார்ச் 19 ஆந் திகதி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 1.125 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆந் திகதி அமுலாகும் வரையில் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டின் பிரகாரம் அதிகாரசபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 598,326,141,944 ஆக பெறுமதியிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணி கட்டிடங்களின் பெறுமதி ரூபா 137,181,325,312 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) ரூபா 21,948,469,065 பெறுமதியான முடிவுறாத வேலைக் கணக்கில் ஏனைய நிறுவனங்களுக்காக பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 112,929,689 பெறுமதியான 3 செயற்திட்டங்கள் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முடிவுறாத வேலைகள் அந்த அளவினால் கூடுதலாகவும், முடிவுறாக வேலைகளுக்காக ரூபா 13,856,162 ஆன ஒதுக்கீடொன்று செய்தமையாலும் ரூபா 1,654,800 ஆன மறைப் பெறுமதியொன்று சீராக்கப்பட்டமையால் ரூபா 15,510,962 கூட்டுத்தொகையால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க்) அதிகாரசபையின் 2019 நிதிக்கூற்றுக்களில் வருமானத்தின் கீழ் மிதக்கும் வியாபாரச் சந்தை தொகுதி செயற்திட்டத்திற்காக கடந்த ஆண்டுகளின் போது கூடுதலாக வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,228,436 ஆன Key Money வருமானம் முன்னைய ஆண்டுகளுக்குரிய சீராக்கங்களுக்காக அச்செயற்திட்டங்களுக்குரிய மீளாய்வாண்டின் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் திரண்ட இலாபம் கூடுதலாகவும் மீளாய்வாண்டின் இலாபம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) பெறுமானத்தேய்வு சதவீதத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு காலம் முடிவடைந்து இரண்டு வருடங்களிலிருந்து 15 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்த காலங்கடந்துள்ள சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு தவறாக சீராக்கம் செய்தமையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 37,820,871 பதிவழிக்கப்பட்ட பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் பதிவழிக்கப்பட்ட பெறுமதி அந்த பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 7,188,215 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) அம்பாந்தோட்டை சிறிபோபுர நிர்வாகத் தொகுதிக்குரிய அண்மித்ததாக நிர்மாணிக்கப்பட்ட 22 உத்தியோகபூர்வ இல்லங்கள் 2019 ஆம் ஆண்டிற்குரிய நிறுவனத்திற்கு உரித்தல்லாத 13,964,707

ஆன நிலுவை வாடகை வருமானமொன்று அதிகாரசபையின் அம்பாந்தோட்டை பஸ் நிறுத்துமிட அபிவிருத்தி - வாடகை வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கீ) ரூபா 10,214,264 பெறுமதியான வங்கிக் கட்டணங்கள், காசோலைப் புத்தகக் கட்டணங்கள் மற்றும் காசு மாற்றங்கள் மீளாய்வாண்டில் காசேட்டில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செலவினம் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கு) 2017 ஆம் ஆண்டிலிருந்து செயலற்றுக் காணப்படும் 7 வங்கிக் கணக்குகளில் ஒரு கணக்கில் பேரேட்டின் பிரகாரம் ரூபா 400,000 ஆன செலவு மீதியொன்றும் காசேட்டின் பிரகாரம் ரூபா 1,040,982 ஆன செலவு மீதியுமாக இருப்பதால் அவ்வங்கிக் கணக்கிற்குரிய பேரேடு மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கிடையே ரூபா 640,982 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(கூ) பிற்போடப்பட்ட குத்தகை வாடகைப் பொறுப்பு மீதியில் 05 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 21,019,626 ஆன வரவு மீதியொன்று காண்பிக்கப்பட்டமையால் பிற்போடப்பட்ட குத்தகை வாடகைப் பொறுப்புக் கணக்கு அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கெ) ஏனைய அரச நிறுவனமொன்றுக்காக செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் செயற்திட்டமாக வெவ்வேறாக காண்பிப்பதற்கு பதிலாக ஒன்றுக்கொண்டு ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் ஏனைய நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக கிடைத்த பணம் நடைமுறைப்பொறுப்பின் கீழ் ரூபா 4,632,974,727 இனாலும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட செலவினம் நடைமுறைச் சொத்தின் கீழ் ரூபா 3,746,878,450 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கே) அரச மானிய பங்களிப்பினுள் செத்சிறிபாய நிர்வாக கட்டிடத்தின் கீழ் ரூபா 679,584,894 குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 357,395,200 ஆன பெறுமதியொன்றுக்காக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 7,147,904 ஆன காலக்கழிவு வருமானக் கூற்றில் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த பெறுமானத்தால் மீளாய்வாண்டின் இலாபம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கை) பாராளுமன்ற தொகுதி அமைந்துள்ள 1,167 ஏக்கர் 3 றூட் 86.9 பேர்ச் அளவிலான காணி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனமாக ரூபா 3,975,027,731 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் காணி பிரிவிலிருந்து கணக்காய்விற்கு வழங்கப்பட்ட கடிதம் மற்றும் அட்டவணையின் பிரகாரம் அக்காணியில் 214 ஏக்கர் 01 றூட் 16.8 பேர்ச் மற்றும் பெறுமதியாக ரூபா 5,881,638,725 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்கள், ரூபா 1,906,610,994 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(கொ) ரூபா 11,312,145 கிரயத்திலான பேலியகொட வெயர்ஹவுஸ் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 மோட்டார் வண்டிகள், 01 லான்ட் றோவர் வாகனம், 01 மோட்டார் சைக்கிள் மற்றும் மிட்சுபிசி ஜீப் வண்டி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2010 மற்றும் 2012 ஆம்

ஆண்டுகளில் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சந்தர்ப்பங்களின் அச்சொத்துக்களின் பெறுமதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஏனைய சொத்துக்கள், (தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்) அதிகாரசபைக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையின் அல்லது தொகுதியின் கணக்குகளில் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கோ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறவேண்டிய மீதிகள், செலுத்த வேண்டிய மீதிகள் வைப்புக்கள் போன்ற மொத்தம் ரூபா 9,239,140,805 ஆக காணப்பட்ட 13 கணக்கு மீதிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் மீதிகளுக்கிடையே ரூபா 3,455,570,097 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(கௌ) அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் கம்பனிகளுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பிரகாரம் மொத்தம் ரூபா 641,471,664 ஆன 08 நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய மீதி 426,919,316 தொகை மற்றும் அந்நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 190,000,000 தொகை நிறுவனங்களிடமிருந்து கிடைத்த உறுதிப்படுத்தலுடன் ஒப்பிடும் போது ரூபா 616,919,316 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ங்). அதிகார சபைக்கு சொந்தமான வாடிவீடு 2011 ஆம் ஆண்டின் போது பெஸ்ட் ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியாக நிறுவப்பட்டபோது கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் இனங்காணப்பட்டு முறையாக அக்கம்பனிக்கு கையளிக்கப்படாத காரணத்தினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் ரெஸ்ட் ஹவுஸ் கடன்பட்டோர் மீதியாக ரூபா 1,168,487,738 இற்கு ரூபா 1,053,794,027 ஆன செலவு மீதிகளும் ஈடுசெய்யப்பட்டு ரூபா 114,652,504 என குறிப்பிடப்பட்டிருந்தது.

(ங). அதிகாரசபையால் அரசாங்க நிறுவனங்களின் செயற்திட்டங்களுக்காக மதியுரை சேவை வழங்குவதற்காக பெறவேண்டிய முகாமைத்துவ ஆலோசனைக் கட்டணங்களான ரூபா 39,255,824 ஆன மீதிக்கு ரூபா 28,621,555 ஆன செலுத்த வேண்டிய மீதிகள் ஈடு செய்யப்பட்டு ரூபா 10,634,268 ஆன மீதியொன்று பெற வேண்டியதாக காண்பிக்கப்பட்ட துடன் அம்மீதியில் 35 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 19,589,853 ஆன இனங் காணப்பட்ட பெறவேண்டிய மீதியொன்றும் ரூபா 18,879,289 ஆன இனங்காணப்படாத செலுத்த வேண்டிய மீதியொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஙா) நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது ரூபா 9,112,177,812 பெறுமதியான 08 கணக்கு மீதிகளுக்காக விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஙி) ஒவ்வொரு செயற்திட்ட இலக்கத்தின் கீழ் காணப்படும் ஆதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டோ அல்லது கையேற்கப்பட்ட பெறுமதி மற்றும் கையேற்கப்பட்ட திகதி மற்றும் அத்திகதியின் பின்னர் செய்யப்பட்ட மேம்படுத்தல்கள் பதிவழித்தல்கள் மற்றும் அத்திகதியில் ஒவ்வொரு செயற்திட்ட இலக்கங்களின் கீழ் ஆதனங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்ட அடிப்படை குறித்த ஆண்டுகளின் அளவு மற்றும் அத்திகதியுடன் கூடிய அட்டவணையொன்றும் சொத்துக்கள் பதிவேடொன்றும்

சமர்ப்பிக்காமையினால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்ட வகை ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட மற்றும் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட காணி மற்றும் ஆதனங்கள் அனைத்தும் முதலீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனை உறுதிப்படுத்தும் இயலுமை மற்றும் குத்தகைக்கான உள்ள சொத்துக்களை மீண்டும் மதிப்பீடு செய்யும் தேவைப்பாடு மற்றும் நியாயமான பெறுமதி காண்பிக்கப்பட்டதாக திட்டவட்டமாக இனங்காணும் இயலுமையும் இல்லாத காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களின் பெறுமதி ரூபா 96,706,779,657 மில்லியனின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஙீ) பாராளுமன்ற காணிக்குரிய முதலீட்டு ஆதனங்களின் கீழ் காணப்பட்ட செத்சிறிபாய கட்டிடத்தின் பெறுமதியில் ரூபா 1,613,133,333 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மீளாய்வாண்டின் கீழ் மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறு மாற்றப்பட்ட பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஙு) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 10,634,268 பெறுமதியுடைய பெறவேண்டிய மதியுரைச் சேவை மற்றம் முகாமைத்துவ கட்டணங்களுக்கான தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஙூ) ரூபா 1,153,102,808 பெறுமதியான கடன்பட்டோர் / பெற வேண்டிய மீதிகள் 3-4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டதுடன் அம்மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அம்மீதிகளை அறவிட நிச்சயமற்றதாக இருந்தது.

1.2.3 அதிகாரசபையின் முழு துணைக் கம்பனியான லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியின் கணக்காய்வு அறிக்கையின் அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்ததுடன் வோட்டரஸ் எட்ஜ் கம்பனியின் நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனியின் கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட அபிப்பிரயாங்களுக்காக காரணமான விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) லங்கா றெஸ்ட் ஹவுஸ் கம்பனி

i. மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக ரூபா 10,289,128 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இக்கிரயத்திற்கு 2011 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்த சொத்துக்கள் மாத்திரமே உட்படுத்தப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் கம்பனிக்குச் சொந்தமாக காணப்பட்ட சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட சொத்துக்களின் உரித்து கம்பனிக்குச் சொந்தமாக மற்றும் வாடிவீடு உட்பட ஏனைய சொத்துக்கள் காணப்பட்டதாகவும் கம்பனியின் முகாமைத்துவம் ஏற்றுக் கொண்ட போதும் அசசொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 10,289,128 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக கம்பனியால் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு முழுமையாக பராமரிக்கப்படாமையால்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

ii. மீளாய்வாண்டில் மஹியங்கனை வாடிவீட்டில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பதற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 3,194,655 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகவும் செலுத்த வேண்டிய செலவினமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. கம்பனி மற்றும் தாய்க் கம்பனியுடன் காணப்படும் நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 57,637,911 மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கின் பிரகாரம் கம்பனிக்கு உரியதாக காணப்படும் நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 61,686,503 ஆக இருந்ததால் கணக்குகளுக்கிடையெ மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,054,592 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அக்கணக்குகளுக்கிடையே வேறுபாடுகளை இனங்கண்டு குறித்த மீதிகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதிநிலைமைக் கூற்று இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 60 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் திரவத் தன்மை வரிசையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

v இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 இன் 81 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகை கொள்வனவாளர்களின் செயற்பாட்டு குத்தகைக்காக கிடைக்கும் வருமானம் எளிய வழி அடிப்படையில் அல்லது ஏனைய முறையான அடிப்படையொன்றில் இனங்காண வேண்டும். எவ்வாறாயினும் 10 வருட காலங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 03 வாடிவீடுகளுக்காக மீண்டும் செலுத்தாத அடிப்படையில் 2019 யூலை 10 ஆந் திகதி அறவிடப்பட்டிருந்த ரூபா 2,787,000 ஆன தொகையொன்று முறையான அடிப்படையில் குத்தகைக் காலத்தின் பெயரில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபம் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

vi. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 745,519 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

vii. வாடிவீடுகளிலிருந்து பெறவெண்டிய வாடகை வருமானம் ரூபா 1,499,047 கூடுதலாக மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் இலாபம் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் அப்பெறுமானத்தால் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

viii. உள்ளூராட்சி மன்றத்திற்கு சொந்தமான கம்பனி மூலம் நிர்வகிக்கப்படுகின்ற வாடிவீடுகள் மூலம் உழைக்கப்பட்டிருந்த வருமானம் மீது அறவிடப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்காக மீண்டும்

செலுத்த வேண்டிய ரூபா 3,668,269 பெறுமதி சேர் வரி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ix. இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் நியதிகளுக்கு முரணாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது தீர்வையாகாத காலம் ஓராண்டை மிகைத்த ரூபா 39,498,342 ஆன நிலையான வைப்புக்கள் காசு மற்றும் காசுக்கு சமமான உருப்படிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகளின் கிரயத்திற்கான பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்ட காரணத்தினால் முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சலில் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 631,899 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

x. மீளாய்வாண்டில் அறவிட முடியாக் கடனாக ரூபா 4,152,161 தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதும் இந்த அறவிட முடியாக்கடன் கணக்கிடுவதற்குரிய அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

xi. மீளாய்வாண்டிற்குரிய வருமான வரி கணிப்பீட்டிற்குரிய விபரங்கள் மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

xii. வியாபார கடன்கொடுத்தோர் ரூபா 21,125,835 தொகை மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் ரூபா 7,154,819 ஆன மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கிடைக்காதிருந்ததுடன் இக்கடன் கொடுத்தோர் மீதிகளில் உள்ளமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) வோட்டர்ஸ் ஏட்ஜ் கம்பனி

i. இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யபட்டுள்ள போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்ப வேண்டியிருந்ததுடன் ஆக்கபூர்வமான பயன்பாட்டுக் காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். எனினும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 105.8 மில்லியனான சொத்துக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. கம்பனியால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் 23 ஏக்கர் 01 ரூட் 9.05 பேர்ச் அளவிலான காணியொன்று 99 வருடங்கள் குத்தகை அடிப்படையில் ரூபா 4,275,046,738 தொகைக்கும் மேலும் 1 ஏக்கர் 3 ரூட் 34.02 பேர்ச் அளவிலான காணி 20 ஆண்டுகளுக்கும் குத்தகை அடிப்படையில் ரூபா 80,000,000 தொகைக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இலங்கை நிதி அறிக்கையிடல் இலக்கம் 16 இன் 24 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் குத்தகை அடிப்படையின் பெயரில் காணியை பயன்படுத்தும் உரிமை மற்றும் அதற்குரிய நீண்டகால குத்தகை பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

iii. வரிசை அமைச்சுடன் ரூபா 642,533 ஆன தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

iv. இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் கம்பனியினால் வாகன நிறுத்துமிடம் மற்றும் வீதிகளுக்குரிய மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தை 5 ஆண்டுகள் முதல் 25 வரை நிதிக்கூற்றுக்களில் மாற்றியிருந்த போதிலும் அதற்காக பணிப்பாளர் சபை அனுமதியொன்று பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடு மாற்றங்கள் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கான தாக்கம் மீளாய்வாண்டின் போது வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

v. கம்பனியால் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 14.7 மில்லியன் செலவிட்டு ஒர்கிட் கன்றுகளை கொள்வனவு செய்து வர்த்தக ரீதியான நோக்கிற்காக கம்பனியின் வளவில் பயிரிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் பிரகாரம் இந்த உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

vi. இலங்கை காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் ரூபா 125,442,300 தொகை செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த துறைமுக சிற்றுண்டிச்சாலை செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி முதல் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை தாமத வட்டியுடன் ரூபா 130,881,116 தொகை கம்பனியிடமிருந்து கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிலும் அக்கம்பனியால் இப்பொறுப்புக்காக நிதிக்கூற்றக்களில் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் (ஆ) குறிப்பின் கீழ் வெளிப்படுத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலாப எல்லையாக முறையே ரூபா 26,429,883 தொகை மற்றும் ரூபா 22,024,486 தொகை கூடுதலாகவும் வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 136,881,116 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

vii. ஏசியா பசுபிக் கொல்ப் கோஸ் கம்பனியிடமிருந்து 2009 ஆம் ஆண்டின் போது வோட்டர்ஸ் எட்ஜ் ஹொட்டெலை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையேற்கும் போது ரூபா 262,284,393 என அதில் காணப்பட்ட அலுவலக உபகரணங்கள், சமையலறை உபகரணங்கள் உட்பட நடைமுறைச் சொத்துக்களும் கையேற்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியால் அவ்வாறு கையேற்கப்பட்ட சொத்துக்களை பொளியிருப்பு பதிவிற்கு உட்படுத்துவதற்கும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

viii. 06 மாதங்களுக்குள் சிறுவர் பூங்கா ஒன்றை நிர்மாணிப்பதற்காக கம்பனி 2017 திசெம்பர் 21 ஆந் திகதி வெளிநாட்டு தனியார் கம்பனியொன்றுடன் அபிவிருத்தி உடன்படிக்கைக்கு வந்திருந்ததுடன் அபிவிருத்தி உடன்படிக்கையின் 4.1 பிரிவின் பிரகாரம் அந்த உடன்படிக்கையின் 5.1.1 பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ காலப்பகுதியும் அபிவிருத்தியாளரால் ரூபா 600,000 தொகையை மாதாந்தம் கம்பனிக்கு செலுத்த வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் எந்தவொரு தொகையும் கொடுப்பனவு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அபிவிருத்தியாளரிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 108.8 மில்லியன் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ix. ரூபா 8,177 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடன் கூடிய 182 அறைகளுடனான ஹோட்டலொன்று 185 வீட்டு அலகுகள் மற்றும் ஏனைய பொது வசதிகளுடன் கூடிய 18 மாடிகளுடனான கட்டிடத்

தொகுதியொன்றின் நிர்மாணம் 2014 ஆம் ஆண்டின் போது வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனி அமைந்துள்ள காணியில் ஆரம்பிக்கப்பட்டு 2015 சனவரி மாதம் முதல் அதன் வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீண்டும் ஆரம்பிக்காததால் குறித்த ஒப்பந்தக் கம்பனியால் கொழும்பு வர்த்த நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. அதன் மூலம் செய்யப்பட்ட வேலைக்காக கொடுப்பனவு செய்யப்படாத பட்டியல் பெறுமதி ரூபா 179,9 37,010 மற்றும் அதற்குரிய சட்ட வட்டியாகவும் ரூபா 180,600,000 ஆன வழக்கு கட்டணத்தை கோரியிருந்ததுடன் அது தொடர்பாக ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

x. மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனிக்கு 4 அரச நிறுவனங்களிடமிருந்து ரூபா 16,868,794 தொகை 02 ஆண்டுகளுக்கும் 6 ஆண்டு காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் பெற வேண்டிய கடன் மீதிகளாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த அரசாங்க நிறுவனங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் இவ்வாறான கடன்தொகையொன்று கம்பனிக்கு செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனி

---

i. மீளாய்வாண்டின் இறுதியின் போது நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 49,657,265 ஆக இருந்தது. எனினும் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் கம்பனியால் அச்சொத்துக்களை மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவும் இல்லை. ஆதனால் கணக்காய்வின் போது அச்சொத்துக்களின் பெறுமதி மற்றும் நிலைத்திரு தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் இருந்தது.

ii. கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விரிவான பட்டோலை மற்றும் பேரேட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே ரூபா 7,225,918 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அந்த வேறுபாட்டை வெளிப்படுத்துவதற்கு எந்தவொரு சீராக்கமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. மேலே விபரிக்கப்பட்டுள்ள பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் விரிவான வருமானக் கூற்றில் உரிமை மாற்றங்கள் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான உருப்படிகள் மாற்றுமுறைமைகள் மூலம் உறுதிப்படுத்துவதற்கோ அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்படும் பெறுமதி அல்லது உருப்படிகளின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதி அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கம் ஒன்று செய்வதற்கு அவசியம் என்பது தொடர்பாக நிச்சயிக்க முடியாதிருந்தது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்கொன்றாகும்.

தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்தின் அடிப்படையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கையொன்றை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் அபிப்பிராயத்தை மறுப்பதற்காக அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடரர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாதிருந்தது.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் அக்கணக்கு அறிக்கைகள் அதிகாரசபை வைத்துள்ளதா என்பதை தீர்மானிக்க முடியாதிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்த அறிக்கையின் அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை பந்தியில் 1.2 (அ), முதல் (கா)

பந்திகளில் வரை குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தவிர ஏனைய பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் கீழே காட்டப்பட்ட குறிப்பிடுவதற்கு கூட வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புட்டுள்ளதாக

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு		கணக்காய்வு அவதானிப்பு
(அ)	1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் II ஆம் பகுதியின் 8 ஆம் பந்தியின் (ஐ) பிரிவு	அதிகார சபையால் நகர காணி பயன்பாட்டு கொள்கை தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	திறைசேரி சுற்றறிக்கை	
(i)	1978 இன் திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகார சபைக்குரிய மற்றும் அதிகார சபையின் பொறுப்பில் காணப்படும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாகவும் பொது 287 படிவத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.
(ii)	2011 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	கணனி இயந்திரங்கள் கொள்வனவு வைத்திருத்தல், பராமரித்தல் திருத்த வேலைகள் போன்ற மற்றும் கைதவிர்த்தல் போன்ற விபரங்கள் உள்ளடக்கக் கூடிய வகையில் கணனி இயந்திரங்கள் தொடர்பாகவும் கணினி மென்பொருட்கள் தொடர்பாகவும் தொடர்பாகவும் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.
(இ)	2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய	2019-2021 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தில்

	01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(2) ஆம் பந்தி	உள்ளடக்கப்பட்ட மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(I)	8.2.3 ஆம் பிரிவு	துணைக்கம்பனியாக அதிகார சபையினால் 2014 நவம்பர் 21 அந் திகதி தாபிக்கப்பட்டிருந்த நகர முதலீட்டு மற்றும் ஆதனங்கள் வியாபார தனியார் கம்பனி, நகர முதலீட்டு ஹொட்டல் அபிவிருத்திக் கம்பனி, ஓஷர்ட் (Orchard) நகர வீடமைப்பு அபிவிருத்திக் கம்பனி மற்றும் வோட்டர்ஸ் ஏட்ஜ் ஹொட்டல் அபிவிருத்திக் கம்பனி என்பவற்றை தாபிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(II)	8.3.9 ஆம் பிரிவு	பொது வியாபாரங்களுக்கான சொத்துக்களை வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய நிறுவனங்களுக்கோ வழங்க முடியாத போதிலும் அதற்கு முரணாக அதிகார சபையால் ரூபா 2,313,550 தொகை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கெமறா உபகரணங்கள் 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சின் ஊடக பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்ததாக தென்பட்டது. பின்னர் 2020.06.29 ஆந் திகதி முதல் பிரதம ஊடகப் பிரீவற்கு அச்சொத்துக்களை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.
(III)	9.4 ஆம் பிரிவு	அமைச்சரவை அங்கீகாரமின்றி பொது முயற்சிகளில் உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கோ அல்லது வேறு நிறுவங்களுக்கோ விடுவிக்க முடியாத போதிலும் அதிகார சபையின் துணைக் கம்பனியொன்றான நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி கம்பனியின் 82 உத்தியோகத்தர்களுக்கும் மீளாய்வாண்டின் போது ரூபா 40,946,517 கொடுப்பனவு செய்து அதிகார சபையினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.
(ஈ)	2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் V ஆம் அட்டவணையின் 7 ஆம் பந்தி	அதிகார சபையால் பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மாநகர மற்றும் கால்வாய்களை அண்மித்து மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் 1,868 அத்துமீறிய நிர்மாணங்கள் மற்றும் அனுமதியற்ற மாற்றங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதற்குரியதாக இவ்வர்த்தமானி பத்திரத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அத்துமீறிய நிர்மாணங்கள் அவற்றை சரிப்படுத்தக் கூடியதாயின் மேவுகை

		அங்கீகாரத்திற்காக கட்டணமொன்றும் பயன்பாட்டினை மாற்றுவதற்காக கட்டணமொன்றும் அதிகார சபையினால் அறவிட்டு அந்த நிர்மாணத்தை சட்டரீதியாக்குவதற்கோ அல்லது அத்துமீறிய நிர்மாணத்தை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(உ)	2010 பெப்ரவரி 3 ஆந் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்க சனாதிபதி சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி	அதிகார சபையால் நகர அபிவிருத்திக்காக வழங்கப்பட்டிருந்த காணி அல்லது கையேற்கப்பட்டு பயன்படுத்தாமல் தனியார் நிறுவனங்களுக்காக நீண்டகாலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் பெறுமதியான காணி ஆடம்பர மாடி வீடுகள் நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் வருட கணக்காக முதல் உரிமையாளருக்கு மீள வழங்கப்பட்டிருந்தது.
(ஊ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 113(3)	4 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 32,068,113 பெறுமதியான முன்னைய ஆண்டுகளுக்குரிய கடன்பட்டோர் மீதி நிதியமைச்சின் அங்கீகாரம் இல்லாமல் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த துடன் வீதிகளில் ரூபா 17,872,956 இற்காக குறைந்தது பணிப்பாளர் சபை அங்கீகாரமோ பெற்றுக் கொள்ளாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகம் அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர அதிகாரசபையின் வளங்கள், சிக்கனமாகவும் செயற்திறனாகவும் காலவரையறை களினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

(அ) அதிகார சபையால் அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்குரிய (2019-2021) பெறுகை செயற்பாடுகள் உள்ளடக்கப்படும் வகையில் பிரதான பெறுகை திட்டமொன்றும் மீளாய்வாண்டிற்கான விரிவான பெறுகைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையால் பெறுகை செயற்பாட்டின் போது கீழே காட்டப்பட்டுள்ள பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்ட நியமனக் கடிதங்கள் கோவைகளில் உள்ளடக்கப்படாமை,

- காணி சிக்கல்களை சீராக்குதல், திட்டவட்டமான திட்டங்களை தயாரித்தல் போன்ற பிரதான விடயங்கள் பூர்த்தி செய்யப்படாமல் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமை மற்றும் காணி சீராக்கம் செய்யப்படாமல் கிடைத்த ஒப்பந்தங்களுக்காக முற்பணம் செலுத்தியிருந்தமை
- பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றல் பிணை பெற்றுக் கொண்டிருந்தமை
- பிணை முறிகளுக்குரிய காலத்தை நீடித்தல் உரிய காலத்தில் மேற்கொள்ளாமை.
- விலைமதிப்பிட்டின் போது உருப்படிகளின் விலை ஒப்பீடு செய்யப்பட்டு விரிவான பதிவேட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் உள்ளடக்கப் படாதிருந்ததுடன் மொத்த விலைக்காக மாத்திரம் சீராக்கம் செய்யப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.
- மதிப்பீடு செயற்பாட்டின் போதும் புள்ளிகள் வழங்கும் போதும் விலைக்குறிகாட்டி மிகவும் குறைந்த நிறையளித்தலும் ஏனைய குறிகாட்டிகளுக்காக கூடிய நிறையளித்தலும் இடம்பெற்றிருந்தது. அதன் காரணமாக மதிப்பீட்டினை விட கருத்தில் கொள்ளக் கூடிய சதவீதத்தினால் விலை குறைந்த கேள்விகள் நிராகரிக்கப்பட்டிருந்தமை.
- தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையில் மதிப்பீட்டு நடைமுறை மற்றும் தீர்மானம் தொடர்பாக பதிவுகள் உள்ளடக்கப்படாதிருந்தமை
- பொறியியல் சார் மதிப்பீட்டினை விட கூடிய விலைக்கு வழங்குவதற்கு மதிப்பீட்டு அறிக்கை பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மிகைத்தல்- தொடர்பாகவும் மற்றும் பொறியியலாளர் மதிப்பீட தொடர்பாகவும் தேவையான விளக்கங்கள் உட்படுத்தமால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.-
- பகிரங்க விலைகோராமல் காணி குத்தகைக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது

(இ) ரூபா 190 மில்லியன் மதிப்பீட்டுத் தொகைக்கு ERP (Enterprises Resouce Planning) கணனி முறைமையொன்று ஏற்படுத்துவதற்கு மதியுரை சேவை வழங்குவதற்காக ரூபா 3,875,995 கூட்டுத்தொகையான மதியுரைக் கட்டணம் செலுத்தப்பட்டு மதியுரைக் கம்பனி சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் இந்த முறையை நிறுவுவது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தற்போது காணப்படும் முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்காக ரூபா 8,300,000 தொகை மற்றும் 2022 யூலை 22 ஆந் திகதி வரை 02 பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கைக்காக 2 வருடங்களுக்காக ரூபா 2,160,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று, கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு, கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் இணக்க அறிக்கை, வருடாந்த பெறுமானத்தேய்வு கணிப்பீடு VAT Schedules (உப அலுவலகங்கள் உட்பட) முதலீட்டு ஆதனங்கள் பதிவேடொன்று மதிப்பிழந்த காசோலைகள், உப அட்டவணை வங்கி இணக்கக்கூற்று போன்ற அறிக்கைகள் கணக்கீட்டு முறைமையின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாததாக அவதானிக்கப்பட்டது.

(உ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்பக் கிரயத்தில் ஆகக்குறைந்தது 10% ஒப்பந்த விலகலுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒத்துழைப்புடன் பெறுகைக் குழுவிற்கு தீர்மானிக்க கூடியதாக இருந்ததுடன் 10 சதவீதத்திற்கு மேற்பட்டால் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.13.4 இன் பிரகாரம் நிறுவன தலைவரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் கணக்கீட்டு முறைமையில் மேலதிக வேலைகளுக்காக குறிப்பிட்ட அளவினை விட ரூபா 4,170,000 அதாவது நூற்றுக்கு 60 சதவீதம் முகாமைத்துவ அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) முகாமைத்துவ கணக்கீட்டு முறைமையை தயாரிப்பதற்கு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தியடைந்ததன் பின்னர் முதலாவது ஆண்டின் போது பராமரிப்பு மற்றும் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவதுடன் இரண்டாம் ஆண்டிலிருந்து மொத்தக் கிரயத்தில் 10 சதவீதம் பராமரிப்பு மற்றும் சேவைகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. வேலை பூர்த்தி அறிக்கை சான்றிதழ் 2021 யூலை 28 ஆந் திகதி அதிகார சபையால் வழங்கப்பட்டிருந்ததுடன் பராமரிப்பு மற்றும் சேவை வழங்குவதற்காக பணத்தை அறவிடாமல் 2022 யூலை 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்த உடன்படிக்கைக்கு முரணாக 2020 யூலை 23 ஆந் திகதி முதல் 2022 யூலை 22 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக பராமரிபப்பு மற்றும் சேவைகள் வழங்குவதற்காக வருடாந்தம் ரூபா 1,080,000 என கொடுப்பனவு செய்வதற்கு 02 சேவை உடன்படிக்கைகள் அதிகார சபைக்குரிய நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையால் அக்காலப்பகுதிக்குள் ரூபா ரூபா 2,160,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) விலைவிபரங்கள் கோரப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக சட்டரீதியற்ற வகையில் குத்தகை உடன்படிக்கையாளரால் மேற்கொள்ளப்படுகின்ற உப குத்தகை மற்றும் நிரந்தர கடைகளுக்காக மறைமுகமான வகையில் அதிகார சபையினால் அங்கீகாரம் வழங்குதல் இத்திகதி வரையும் இடம்பெற்றிருந்ததால் காணிகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக சட்டரீதியான சிக்கல்கள் உருவாகியிருந்தன. அவ்வாறே குத்தகை நிபந்தனைகள் வழங்கப்பட்டதன் பின்னர் மாற்றுவதால் இந்த காணி குத்தகைக்கு வழங்கும் போது கூடிய விலை விபரங்களை பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் அதிகாரசபையினால் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகார சபைக்கு சொந்தமான டீ.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள காணியில் விலைகோராமல் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முன்னர் 2007 ஆம் ஆண்டிலிருந்து தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 பெப்ரவரி 16 ஆந் திகதி 50 ஆண்டுகளுக்கு கம்பனி உரித்தாளருக்கு வரும் வகையில் கம்பனியொன்றுக்கு ஆரம்ப கம்பனியின் உரிமையாளரின் இன்னுமொரு கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் முறையான அங்கீகாரமின்றி அரசின் மதிப்பீட்டு பெறுமதியை விட ரூபா 330 மில்லியன்

குறைத்து இந்தக் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு இணங்கிய காரணத்தினால் இந்த காணி குத்தகையின் போது ரூபா 330 மில்லியனான நட்டமொன்றும் நீண்டகால வருமானமொன்றும் இழக்கப்பட்டதால் அதிகார சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இந்த நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கைகளும் இதுவரை எடுக்காதிருந்ததுடன் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 இன் இறுதி பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட வாடிவீடு நிர்மாணத்திற்காக ரூபா 77,488,987 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்ட காரணத்தினால் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. அதற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டில் கழிவுமேடு சரிவினால் விபத்திற்கு உட்பட்ட மீதொட்டமுல்ல மீள் கட்டியெழுப்புதல் செயற்திட்டத்தின் கீழ் நகர பூங்காவொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட அந்த கழிவுப்பொருள் மேடு (trail compaction) இற்காக 30 மீற்றர் முதல் 12 மீற்றர் வரை மட்டுப்படுத்தி பள்ளமாக கழுவிச் செல்லும் வகையில் பசுமை வாயு நிலையமொன்றை தாபிக்கும் ஒப்பந்தம் ரூபா 269.5 மில்லியனுக்கு தனியார் நிறுவனமொன்றிற்கு 2020 யூன் 09 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக ரூபா 432,946,468 தொகை அதிகார சபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 நவம்பர் 25 ஆந் திகதி வேலை முடிவடைந்து கையளிப்புச் சான்றிதழும் வழங்கப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட பிரகாரம் பூங்கா நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மட்டப்படுத்தப்பட்ட கழிவுப் பொருள் அமைந்துள்ள இடம் தற்போது வரை எந்தவித முகாமைத்துவம் இன்றியும் மேற்பார்வை இன்றியும் காணப்படுவதுடன் இந்த இடத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள வெளியேற்றும் கழிவுநீர் கால்வாய்களுக்கும் நிலக்கீழ் நீர் சேர்வதனை தடுப்பதற்கும் தொடர்ச்சியான வாயுநீக்க நிலையம் ஊடாக வாயு சேகரிக்கும் முறைமையும் புற்கள் வளர்ந்து கைவிடப்பட்டுள்ளதாக 2021 திசெம்பர் 23 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) அம்பாந்தோட்டை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாகம ருஹுனுபர --- சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் நிர்மாணத்திற்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை மூலதன செலவினமாக ரூபா 3,830,874,596 தொகை அரசாங்க நிதியங்களிலிருந்தும் வெளிநாட்டுக் கடனின் கீழும் 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 851,200,000 (6.4 மில்லியன் அமெரிக்க டொலர்) செலவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக வருமான செலவினமாக இதை நடாத்திச் செல்வதற்காக 2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரை மாத்திரம் ரூபா 75,889,769 செலவிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டத்திலிருந்து 2017 முதல் 2019 வரையும் வருமானமாக ரூபா 15,896,360 மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது.

(ஊ) நகர புனர்ஜீவன செயற்திட்டத்திற்குரிய 21 உப செயற்திட்டங்களின் கீழ் குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களுக்காக ரூபா 48,090 மில்லியன் செலவில் 13,580 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை கையளிக்கப்பட்டிருந்த போதும் 12,875 வீடுகளுக்காக கூட்டுஆதன முகாமைத்துவ அதிகார சபை சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளாமை காரணமாக அவ் வீடுகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் வீட்டு உரிமையாளர்களுக்கு கிடைக்காமையால் பராமரிப்பதற்காக அதிகார சபை பாரிய கிரயம் ஒன்றை ஏற்க நேர்ந்திருந்தது.

(எ) கொம்பெனிதெரு மீள் அபிவிருத்தி திட்டத்திற்குரிய காணியில் குடியிருந்த குடும்பங்களுக்காக அடுக்குமாடி வீடுகள் போன்றவைகளை நிர்மாணிக்கும் செயற்பாடு 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் காணி அபிவிருத்தியாளர்களால் நிர்மான நடவடிக்கைகளை ஒப்படைத்திருந்த ஒப்பந்தக்காரர்களின் தாமதத்தின் காரணமாக குறித்த செயற்திட்டம் தாமதமாகி இருந்தது. அதன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் குறித்த நிர்மாண செயற்பாடுகளின் மதியுரை நிறுவனத்திற்கு ரூபா 5,496,000 தொகை மேலதிக மதியுரை கட்டணமாகவும் காணியின் உரிமையாளர்கள், குடியிருப்பாளர்களுக்காக மாடி வீடுகள் அலகு வழங்கும் வரை மாதாந்த கூலியாக ரூபா 61,198,000 என மொத்தம் ரூபா 63,694,000 தொகை அதிகார சபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் காணி அபிவிருத்தி கம்பனியால் அப்பணம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 608 வீட்டு அலகுகளிலும் கூடிய ஓவல் விட வீடமைப்பு செயற்திட்டம் மற்றும் அங்கொட lake cresent வீடமைப்பு செயற்திட்டத்தின் வீட்டுப் பெறுனர்களால் முறையே ரூபா 4,756.32 மில்லியனும் ரூபா 816.3 மில்லியனும் நகர அபிவிருத்தி சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் வீட்டு உரிமையாளர்களுக்கு சட்டரீதியான உரித்தை கையளித்தல் கணக்காய்வு திகதி வரையும் இடம்பெற்றிருக்கவில்லை. இச்செயற்திட்டத்திற்காக கூட்டு ஆதன அதிகார சபையால் சான்றிதழ் இதுவரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையில் அமைந்துள்ள 294/800 வீத வரி இலக்கம் மற்றும் 953/1 ஆம் இடங்களில் மூன்று ஏக்கர் 02 ரூட் 03 பேர்ச் அளவிலான 03 காணித் துண்டுகள் நிதி நிர்வாக நிறுவனங்கள் உட்பட நகர அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2013 ஒக்டோபர் 9 திகதி அதிகார சபையால் கையேற்கப்பட்டிருந்தது. இச் செயட்திட்டத்தின் கீழ் இவ்வாறு கையேற்கப்பட்டிருந்த 02 காணித் துண்டுகள் முறையே 2015 பெப்ரவரி 2 ஆம் திகதி மற்றும் 2016 நவம்பர் 18 ஆம் திகதி ஆரம்ப உரிமையாளருக்கு மீண்டும் பூர்த்தி செய்யப்படும் வரையிலும் எஞ்சிய பகுதியான 01 ரூட் 12 பேர்ச் அளவிலான காணி கணக்காய்வு திகதி வரையிலும் எந்த அபிவிருத்தி செயல்பாட்டிற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இச் செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட செலவினமாக ரூபா 213.217.966 தொகை பூர்த்தி செய்யாத வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2013 ஆம் ஆண்டின் போது காணி கையேற்கும் தேவைப்பாடு இனங் காணப்படாமல் மேற்படி காணி கையளிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஒ) அதிகார சபையால் நகர அபிவிருத்திக்காக வழங்கப்படுகின்ற காணியின் விசாலத்தின் அளவு கையளிக்கப்பட்ட நோக்கம் குறிப்பிடாமல் ஏனைய செயற்பாடுகளுக்காக

பயன்படுத்தாமல் அல்லது வருடக்கணக்கின் பின்னர் மீள அளிக்கப்பட்டிருந்தன விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) மில்லவ ஆயிரம் ஏக்கர் தோட்டம்

(ii) புறக்கோட்டை ஒல்கொட் மாவத்தையின் 125 பேர்ச் காணி

(iii) காலி தடல்ல காணி

(iv) ராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர வீதியில் அமைந்துள்ள 03 ஏக்கர் மற்றும் 2 ரூட் 3 பேர்ஸ் காணி

(ஓ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிலையான செயற்பாடான நாட்டின் அபிவிருத்தி பிரதேசங்களாக பிரசுரிக்கப்படும் பிரதேசம் ஒன்றுக்காக அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்காக் (44 அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கும் செயல்திட்டம்) அமைச்சின் நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டு 50 % பௌதீக செயலாற்ற மட்டத்தை பெற்றிருந்த போதும் 2019 ஆம் ஆண்டு செயற்படும் நிலைமை இருந்ததமை செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் சான்றுகள் காணப்படவில்லை.

(ஔ) கொழும்பு நகரின் குடிசை வீட்டு வாசிகளுக்கு 68,000 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய திட்டத்திற்கு நிதியை் வழங்கும் போது நோக்கத்தில் அதிகார சபையால் 2010 ஒக்டோபர் மாதத்தின் போது ரூபா 10 மில்லியன் பெறுமதியான 5 ஆண்டுகளில் விடுவிக்கப்பட வேண்டிய கடன் வழங்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு அக்கடன்களை விடுவிப்பதற்காக இலங்கை வங்கியிடம் இருந்து ரூபா 11 பில்லியன் கடன் வசதி ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக 2017 ஆம் ஆண்டின் போது திறைசேரிக்கு ரூபா 8.5 மில்லியன் வழங்கப்பட்டு இருந்தது. எனினும் கடன் பிணை வழங்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நகரத்தில் உள்ள குடிசைவாசிகளின் 142 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்வதற்கும் வியாபாரத் திட்டத்தை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உத்தேச 68,000 வீடமைப்பு அலகுகளில் 12,657 வீட்டுத் தொகுதிகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு அதில் 8,407 வீட்டுத் தொகுதிகளுக்கு மாத்திரம் 2019 திசெம்பர் 31ம் தேதி வரை மக்கள் உரித்துக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(க) அதிகார சபைக்குரிய பம்பலபிட்டிய புகையிரத நிலைய வீதியில் 01 ஏக்கர் 23.1 பேர்ச் அளவிலான காணியில் அடுக்கு மாடிவீடு மற்றும் கடைகளை நிர்மாணிப்பதற்காக 1993 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபையால் ரூபா 92 மில்லியன் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ரூபா 120 மில்லியனும் செலவிட்டிருந்தது. இந்த ஆதனங்களை முகாமத்துவம் செய்வதற்காக வரையறுக்கப்பட்ட Ocean view development தனியார் கம்பனி பேரில் நகரவிருத்தி அதிகார சபையும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து பங்குடமை வியாபாரம் ஒன்றை ஆரம்பித்திருந்தது. அதிகார சபையால் இக்காணி 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு ஆண்டுக்கு ரூபா 100 ஆன பெயரளவு பெறமதிக்கு வரையறுக்கப்பட்ட Ocean view development தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் கம்பனியால் கட்டிடங்களை வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதும் 1993 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை அதிகார சபைக்கு எவ்வித பங்கிலாபமும் கிடைத்திருக்கவில்லை. இதனால் அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்த முழுத்தொகைக்கும் எவ்வித நலனும் கிடைக்காததுடன் குறித்த கம்பனியால் நலக்கள் உடைமை கொள்ளப்பட்டிருந்தன.

(கா) ரூபா 1,306,655 பெறுமதியான 15 செயற்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டின் தொடக்கத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரை கைவிடப்பட்டிருந்ததுடன் முடிவுறாத வேலைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(கி) வரிசை அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட மதியுரை கட்டணங்கள் வருமானத்தை பயன்படுத்தி அதிகார சபையால் செயறதிட்டங்கள் தொடர்பான பிரச்சாரங்களுக்காக 2019 ஆம் ஆண்டு 13 பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்காக ரூபா 4,052,134 தொகையான செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(கீ) 2017 ஆம் ஆண்டின் போது 99 ஆம் ஆண்டு குத்தகை முறையின் கீழ் அபிவிருத்திக்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு மருதானை மற்றும் ராஜகிரியவில் அமைந்துள்ள 03 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பு விசாலமான இரண்டு காணித் துண்டுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அக்காணி இதுவரை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(கெ) பொது முயற்சிகள் தொடர்பான நல்லாட்சிக்கான வழிகாட்டல் (PED-12) இன் 9:3:1 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் 2006 செப்டம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2006 ஏப்ரல் 25 ஆம் திகதி 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகார சபைக்காக செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட பதவி உயர்வு வழங்கும் நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் பதவி உயர்வு புதிய சம்பள கட்டமைப்பில் நிறுவுவதற்கும் பின்னர் அதை செயற்படுத்துவதற்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு வழங்கும் நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு அதற்காக அமைச்சினும் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பரிந்துரைகள் மற்றும் தேசிய சம்பள மற்றும் பதவியணியின் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(கே) அதிகாரசபையில் வெற்றிடமாக காணப்படும் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன், அதிகார சபையின் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக மீளமைக்கப்படாததால் அதிகார சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின் பிரகாரம் மாத்திரம் நிறுவனத்தின் பதவியணியினருக்காக பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் பேரில் புதிய பணிப்பாளர் பதவிகளுக்கு 10 உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(கை) 2008 ஜூன் 26 ஆம் திகதியில் 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆம் திகதிய பீஈ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தனியார் வாகனங்களை தமது உத்தியோகபூர்வ வாகனமொன்றாக பயன்படுத்கி படிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் அதிகார சபையின் சாரதிகளை பயன்படுத்த கூடாத போதும் 20 உத்தியோகத்தர்கள் அதிகார சபையின் சாரதிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அச்சாரதிகளுக்காக மேலதிக நேரம் கொடுப்பனவாக மாத்திரம் முன்னைய ஆண்டின் போது ரூபா 3,679,290 உம் மீளாய்வாண்டின் போது 8,261,590 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(கொ) 2 உத்தியோகத்தர்களின் முறைகேடான செயற்பாடுகள் தொடர்பாக குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டு அது தொடர்பான முறையான ஒழுக்காற்று பரிசோதனைகளை நடாத்தி அந்த முறைப்பாடுகளிலிருந்து ஒரு தரப்பினர் குற்றவாளியாக இருந்ததாகவும், அந்தக் குற்றச்சாட்டுகள் தாபன நிதிக் கோவையின் இரண்டாம் தொகுதியின் கீழ் எடுக்கப்படும் கடுமையான முறைகேடாக இருப்பதால் சேவையிலிருந்து நீக்கப்பட வேண்டிய போதும் 60 வயதை அன்மித்ததாக கருதி அவருக்கு 2017 ஆம் ஆண்டிலிருந்து கட்டாய ஓய்வூதியத்தில் அனுப்பப்பட்டிருந்தது. அவ்வாறு முறையான ஒழுக்காற்று பரிசோதனை ஒன்றை நடாத்தி குற்றவாளிகளான அந்த இரண்டு பேருக்கும் சரியான நடைமுறை ஒன்றை பின்பற்றாமல் 2019/2020 ஆம் ஆண்டுகளில் மீண்டும் சேவையில் அமர்ந்தப்பட்டிருந்தனர்.

(கோ) அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் கீழ் அங்கீகரிக்கப்படாத 64 பதவிகளுக்காக பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோராமல் அதிகார சபையின் கீழ் உள்ள உப கம்பனி ஊடாக ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு அதன் பின்னர் அந்த உத்தியோகத்தர்கள் அதிகார சபையின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2018 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 43,520,826 தொகை மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 46,345,540 ஆக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு சம்பளம் மீள் நிரப்பல் அடிப்படையில் நகரம், முதலீட்டு மற்றும் அபிவிருத்தி கம்பனிக்கு 08 உத்தியோகத்தர்கள் விடுவிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(கௌ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் 1997 ஜனவரி 24 ஆம் திகதி பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 116 ஆம் இலக்கம் மற்றும் 2003 ஜூன் 02 ஆம் திகதி PED/12 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 பந்தியின் பிரகாரம் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கோ அல்லது ஏனைய அரச நிறுவனங்களின் சேவைகளுக்காக விடுவிக்கப்படக் கூடாதென குறிப்பிடப்பட்டிருக்கையில் அதிகார சபையின் 19 பேர் சம்பள மீள் நிரப்பு அடிப்படையில் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(ங) பொது முயற்சிகள் திணைக்களத்தின் PED/58 ஆம் இலக்க மற்றும் 2011 ஏப்ரல் 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்த சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ கூட்டங்களுக்கு சமூகமளிக்கும் போது படிகள் பெற்றுக் கொள்ள முடியாத போதும் முன்னால் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர்கள் சுற்றறிக்கைக்கு முரணாக 2015 மார்ச் மாதம் முதல் 2020 ஒக்தோபர் வரை ரூபா 3,202,750 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததன் பின்னரும் தொடர்ந்தும் கொடுப்பனவு இடை நிறுத்தப்பட்டிருந்த போதும் முன்னர் செலுத்தப்பட்ட படிகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டப்ளியு.பீ.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி



ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை குறித்து தலைவரின் கருத்து

நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1.2.1 **தொகுதி**

(අ)

(i) அவதானிப்பு

மேற்படி கூற்றுடன் இணங்கப்படமாட்டாது.

கணக்கிணக்க கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு செலவு வைத்தல் மீதிகளின் பெறுமதி ரூபா. 29,374,815 அல்ல அது 29,314,686 ஆகும். குறித்த இரண்டு செலவு மீதிகளில், அதிகாரசபை மற்றும் நிர்வகிக்கப்படும் கம்பெனிகளுக்கிடையில் ஏற்பட்ட பின்வரும் கம்பெனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் பொருட்டு மேற்கொண்ட சீராக்கல்கள் குறிப்பிடப்படுகின்றன.

வோடர்ஸ் எஜ் கம்பெனி மற்றும் அதிகார சபை 2019 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக்கொண்ட 99 மற்றும் 20 ஆண்டுகளிலான குத்தகை உடன்படிக்கைகளுக்கு ஏற்புடையதாக, மீளாய்விற்கான ஆண்டில் குத்தகை வருமானத்திற்கான சீராக்கல் பெறுமதி ரூபா.29,036,877.12 ஆவதுடன், அதற்கு ஏற்புடையதாக அதிகார சபையால் பராமரிக்கப்படும் கடிதக்கோவை கணக்காய்வுப் பிரிவிடம் 2021.12.06 ஆம் திகதியில் வழங்கப்பட்டுள்ளது.
அவ்வாறு கணக்காய்வு ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எஞ்சிய ரூபா. 277,809 ஆன பெறுமதியானது, ஒனாலி கம்பெனியால் நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி கம்பெனியிடம் மீளாய்விற்கான ஆண்டில் வழங்கியுள்ள பங்கிலாபம் ஆவதுடன், குறித்த கம்பெனியின் கணக்குகளை கணக்காய்வு செய்கையில் அதற்கு தேவையான உபயோக அட்டவணைகளும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளது.

(ii) அவதானிப்பு

லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பெனியிடம் செலுத்தப்பட வேண்டிய ரூபா.6,488,108 ஆன பணத்தொகை பின்வருமாறாகும்.

Description	Amount (Rs.)
Value Added Tax	73,630.46
Salary Payable	88,613.00
Service Charge Payable	1,787,713.29
Refundable Tender Deposits	2,585,685.18
Rent Deposits	388,482.41
NBT Payable to Local Authority	3,200.00
Accrued Expenses	685,259.35
Audit Fees Payable	310,992.00

Dividend Payable	439,735.11
EPF Payable	111,306.78
ETF Payable	13,490.00
Total	6,488,108.52

மேற்கூறிய அட்டவணையின்படி, கணக்காய்வு ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பெனியிடம் செலுத்தப்பட வேண்டிய ரூபா.6,688,108 தொகை ரூபா.6,488,108 என்ற வகையில் செவ்வையாதல் வேண்டுமென்பதுடன், குறித்த செவ்வையான மீதி இணைந்த கணக்குகளின் தொகுதியில் குறிப்பு இலக்கம் 32 செலவினம் மற்றும் ஏனைய கடன் கொடுநர் தலைப்பு (Expense & Other Creditors) என்ற தலைப்பின் கீழ் கடன்கொடுநர் கணக்கில் (Expense Creditors) தொகுதியின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இணைந்த நிதிநிலைக் கூற்றுகளை தயாரிக்கையில் நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி கம்பெனியின் நிதிக் கூற்றுகள் தொகுதிக்கு ஏற்புடையதாக ரூபா.3,087,684 ஆன தொகை 2019 ஆண்டில் நட்டங்கள் மற்றும் பதிவழித்தல் செலவின தலைப்பின்கீழ் செலவினமாக கவனத்தில் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் இணைந்த நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்

அதன்படி, இணைந்த நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பாக ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பெனி மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களுடன் இணங்கவில்லை என்பதுடன், நகர முதலீட்டு மற்றம் அபிவிருத்தி கம்பெனி தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குவதாகவும் அறியத் தருகின்றேன்.

(iii) <u>அவதானிப்பு</u>

மேற்படி கூற்றுடன் இணங்கப்படமாட்டாது.

அதிகார சபையால் 2019 ஆம் ஆண்டின் இணைந்த கணக்குகளை தயாரிக்கையில் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண தொகுதிகளின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள அலுவலக உபகரணங்களின் மீதி தயாரிக்கையில் வோடர்ஸ் எஜ் கம்பெனியின் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அலுவலக உபகரணங்களின் மீதி பின்வரும் வகையில் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது.

	உருப்படிகள்	அரசாங்க கணக்காய்வுப் பிரிவால் வோடர்ஸ் எஜ் கம்பெனியின் அலுவலக உபகரணங்களாக கவனத்தில் கொண்ட கூறுகளின் மொத்தம். (ரூபா)	நகர அபிவிருத்தி அதிகார சபையால் இணைந்த கணக்குகளை தயாரிக்கையில் வோடர்ஸ் எஜ் கம்பெனியின் அலுவலக உபகரணங்களாக கவனத்தில் கொள்ளப்பட்ட கூறுகளின் மொத்தம் (ரூபா)
1	Office Equipment	45,711,202	45,711,202
2	Kitchen Equipment & utensils	215,744,811	215,744,811
3	Other Equipment	110,250,649	110,250,649
4	Cattery and cookery & glassware		83,293,054
5	Elevator		3,256,219

6	Car Park		46,757,824
7	Landscaping at grand lawn		13,984,802
	Total Cost	371,706,662	518,998,561
	Less - Depreciation		
	Total Depreciation	187,941,668	264,919,026
	Net Book Value	183,764,994	254,079,535

அதன்படி இணைந்த நிதிக் கூற்றுகளை தயாரித்தல் அலுவலக உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மேற்படி இலக்கங்கள் 04.05,06, மற்றும் 07 இல் காண்பிக்கப்பட்டுள்ள உருப்படிகள் கணக்காய்வு ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியில் உள்ளடங்காமை மேற்படி வேறுபாடுகளுக்கு காரணமாகியுள்ளது.

அதேபோன்று கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா.12,641,929 ஆன வேறுபாடாக காணப்படுவதற்கு காரணம் யாதெனில், இணைந்த நிதிநிலைக் கூற்றுகளை தயாரிக்கையில் வேட்டர்ஸ் எஜ் கம்பெனியின் ஓகிட் செடி இயந்திரங்களின் பெறுமதியான ரூபா . 14.763.141 ஆன தொகை கணக்காய்வு ஐயப்பாட்டில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதியில் உள்ளடங்காமை மற்றும் கட்டிடங்களின் மீதியில் காணப்பட்ட ரூபா.2,121,212 ஐ குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளமையாகும்.

எவ்வாறாயினும் அதிகாரசபையால் இணைந்த நிதிநிலை கூற்றுகளை தயாரிக்கையில் பயன்படுத்தியுள்ள வோட்டர்ஸ் எஜ் கம்பெனியின் எல்லா சொத்துக்களின் மொத்தம் மற்றும் கணக்குகளுக்கிடையில் எந்தவொரு மாற்றமும் காணுவதற்கு இல்லை என்பதை அறியத் தருகின்றேன்.

1.2.2 **நகர அபிவிருத்தி அதிகாரசபை (தாய்க் கம்பனி)**

(අ)

I **<u>அவதானிப்பு</u>**

நகர அபிவிருத்தி அதிகாரசபையின்கீழ் 1993-1999 ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் நடைமுறைப்பட்ட நகர அபிவிருத்தி பிரிவுகளின் கருத்திட்டம் 1999 ஆம் ஆண்டில் அதன் நடவடிக்கைகளை முடிவுறுத்தப்பட்டு நகர அபவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி அன்றைய திகதியில் காணப்பட்ட சொத்துக்கள் பொறுப்புகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் மாற்றப்பட்டுள்ளதுடன், அன்றைய திகதியில் அந்தக் கருத்திட்டத்தின் மூலதன ஒதுக்கமாக காணப்பட்ட ரூபா.7,433,382 தொகை அதிகாரசபையின் ஒதுக்கங்களாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று அதிகார சபையால் கட்டமைப்புகளை துண்டிப்பதற்காக மூலதன ஒதுக்கமாக (Demolition of Structure) என்ற வகையில் 1999 ஆண்டு தொடக்கம் பராமரிக்கப்பட்டுள்ளதுடன், 2018.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட மீதி ரூபா. 1,028,303 ஆகும்.

இது தொடர்பில் இதற்கு முன்னர் கணக்காய்வு ஐயப்பாடுகளின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் மேலும் இந்த ஒதுக்கங்களை பராமரிக்கும் தேவை இல்லை என்பதாலும், இவ்வாறான ஒதுக்கங்களை பராமரித்தல் கணக்கீட்டு

நியமங்களுக்கு ஒழுங்கமையாத படியாலும், 2019 ஆம் ஆண்டில் இந்த 2 ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா. 8,462,785 ஆன தொகை பிடித்து வைக்கப்படும் இலாபக் கணக்குகளின் கீழ் (Retained Surplus) காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

II <u>அவதானிப்பு</u>

அதிகார சபையால் கருத்திட்டங்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்கும்போது சில கருத்திட்டங்களின் பொருட்டு MEP ஆலோசனைகளை வழங்குவதற்காக அதிகாரசபையில் சம்பந்தப்பட்ட ஆளணி இல்லாமையால் MEP ஆலோசனைகள் வெளியக நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, பெற்றுக்கொள்கின்ற மொத்தக் கட்டணம் அதிகாரசபையின் வருமானமாக இல்லாத படியால் சம்பந்தப்பட்ட முழுமையான ஆலோசனை கட்டணம் அதிகாரசபையிடம் கிடைக்கப்பெற்றதன் பின்னர், அந்தக் கணக்கிலேயே சம்பந்தப்பட்ட கம்பெனிகளில் ஆலோசனை கட்டணம் செலுத்துவதன் காரணமாக இந்த பெறுமதிகள் குறித்த கணக்கில் வரவு வைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மேற்கொள்கின்ற அபிவிருத்தி அலுவல்களுக்காக யாழ்ப்பான நகரசபையில் அலுவலர்களது ஆலோசனை பெற்றுக்கொள்வது அவசியமாகியதால் அவர்களிடம் மேற்கொண்ட கொடுப்பனவுகளும் இவ்வாறு கிடைக்கப்பெற்ற பணத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, இவ்வாறு கிடைக்கப்பெற்ற மொத்த தொகை அதிகாரசபையின் வருமானம் அல்ல என்பதுடன், வெளியகத்தில் பெற்றுக்கொண்ட ஆலோசனை சேவைக்காக வேறு நிறுவனங்களிடம் செலுத்தப்பட்ட தொகையும் குறித்த கிடைக்கப் பெறுவனவைகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், குறித்த வெளியக தரப்புகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டு கழிக்கப்பட்டதன் பின்னர் கணக்கு வைத்தலின் ஊடாக மீளாய்விற்கான ஆண்டில் வருமானம் குறைவாக காண்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், இனிவருங் காலங்களில் அத்தகைய கருத்திட்டங்களில் பெற்றுக்கொள்கின்ற ஆலோசனை கட்டணங்களை கணக்கு வைக்கும்போது பின்வரும் வகையில் கணக்கு வைப்பறத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

காசேடு	- பற்று
ஆலோசனை சேவை கட்டணங்கள் வருமானக் கணக்கு	- வரவு
செலுத்தப்பட வேண்டிய ஆலோசனை சேவை கட்டணங்கள்	- வரவு
ஆலோசனை சேவை கட்டணங்களை கொடுப்பனவு செய்கையில்,	
செலுத்தப்பட வேண்டிய ஆலோசனை சேவை கட்டணங்கள்	- பற்று
காசேடு	- வரவு

(ஈ) <u>அவதானிப்பு</u>

அதிகார சபையால் மேற்படி குறைந்த வருமானம் பெறுகின்றவர்களின் பொருட்டு மாடி விடுகளை வழங்கும் திட்டம் வெறுமனே இலாபம் பெறும் நோக்கத்துடன செயற்படுத்திய திட்டமல்ல. அது, கொழும்பு நகரம் சார்ந்து வாழ்கின்ற குடிசை வாழ் மக்களுக்காகவும் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காகவும் போன்ற சமூக தேவைகள் மற்றும் பொறுப்புகளை பூர்த்தி செய்கின்ற, அரசாங்க கொள்கை நடைமுறைப்படுத்தல் மட்டுமல்ல அதனூடாக அடையாளம் காணப்படும் குறை பயன்பாட்டுடன்கூடிய கொழும்பு நகரை மையமாகக்கொண்ட வர்த்தக பெறுமதியுள்ள காணிகளை பொருளாதார ரீதியாக பயனுள்ள முதலீடுகளின் பொருட்டு விடுவிக்கும் நோக்கத்துடன் கூடியதாகும்.

அதற்கமைவாக, நாட்டில் ஏற்பட்ட சில இயற்கை இடர் நிலைகள் மற்றும் அரசாங்கத்தால் மேற்கொள்கின்ற சில அபிவிருத்தி கருத்திட்டங்கள் காரணமாக பாதிப்புகளுக்குள்ளான வீடுகளை பெறுநர்களிடம் மேற்படி விடமைப்பு கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட வீடமைப்பு கருத்திட்டங்களிலிருந்து வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

உதாரணம் மீதொட்டமுல்லை குப்பை மேடு சரிந்தமை காரணமாக இடம்பெயர்ந்த வீட்டு உரிமையாளர்களுக்கு களனிவெளி புகையிரத பாதை விரிவாக்கல் காரணமாக வீடுகளை இழந்த வீட்டு உரிமையாளர்கள் போன்றர்வர்களை இதன்போது குறிப்பிடலாம்

அதன்படி அந்த சந்தர்ப்பத்தில் குறித்த நிறுவனங்களிடம் வீடுகளை வழங்கும்போது, குறித்த வீடுகளின் கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக மதிப்பிடப்பட்ட செலவினம் அடிப்படையாகக்கொண்டு வீடுகளின் விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த வீடுகளை கொள்வனவு செய்வதற்காக அரச நிறுவனங்கள் மற்றும் இலங்கை நிதிநிலை அறிக்கையிடல் தரநியமம் 15 இன் படி பூர்த்தி செய்யப்பட வேண்டிய 05 விடயங்களுக்கு ஏற்புடையதான பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், மீளாய்விற்கான ஆண்டில் அவ்வாறு வீடுகளை அப்புறப்படுத்தலுக்கு ஏற்புடையதாக அடையாளம் காணப்பட்ட மொத்த நட்டமான ரூபா.மில்லியன் 443 ஆன தொகை முன்னரான ஆண்டின் சீராக்கல்களாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது வீடுகளை கொள்வனவு செய்வதற்கு ஏற்புடையதாக வீடுகளின் பௌதீக மற்றும் சட்டத்துடனான உரிமை மீளாய்விற்கான ஆண்டில் வீடுபெறுநரிடம் மாற்றப்பட்டாலும், பணம் கிடைக்கப்பெறுதல் மற்றும் இருதரப்புகளுக்கிடையில் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் முன்னரான ஆண்டுகளிலும் இடம்பெற்றுள்ளதால் குறித்த வீடுகளை அப்புறப்படுத்தவதற்கான இலாபம் / நட்டம் முன்னரான ஆண்டின் சீராக்குதல்களாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) **அவதானிப்பு**

இது சமூக தேவைகளை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கத்தின் தேவைக்கமைவாக செயற்படுத்தப்படும் கருத்திட்டமாவதுடன், இலாபம் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையால் செயற்படுத்தப்படும் கருத்திட்டம் அல்லாத படியால் காணியின் பெறுமதி கருத்திட்டத்தின் இலாபம் / நட்டம் கணக்கிடுகையில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அதேபோன்று இந்த நிருமாணிப்புகளின் செலவினம் ஈடுசெய்வதற்காக அரசாங்கத்தால் சில ஒதுக்கீடுகள் அளிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று ஒரு வீட்டு அலகின் பொருட்டு சம்பந்தப்பட்ட வீட்டுப்பெறுநரிடமிருந்து ரூபா.**3000/-** படியிலான மாதாந்த பெறுமதிக்கொண்ட, 30 ஆண்டு காலம் முழுவதும் பெயர் அளவிலான பெறுமதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி 02 முறைகளிலும் மற்றும் ஏற்புடைய மறுசீரமைப்பின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற காணிகளை வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு வழங்கும்போது கிடைக்கப்பெறும் வருமானம் இந்த கருத்திட்டத்தின் செலவினம் ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.

அதேபோன்று, மக்கள் ஏற்புடைய வீடுகளில் குடியமர்த்தப்படினும், அவர்களிடம் இந்த வீடுகளின் முழு உரித்து இதுவரை வழங்கப்படவில்லை. அதன்படி, 16 ஆம் இலக்க நியமம் பிரகாரம், நிதிநிலை குத்தகையாக கவனத்தில் கொண்டு மேற்படி வீடுகளை அப்புறப்படுத்தல்கள் கணக்கு வைப்பதற்கு இயலாது.

அதற்கமைவாக மேற்படி கணக்காய்வு ஐயப்பாட்டில் உள்ள உள்ளடக்கம் தொடர்பில் இணங்க முடியாது.

(ஈ) **அவதானிப்பு**

இது சமூகத் தேவையின் அடிப்படையில் அரசாங்கத்தின் தேவைக்கமைவாக செயல்படுத்தப்படும் திட்டம் என்பதாலும், இலாபம் ஈட்டும் நோக்கத்தைக்கொண்டு அதிகாரசபையால் செயல்படுத்தும் திட்டமல்ல என்பதாலும், காணியின் பெறுமதி கருத்திட்டத்தின் இலாபம்/நட்டம் கணக்கிடுவதில் கவனத்தில் எடுத்துக்கொள்ள-

ப்படவில்லை. அதேபோன்று இந்த நிருமாணிப்புகளில் செலவினம் ஈடுசெய்வதற்காக அரசாங்கத்தால் சில ஒதுக்கீடுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று ஒரு வீடமைப்பு அலகு பொருட்டு சம்பந்தப்பட்ட வீடுபெறுநர்களிடமிருந்து ரூபா.**3000/-** படியிலான மாதாந்த பெறுமதி 30 ஆண்டு காலம் முழுவதும் பெயர் அளவிலான பெறுமதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி 02 முறைகளிலும் மற்றும் ஏற்புடைய மீள்தாபிக்கப்படுதலின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற காணிகளை, வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு வழங்குவதால் கிடைக்கப்பெறுகின்ற வருமானமும் இந்த கருத்திட்டத்தின் செலவினம் ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.

அதேபோன்று, மக்களை உரிய வீடுகளில் குடியமர்த்தப்படினும், அவர்களிடம் இந்த வீடுகளின் பூரண உரிமை இதுவரை வழங்கப்படவில்லை. அதன்படி, தரநியம இலக்கம் 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நிதிக் குத்தகையாக கவனத்தில் கொண்டு மேற்படி வீடுகளை அப்புறப்படுத்தல் கணக்கு வைக்க இயலாது.

அதன்படி, மேற்படி ஐயப்பாட்டில் உள்ள உள்ளடக்கம் தொடர்பில் இணங்குவதற்கு இயலாது.

(ஒ)

(i) **<u>அவதானிப்பு</u>**

ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள முற்றுமுழுதாக தேய்மானம் செய்து முடிவுறுத்தப்பட்டிருந்த சொத்துக்களை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான அறிவைக்கொண்டுள்ள தரப்புகளைக் கொண்டு மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அதற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய காலப்பகுதியும் வேண்டுமென்பதால், சம்பந்தப்பட்ட சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்து அதனுடன் தொடர்புடைய சீராக்குதல்களை **2021** ஆம் ஆண்டு கணக்கு புத்தகங்களில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத் தருகின்றேன்.

(ii) **அவதானிப்பு**

சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல் மீள்கணிப்பீடு செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டின் நிதி ஆண்டில் உரிய பெறுமதிகள் சொத்துக்களில் வெளிப்படுத்துதலுக்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

(iii) **<u>அவதானிப்பு</u>**

அதிகாரசபையில் முதலீடு செய்யப்பட்ட சொத்து தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை, காணிப் பிரிவால், அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் பரிந்துரைகளின்படி தயாரிக்கப்படுகிறது. மேலும், குத்தகை நடவடிக்கைகளின் இயல்பு, குத்தகைதாரருக்கு பொருந்தக்கூடிய நிபந்தனைகள் மற்றும் அதிகாரசபையின் அதிகாரங்கள் குத்தகைதாரருடனான குத்தகை ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி, முதலீட்டுச் சொத்து மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து, அறிக்கையின் தரவு மற்றும் தொடர்புடைய ஒப்பந்தங்களை அதிகாரசபையின் சொத்து முகாமைத்துவம் மற்றும் அறவீட்டுப் பிரிவிடம் சமர்ப்பித்த பின்னர், குறித்த முதலீட்டு சொத்து குத்தகைகள் தொடர்பான கணக்கீட்டு முறைமையில் மேற்கொள்ள வேண்டிய இற்றைப்படுத்தல் புதுப்பிப்பு **(Update)** மேற்கொள்ளப்படும்.

அதிகாரசபையால் தற்போது அதிகளவிலான சொத்துக்கள் பல்வேறு குத்தகை காலவெல்லைக்கு (சுமார் 5000) வழங்கியுள்ளதால், குறித்த ஒவ்வொரு சொத்துகளுக்கு ஏற்புடையதான விடயங்கள் கணக்கு கூற்றில் குறிப்பிடுவது நடைமுறைக்கு மாறானதால் காணி அகற்றலுக்குரிய பொதுவான நடவடிக்கைகளின் இயல்பு அதாவது தொழில்துறை, உட்கட்டமைப்பு வசதிகள், பல அடுக்கு மாடி

தொகுதிகள் பராமரித்தல் போன்ற செயற்பாடுகள் மற்றும் ஆபத்தை குறைப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் உதாரணமாக துணை குத்தகைக்கு வழங்கும் அதிகாரசபையிடம் முன் அனுமதி பெறுதல், பெறப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்துதல் போன்ற வரம்புகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய விடயங்கள் கணக்கு அறிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு குத்தகை உடன்படிக்கைக்கும் ஏற்புடையதாக இந்த விபரங்கள் சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் அறவிடல் பிரிவுமூலம் பிற்போடப்பட்ட குத்தகை வாடகை பேரேடை இற்றைப்படுத்துவதன்மூலம் அரசாங்கத்தின் கணக்காய்வுப் பிரிவிடம் வழங்குவதற்கு முறைமை தயாரிப்பாளர் கம்பெனியுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதன்படி, அதிகார சபையின் முதலீட்டு சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டு முறைமையில் மேற்கொள்ள வேண்டிய இற்றைப்படுத்தல்கள் மற்றும் நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ள வேண்டிய வெளிப்படுத்தல்களை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

(iv) அவதானிப்பு

அதிகாரசபையால் சொத்துக்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கியதன் ஊடாக அயைடாளம் காணப்படும் பிரதேசங்களில் பல்வேறு அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அதகிர சபை தாபிக்கப்பட்ட சட்டம் பிரகாரம், நீண்டகால அடிப்படையின்கீழ் காணிகளை விடுவித்தல் அதிகாரசபையின் ஆரம்பம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி முற்காலத்தில் அந்தக் காணிகளை விடுவிக்கையல் வழங்கப்படுகின்ற காலம் மற்றும் அறவிடப்படும் முறைமை பல்வேறு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாக இருப்பினும், இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த ஒரே முறைமைக்கு ஏற்புடையதாக அரசாங்கத்தின் மதிப்பீட்டாளர்களிடம் வழங்கியுள்ள மதிப்பீட்டு விலை அடிப்படையாகக்கொண்டு காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதிகாரசபையால் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கியதன் பின்னர், குத்தகை பெறுமதியானது, அந்தக் குத்தகை காலம் முழுவதும் அதிகாரசபையின் வருமானத்திற்கு எடுக்கையில் ஒரே சீரான முறை செயற்படுவதுடன், மேலும் ஒத்திவைக்கப்பட்ட குத்தகைக் கணக்கில் கணக்கு பிழைகள் காரணமாக, தொடர்புடைய வருமானம ஒரே சீரான முறையில் கணக்கிடப்படாத சந்தரப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

ஐயவினாவில் முன்வைக்கப்பட்ட அவ்வாறான கணக்கீட்டு பிழைகள் தற்போது செவ்வையாக்கப்பட்டுள்ளதுடன், (**2022.03.14** இன் கடிதம் இலக்கம் **37/03/06** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.) இணைப்பு **01** மேலும், ஒத்திவைக்கப்பட்ட குத்தகைப் பதிவேட்டில் இதுபோன்ற கணக்குப் பிழைகள் காரணமாக, வரி வருவாய்கள் ஒரு சீராக வருடாந்த வருமானத்தில் சேர்க்கப்படாமை தொடர்பில் குத்தகை கணக்குகளை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ඊ) අවධානිප්පු

ஒத்திவைக்கப்பட்ட குத்தகை வாடகைக் கணக்கு தொடர்பான அட்டவணை ஏற்கனவே கணக்காய்வுப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் திட்டத்தின் பெயர், வாடிக்கையாளரின் பெயர், குத்தகை பெறுமதி, காலவெல்லை போன்ற விவரங்கள் உள்ளன. மேலும், அதிகார சபையால் குத்தகை அடிப்படையில் அதிகாரம் வழங்கியுள்ளதால், இது தொடர்பாக தனித்தனியாக வெளிப்படுத்தும் வகையில், கணக்கு அறிக்கைகளில் வெளியிடப்படும் விவரங்கள் வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக்

கொள்கிறேன். **2020** ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

(ii)

i. அவதானிப்பு

Ser.No.	Project Code	Project Name	Amount (Rs.)	Remarks
1	5210500	Landscape Improvement at Sethsiripaya Stage I	15,812,531.94	முதலீடு செய்யப்பட்ட சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள செத்சிறிபாய பாதசாறி நுழைவு வீதி நிருமாணித்தல் மற்றும் நில வடிவமைப்பு மேம்படுத்தல் பொருட்டு செலவிடப்பட்டிருந்த முதலீட்டு சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டு, இலாப நட்டக் கணக்கில் முன்னரான ஆண்டின் சீராக்கல்களாக 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
2	3001200	Proposed Town Beautification Programme at Miniwangoda	4,995,475.10	அதிகாரசபையால் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும் குறிக்கோளுடன் மினுவன்கொடை நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு மேற்கொண்ட செலவினம் இந்த தொகையில் காண்பிக்கப்படுவதுடன், இது 2022 நிதிக் கூற்றுகளில் இலாப நட்டக் கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
3	3190900	Urban Wetland Park at Nugegoda	97,992,095.94	நுகேகொடை நகர்சார் ஈரநில பூங்கா கருத்திட்டம் மூலம் புகைப்படமெடுத்தல் மற்றும் டிக்கெட் விற்பனை என்பவற்றின் ஊடாக வருமானம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகையால் இதன் செலவினம் வருமானம் உற்பத்தி செய்யும் சொத்தாக முதலீட்டு சொத்துக்களின்கீழ் காண்பிக்கப்படுதல் செவ்வையானதென இத்தால் குறிப்பிடுகின்றேன்.
4	3410700	Landscaping of Urban Park & Construction of Pola I	795,000.00	நகர்சார் பூங்காவின் நில அலங்காரம் மற்றும் சந்தை நிருமாணித்தல் 1 கீழ் மேற்கொண்டுள்ள செலவினம் முதலீட்டு சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டு இலாப நட்டக் கணக்கில் முன்னரான ஆண்டின் சீராக்கலாக 2022 ஆம் ஆண்டின் நிதிநிலைக் கூற்றுகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5	6970100	Con. of Children Park Embilipitiya	7,677,825.75	நகர அலங்காரப்படுத்தலின்கீழ் எம்பிலிபிட்டிய சந்தை அபிவிருத்தி செய்கையில் அதன் அருகாமையில் உள்ள சிறுவர் பூங்கா நிலத்திற்கு இடையூறு ஏற்பட்டதால், குறித்த சிறுவர் பூங்கா நிருமாணித்தல் சமூக

				தேவையாக கவனத்தில் கொண்டு, திறைசேரி பணம் கிடைக்கும் எதிர்பார்ப்புடன், நகர அபிவிருத்தி அதிகார சபையால் சிறுவர் பூங்கா நிருமாணிக்கப்பட்டது. இந்த செலவினம் முதலீட்டு சொத்துக்களி-லிருந்து அகற்றப்பட்டு இலாப நட்டக் கணக்கில் முன்னரான ஆண்டில் சீராக்கல்களாக 2022 நிதிநிலைக் கூற்றுகளில் சீராக்குவதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளப்படும்
6	9970100	Hanwella Riverside Park	539,781.60	ஹங்வெல்ல கங்கஅத்தர பூங்காவிற்காக இந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டுக்கு முன்னராக வாடிவீடு முகாமைத்துவம் நகர அபிவிருத்தி அதகிாரசபையால் மேற்கொள்ளப்பட்ட-துடன், பின்னர் Lanka Rest House கம்பெனி நிறுவப்பட்டு அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டது. அதன் காரணமாக குறித்த கம்பெனி பொருட்டு சொத்துக்கள், பொறுப்புகள் என்பன கையளிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவது-டன், அதன்போது இந்த செலவினமும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7	9192300	Landscape Improvement at Jayasekararamaya Temple	5,989,512.18	இது 31.12.2020 ஆம் திகதி ஜர்னல் இலக்கம் J30736 இன் கீழ் சேவைப்பெறுநர் வைப்புகளுக்கு சீராக்கப்பட்டுள்ளது.

மேலும் அதிகாரசபைக்குரிய எல்லா சொத்துக்களின் பொருட்டு ஏற்புடையதான காணிகளின் அடிப்படை அளவைப்பட இலக்கம், துண்டு இலக்கம் மற்றும் முகவரி ஆகிய தகவல்கள் உள்ளடக்கிய உபகருத்திட்டங்களின் இலக்கம் வழங்கப்பட்டு அந்த ஒவ்வொரு துண்டுக்கு ஏற்புடையதாக புதிய மதிப்பீட்டு பெறுமதி கணக்கீட்டு கூற்றுகளுக்கு சீராக்கல் தொடர்பான அவதானிப்பு இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	கருத்திட்ட இலக்கம்	கருத்திட்டம்	பெறுமதி (ரூபா)	காணிப் பகுதிகளின் எண்ணிக்கை	UDA / Client
1.	3210200	Battaramulla Town Development	32,327,500.00	01	UDA
2.	3220300	Homagama Town Development Project	320,072,873.31	02	UDA
3.	3270200	Kottawa Town Development	974,365,645.34	01	Client
4.	3520100	Dambulla Town Development	70,517,797.79	02	UDA
5.	3520200	Dambulla Town Development – Stage I	425,875,525.83	10	UDA
6.	3550600	Small Town Development Imaduwa	14,087,486.16	-	UDA
7.	5020200	Re-development Project Slave Island	1,584,334,036.26	-	UDA

8.	5330200	Peliyagoda Development Stage-I	6,839,201,620.98	74	UDA
9.	5330300	Peliyagoda Development Stage-II	144,367,827.39	01	UDA
10.	5940200	Development of Kataragama	1,056,355,617.07	06	Client
11.	5950100	Rathnapura Town Development	780,007,707.88	04	Client
12.	5990100	Warakapola Integrated Town Development fee for use 41 lease premium 04	189,555,453.43	01	Client
13.	8812100	Development of Maho Town	12,454,500.00	01	Client
14.	2940100	Kataragama Development	467,892,600.00	01	Client
15.	9720100	Proposed Mankulam Town Development	1,132,680.00	-	UDA
16.		Bolgoda Lake Development Project	130,678,534.02	-	Client
17.	3870200	Kaduruwela Town Expectation Project	376,279,416.31	-	Client
18.		Balangoda Town Development	21,236,093.40	-	Client
19.	3820200	Dankotuwa Town Development	1,969,924.46	-	Client
20.	3240600	New Township Development Project	242,790,911.84	-	Client
21.	3240700	Kottawa Town Centre Development	7,413,005.50	-	Client
22.	3960100	Balangoda Town Development	21,236,093.40	-	Client
23.	5390200	Modarawila Development	646,617,463.18	-	UDA

மேற்படி அட்டவணை பிரகாரம் முதலீட்டு சொத்துகளாக அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் பொருட்டு மேற்கொண்ட கருத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் கணக்கீட்டு கூற்றுகளில் செவ்வையான வகைப்படுத்தலின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

சுற்றுலாத்துறை வீடுகளிலிருந்து வாடகை வருமானம் உற்பத்தியாவதால் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது உரிய சொத்துக்களை முதலீட்டு சொத்துக்களின் கீழ் ரூபா. 18,103,817/- காண்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2022 நிதிக்கூற்றுகளை தயாரிக்கும்போது அது சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் செவ்வையாக காண்பிப்தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ii. அவதானிப்பு

அதிகாரசபைக்குரிய முதலீட்டு சொத்துக்களில், அதிகார சபைக்குரியதான காணிகள் மற்றும் கட்டிடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன்படி அந்த சொத்துக்கள் பல்வேறு அபிவிருத்தி பணிகளின் பொருட்டு வெளியக தரப்புகளிடம் **30, 50** மற்றும் **99** ஆண்டுகள் என்ற வகையில் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று அதிகாரசபையால் இந்த

காணிகள் மற்றும் கட்டிடங்கள் **2012** ஆம் ஆண்டில் கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையும்போது, அதற்காக அதிக செலவினம் மேற்கொள்ள வேண்டுமென்பதாலும் நீண்டகாலம் செல்லும் என்பதாலும், அப்போது அரசாங்க கணக்காய்வுப் பிரிவுடன் கலந்துரையாடப்பட்டு உள்ளக மதிப்பீட்டு குழுமூலம் மீள்கணிப்பீடு செய்யப்பட்டது. அதிகாரசபைக்குரிய முதலீட்டு சொத்துகளை மீள்கணிப்பீடு செய்து தகைமைகளைப்பெற்ற பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்திடம் கணக்கீட்டு உதவியுடன் **2011.01.01** ஆம் திகதியில் நிலவிய பெறுமதி கணக்குப் புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன்போது அதிகாரசபைக்குரிய **99** ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் வழங்கிய சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் கணக்குகளில் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. **99** ஆண்டுகளிலான குத்தகை அடிப்படையில் வழங்கிய காணிச் சொத்துக்கள் அப்புறப்படுத்தலாக கவனத்தில் கொண்டு புத்தகங்களிலிருந்து அகற்றப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டது.

குறித்த காணிகள் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளாவதுடன், அவற்றை கணக்கீட்டு புத்தகங்களில் முற்றுமுழுதாக அகற்றப்பட்டால், அது தொடர்பாக எந்தவொரு விபரமும் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் இல்லாமையால் அதிகாரசபையினதும் முகாமைத்துவசபையினதும் அனுமதிக்கமைவாக, இதன்போது **99** ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகை வழங்கியிருந்த முதலீட்டு சொத்துக்கள் வரலாற்று செலவினத்தின்கீழ் கணக்கிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், **2021.12.15** ஆம் திகதி தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் கணக்காய்வாளர் அதிபதி மற்றும் இந்த அதிகாரசபையின் அலுவலர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்கமைவாக அதிகாரசபையின் 99 ஆண்டுகளின் பொருட்டு குத்தகைக்கு வழங்கியுள்ள முதலீட்டு சொத்துக்கள் முழுமையான விற்பனையாக (Outright sale) கவனத்தில் கொண்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது அந்த மீள்கணிப்பீட்டு பெறுமதிகளை கணக்குகளுக்கு எடுத்தல் மற்றும் கொள்கைகளில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை மேற்கொள்ளுதல் தொடர்பில் நிபுணத்துவ ஆலோசனை சேவை பெற்றுக்கொள்வதற்காக கல்வித் தகைமைகளை கொண்டுள்ள நிறுவனமாக தெரிவு செய்வதற்கு ஏற்புடையதான பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

iii. <u>அவதானிப்பு</u>

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி கருத்திட்டங்களின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு தவறுதலாக 374 ஏக்கராக திருத்தம் செய்தல் வேண்டுமெனவும், அந்த காணிகளின் அளவு ஒவ்வொரு கருத்திட்டங்களின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள வகையில் 10/1/Audit மற்றும் 2021.04.01 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது.) இணைப்பு 03 இல் அந்தக் காணியின் அளவின் பெறுமதி 2021 ஆம் ஆண்டில் உரிய வகையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ඌ) <u>அவதானிப்பு</u>

மேற்படி கூற்றுடன் முழுமையாக இணங்கவில்லை என்பதுடன், எமது நிறுவனத்தால் நாடு முழுவதும் செயற்படும் பல்வேறு கருத்திட்டங்கள் தொடர்பில் குறித்த ஒவ்வொரு கருத்திட்டங்கள் பொருட்டு ஒதுக்கப்பட்ட கருத்திட்ட இலக்கத்தின்கீழ் (Project Code) ஒவ்வொரு செலவின தலைப்புகளை பயன்படுத்தி (Account Code) கொடுக்கல்வாங்கல் குறிப்பு வைத்தல் மேற்கொள்ளப்படுகிறது.

கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 2019.12.31 ஆம் திகதியில் ஐந்தொகையின் அபிவிருத்தி செலவினங்களுக்கான கணக்கு இலக்கம் எல்லாவற்றிலும் முழுமொத்தம் ரூபா.164,567,346,305.79 பின்வருமாறாகும்.

	ரூபா.
அபிவிருத்தி செலவின கணக்கு 115 இல் மொத்தம்	159,724,489,761.79
(கணக்காய்வு ஐயப்பாட்டில் கணக்கீட்டு இலக்கம் **117** குறிப்பிடப்படினும், அது கணக்கு இலக்கம் **115** ஆக செவ்வையாதல் வேண்டும்.**)**	
(கணக்கீட்டு இலக்கம் 2101-2699)	
அட்டவணைகள் 5 இன் மொத்தம் (பழைய கணக்கீட்டு முறைமை மூலம் 2001 ஆம் ஆண்டில்	
முன்கொண்டு வரப்பட்ட ஆரம்ப மீதிகள்) (கணக்கீட்டு இலக்கம் 2995-2999)	4,842,856,544.00
முழுமொத்தம்	164,567,346,305.79

அதிகாரசபை தொடக்கத்திலிருந்து ஐந்தொகை தயாரிக்கையில், உரிய செலவினங்களின் இயல்பு காண்பிக்கும் வகையில் கணக்கீட்டு இலக்கம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி எம்மிடம் ஒவ்வொரு வகைப்படுத்தலின்கீழ் மேற்கொண்ட செலவினங்கள் தெளிவாக அயைடாளம் காண முடியுமாகவுள்ளது. அதாவது கையேற்பதற்கான செலவினம், நிருமாணிப்பதற்கான செலவினம், ஊழியர் சம்பளம் என்பனவாகும். அதன்படி, ஏதேனும், கருத்திட்டத்திற்கான செலவினம் அந்த கருத்திட்ட இலக்கம் வழங்குவதன் ஊடாக பெற்றுக்கொள்ளும் ஆற்றல் உள்ளது. அதன்படி, கருத்திட்டம் பொருட்டு மேற்கொண்ட செலவினம் இலாப நட்டக் கணக்குக்கும், மூலதன செலவினம் வகைப்படுத்தலின்கீழ் மூலதன திட்ட மூலதனச் செலவினத்தின் கீழ் முறையான வகைப்பாட்டின் கீழ் மூலதனச் செலவினங்களிலும் காட்டப்பட்டுள்ளன.

அதிகாரசபையில் காணப்பட்ட பழைய கணக்கீட்டு முறைமை மற்றும் புதிய கணக்கீட்டு முறைமை என்பவற்றில் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி செலவினங்களின் அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டிருப்பது, மேற்கொள்கின்ற வேலை, முதலீட்டு சொத்துக்கள், ஆதனங்கள் பொறித்தொகுதிகள், வாடிக்கையாளர்களின் கருத்திட்டங்கள் மற்றும் வேலை முடிவுறுத்திய வீடுகளின் கருத்திட்டம் என்ற வகையிலாகும். அதன்படி எம்மால் ஐந்தொகையில் 2019.12.31 ஆம் திகதியில் மேற்படி கணக்கீட்டு இலக்கம் 115 மற்றும் அட்டவணை 05 இல் காணப்பட்ட மீதிகளில் மொத்தம் ஏற்புடைய வகைப்படுத்தலின்கீழ் 2019 ஆண்டின் நிதிநிலைக் கூற்றுகளில் செவ்வையாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு ஏற்புடையதாபன செவ்வையான அட்டவணையும் எம்மால் அரசாங்க கணக்காய்வுப் பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) **<u>அவதானிப்பு</u>**

RETSUP என்ற வகையில் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா.993,270,282 ஆன பணத்தொகையில், 2016.01.01 ஆம் திகதியில் பிடிபணமாக வைத்துக்கொள்ளப்பட்ட மிகையின் மீதி காண்பிக்கப்படுகிறது. அதாவது அதிகார சபையின் ஆரம்பம் தொடக்கம் அறிக்கையிடப்பட்டிருந்த இலாப நட்டங்களின் மொத்தமாகும்.

அதன்படி **1.2.2.4** (ன) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் இந்த கணக்கின் மீதி பிடிபணமாக வைக்கப்பட்ட இலாபங்கள் (Retained Surplus) கணக்கு இலக்கத்திடம் மாற்றுவதற்கு ஜர்னல் இலக்கம் J31703 மூலம் 2020 ஆண்டில் கணக்குகளில் சீராக்கவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ඒ) **<u>அவதானிப்பு</u>**

உங்கள் ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணப்பேரேடுக்கு ஏற்புடையதான கொடுக்கல்வாங்கல், பணம் கிடைக்கப்பெறுவனவைகள், கொடுப்பனவுகளிலிருந்து பின்வரும் வகையில் சில கொடுக்கல் வாங்கல் கணக்கு வைப்பதற்காக ஜர்னல் குறிப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, காலவதியான நிலையான வைப்புத்தொகைக்கு ஏற்புடையதான பணம் கிடைக்கப்பெறுதலை குறிப்பு வைத்தல், வாடிக்கையாளர்களால் நேரடியாக இந்த அதிகாரசபையிடம் செலுத்தப்பட வேண்டிய முற்பணக் கட்டணங்கள் கணக்கு வைத்தல் மற்றும் இந்த அதிகாரசபைக்குரிய கணக்குகளுக்கிடையில் பணம் மாற்றுவதற்காக திட்டங்களை அனுமதிக்கையில், உரிய விண்ணப்பங்கள் இணையத்துடன் நேரடி முறைமை (online system) மூலம் மேற்கொள்ளப்படுவதால், சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களால் குறித்த கட்டணங்களை வங்கியிடம் நேரடியாக வைப்புச் செய்யப்படும்.

அவ்வாறான வைப்புகளுக்கு ஏற்புடையதாக வங்கி பற்றுச்சீட்டுகள் இந்த அதிகாரசபையிடம் கிடைக்கப்பெறுவதற்கு ஏதேனும் காலம் எடுப்பதுடன், அதுவரை குறித்த வருமானம் கணக்காய்வு ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அடையாளம் காணப்படாத வருமானமாக ஜர்னல் குறிப்புகள் மூலம் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஏற்புடையதான வளமூலங்கள், காலப்பகுதியில் வங்கி கணக்கீட்டு விபரங்கள் மற்றும் ஒப்பிடப்பட்டு அடையாளம் காணப்பட்டதன் பின்னர் தற்காலிகமாக வருமானங்கள் செலவு வைக்கப்பட்டுள்ள கணக்கிலிருந்து அகற்றப்பட்டு சரியாக அடையாளம் காணப்பட்ட ஏற்புடைய வருமானக் கணக்கில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதன்படி கணக்காய்வு ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தல் இந்த அதிகார சபையின் எந்தவொரு அலுவலருக்கும் இயலாது.

(ෙ) **<u>அவதானிப்பு</u>**

மேற்படி **1.2.2.1 (அ) (i)** இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில், 2012 ஆம் ஆண்டில் புதிய இலங்கை கணக்கீட்டு நியமத்திடம் (SLFRS & LKAS) உள்ளீர்க்கும் செயற்பாட்டில் இலங்கை நிதிநிலை அறிக்கையிடல் நியம இலக்கம் 1 இன்படி விதிவிலக்கான இரண்டு வாய்ப்புகளுக்கிடையில் நிறுவனத்திற்கான முதலீட்டு சொத்துகளாக கவனத்தில் கொள்ளப்படும் செலவினம் (Deemed Cost) அடிப்படையில் கணக்குகளில் காண்பிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, அதிகார சபைக்குரிய காணிகள் மற்றும் சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்து (99 ஆண்டு குத்தகை சொத்துக்கள் தவிர்ந்து) அந்தப் பெறுமதிகள் அன்றைய திகதியில் செலவினமாக கவனத்தில் கொண்டு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகார சபையால் அந்த அடிப்படையில் கணக்கு வைப்பதற்கான பிரதான காரணம் யாதெனில், அதிகார சபைக்குரிய சொத்துக்களின் அளவு மற்றும் அது தொடர்பில்

மேற்கொள்ள நேரிட்ட செலவினங்களை கவனத்தில் கொண்டும் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக அப்போது ஆலோசனை சேவை பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தில் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சபையின் அனுமதியும் ஆகும். எவ்வாறாயினும், இது தொடர்பில் எமது அமைச்சின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் அதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு பார்த்து, சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவரை நியமனம் செய்து 2021 ஆம் ஆண்டில் அப்போது அதிகார சபைக்குரிய எல்லா காணிகள் மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, அவரால் வழங்கிய அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு 2019 ஆம் ஆண்டில் கணக்குகளுக்கு மதிப்பீட்டு அறிக்கையில் மொத்த பெறுமதியான ரூபா. 598,326,141,944 ஆன பெறுமதி 03 பிரதான வகைப்படுத்தலின் கீழ் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, இதுவரை அதிகார சபையால் முதலீட்டு சொத்துக்கள் தொடர்பில் பின்பற்றப்படும் கணக்கீட்டு கொள்கையான செலவினம் வெளிப்படுத்தும் அடிப்படையில், இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) **அவதானிப்பு**

கருத்திட்ட இலக்கம்	கருத்திட்டம்	பெறுமதி (ரூபா)	அவதானிப்பு
6131000	Sugathadasa Indoor Stadium	2,851,204	சுகததாஸ உள்ளக விளையாட்டு மைதானம் நிருமாணிக்கும் நடவடிக்கைகள் (விளையாட்டு அமைச்சு பொருட்டு) அப்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட-டுள்ளது. அதன்படி இந்த செலவினம் 6131000 என்ற கருத்திட்டம் பொருட்டு பல்வேறு தரப்புகளின்கீழ் வாடிக்கையா-ளர்களின் வைப்பு பணத்தொகையில் பதிலீடு செய்வதற்கு 2020 கணக்கு ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்வ-துடன், அந்தக் கருத்திட்டம் முடிவுறுத்தப்படாத வேலை கருத்திட்ட-ங்களிலிருந்து வாடிக்கையாளர் கருத்திட்டங்களின்கீழ் 2020/12/31 ஆம் திகதியில் மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
3220200	Kotikawatta Town Center Development	109,919,235	3220200 என்ற இலக்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள Kotikawatta Town Center Development என்ற கருத்திட்டத்தில் கருத்திட்ட இலக்கம் 3230200 என்று செவ்வையாதல் வேண்டும். 3230200 என்ற கருத்திட்டங்கள் தொடர்பாக உசாவுகையில், ஏற்புடைய கருத்திட்டம் கையகப்படுத்தும் நடவடி-க்கைகள் (Land Acquisition) நகர அபிவிருத்தி

			அதிகாரசபைமூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட காணியில் பயன்-கொள்ளல் தற்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டு-ள்ளது. அதற்காக இதுவரை வாடிக்கையாள-ர்களின் வைப்புகள் (6605) எதுவும் கிடைக்கப்பெறவில்லை. ஆகையால் அந்தக் கருத்திட்டம் வேலை முடிவுறுத்தாத கருத்திட்டங்-களிடமிருந்து வாடிக்கையாளர் வைப்புகள் கருத்திட்டங்களின்கீழ் மாற்றுவதற்கு ஆற்றல் இல்லை. சம்பந்தப்பட்ட கருத்திட்டத்தின் வேலைப் பணிகள் முடிவடையும் வரை கருத்திட்ட தொகுதியின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள-துடன், கருத்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் முடிவுறுத்தியவுடன் அது உரிய கருத்திட்ட தொகுதியின்கீழ் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
3350300	Acq.of Land at Delghoda for Township Development	159,250	3350300 என்ற இலக்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள Acq.of Land at Delgoda for Township Development என்ற கருத்திட்டத்தில் கருத்திட்ட இலக்கம் 3350500 என்ற வகையில் செவ்வையாதல் வேண்டும். சம்பந்தப்பட்ட காணியை, நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கை-யேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களின் நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிதியம்மூலம் மேற்கொள்ளப்பட்டது. ஆகையால் அந்தக் கருத்திட்டம் முடிவுறுத்தப்படாத வேலை கருத்திட்ட-ங்களிடமிருந்து வாடிக்கையாளர் வைப்புகள் கருத்திட்டத்தின்கீழ் மாற்றுவதற்கு ஆற்றல் இல்லை. சம்பந்தப்பட்ட கருத்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் முடிவுறும் வரை, அது முடிவுறுத்தப்படாத வேலை கருத்திட்ட தொகுதியின்கீழ் காண்பிக்கப்படுவதற்கு நேரிடுவதுடன், கருத்திட்டத்தின் வேலை நடவடிக்ககைகள் முடிவுறுத்தியவுடன், அது உரிய கருத்திட்டங்களின் தொகுதியின் கீழ் மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
	மொத்தம்	112,929,689	

(ஜ) **அவதானிப்பு**

2018 ஆம் ஆண்டு வரை மிதக்கும் வர்த்தக தொகுதியின் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய கட்டுநிதி கணினி முறைமையில் அதிகமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக, அவ்வகையில் அதிகமாக கணக்கு வைக்கப்பட்ட மீதிகளை மீளாய்விற்கான ஆண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு தவறுதலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இவ்வாறான கணக்கீட்டு தவறுகள் எதிர்வருங் காலத்தில் இடம்பெறாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள்பபடும் என்பதை குறிப்பிடுகின்றேன்.

(ஞ) **அவதானிப்பு**

இந்தக் கூற்றுடன் இணங்கப்படுகிறது. சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு ஏற்புடையதாக தற்போது காணப்படும் தேய்மான ஒதுக்கீட்டு அட்டவணை 2001 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதிகளைக் கொண்டமைந்துள்ளதுடன், இதுவரை அந்த பதிவேட்டை இற்றைப்படுத்தி அதிகார சபையால் தேய்மானம் ஒதுக்கிடல் கணக்கிடப்படுகிறது. (அந்த அட்டவணையில் இயந்திரங்கள், தளவாட உபகரணங்கள், மோட்டார் வாகனங்களின் செலவினம் ஒழுங்குமுறையில் ரூபா.9,575,577, ரூபா.2,559,834, ரூபா.21,609,276 ஆன அதாவது அதன் ஒட்டுமொத்த செலவினமான ரூபா.33,744,687 ஆன மீதி 2001 ஆண்டு தொடக்கம் இருந்து வரும் மீதியாகும். ஆகையால் ரூபா. 33,744,687 ஆன இந்த பெறுமதி தேய்மானம் ஒதுக்கீடாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இந்த தேய்மானம் முன்னரான ஆண்டுக்கு ஏற்புடையதாவதால் முன்னரான ஆண்டின் சீராக்குதலாக 2020 நிதிக்கூற்றுகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று தளவாடங்கள், மோட்டார் வாகனங்கள், வீட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் தேய்மானம் கணக்கிடுகையில் ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஏற்புடைய ஆண்டுகளில் தவறுதலாக ஒழுங்குமுறையில் ரூபா.1,340,370, ரூபா.2,289,402 மற்றும் ரூபா.446,412 ஐ குறைவாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த தேய்மானம் ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்புடையதாக ஒட்டுமொத்த தேய்மானத்தின் மொத்தமான ரூபா.37,820,871 ஆன தொகை முன்னரான ஆண்டுக்கு ஏற்புடையதாவதால் அதனை செவ்வையாக 2020 ஆம் ஆண்டு கணக்குகளில் முன்னரான ஆண்டின் சீராக்கலாக கணக்கு வைப்பதற்கு, நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறியத் தருகின்றேன்.

(ட) **அவதானிப்பு**

கூற்றுடன் இணங்கப்படுகிறது. அதன்படி கணக்குகளில் மேற்கொள்ள வேண்டிய சீராக்கல்கள் முன்னரான ஆண்டின் சீராக்கலாக மேற்கொள்வதற்கும், ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைவாக காண்பிக்கப்படும் ஒதுக்கீடுகள் 2020 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகளில் சீராக்குவதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ண) **அவதானிப்பு**

அம்பாந்தோட்டை நிருவாக தொகுதிக்கு அண்மித்து நிருமாணிக்கப்பட்ட உத்தியோகபூர்வ இலங்களின் தொகுதியில் வருமானங்கள் வரை கணக்கு வைக்கப்படுவது, அம்பாந்தோட்டை பேருந்து நிறுத்துமிட அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழாகும்.(கருத்திட்ட இலக்கம் 9590200)

எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டில் இந்த வீடு அலகுகளின் உரித்து அதிகார சபையிடம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தற்போது அவற்றின் உரித்து நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் உரித்தாகியுள்ளது.

(ஊ) **அவதானிப்பு**

அதிகார சபையால் பயன்படுத்தப்படும் புதிய கணக்கீட்டு முறைமைக்கு மாறுகின்றபோது, குறித்த முறைமைக்கு மேற்கொள்ள வேண்டிய மேம்படுத்தல்களை செய்வதற்கு தேவையான மேம்படுத்தல்களை மேற்கொள்வதற்கு போதியளவு காலம் எடுத்தமையாலும் இணையத்துடன் நேரடி தொடர்புமூலம் திட்டங்களுக்கான அனுமதி பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கும் முறைமை அறிமுகப்படுத்தியமையாலும் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கும் செயற்பாட்டில் சில தாமதங்கள் 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்டது. எவ்வாறாயினும், தற்போது தாமதம் தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணத்தால் 2019.12.31 ஆம் திகதியில் ரூபா.10,214,264 பெறுமதியுள்ள வங்கி கட்டணங்கள், காசோலை கட்டணங்கள் மற்றும் பணம் மாற்றல்கள் மீளாய்விற்கான ஆண்டில் பணப் பேரேடில் செலவு வைக்கப்படவில்லை. ஆயினும் அதற்கான சீராக்கல்கள் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(எ) **அவதானிப்பு**

பின்வரும் வங்கி கணக்குகள் கடந்த 05 ஆண்டு காலப்பகுதிக்கள் செயற்படுத்தவில்லை என்பதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபையிடம் அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர் ஏற்புடைய வங்கி கணக்குகளை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

	வங்கி கணக்கின் பெயர் வருமானம் திரட்டும் கணக்குகள்	அவதானிப்பு
01	இலங்கை வங்கி – மஹியங்கனை கிளை	இந்தக் கணக்கு அதிகாரசபையின் முகாமைத்துவத்தால் வாடிவீடு முகாமைத்துவம் செய்தல் மற்றும் பராமரித்தல் என்பதற்கு பூரண இணை நிறுவனமாக தாபிக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் நிறுவனத்திடம், மஹியங்கனை வாடிவீடு கையளிக்கும் வரை அதன் வருமானம் சேர்ப்பதற்காக அதிகாரசபையால் பயன்படுத்தப்பட்டது. வரையறுக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன், இந்த பேரேடு கணக்கினை ஒப்பிடப்பட்டு வங்கி கணக்கினை மூடிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
02	இலங்கை வங்கி – அம்பாந்தோட்டை முன்னணி கருத்திட்டம்	இந்தக் கணக்கு அதிகார சபையின் பிரதான வங்கி கணக்கு ஊடாக அம்பாந்தோட்டை முதன்மை கருத்திட்டம் பொருட்டு மேற்கொண்ட சில்லறை பணம் பரிமாற்ற கணக்கின் பொருட்டு அதிகார சபையால் பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினம், 2010 ஆம் ஆண்டில் அந்த செயற்பாட்டினை நிறுத்தப்பட்டள்ளதுடன், 2016.06.30 ஆம் திகதி வரை வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

		தற்போது இந்தக் கணக்கு பயன்படுத்துவதில்லை என்பதுடன், அதிகாரச்சபையின் கணக்குப் புத்தகங்களில் உள்ள இந்தக் கணக்கு மீதி ஒப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும், முகாமைத்துவ சபையின் அனுமதி பெறப்பட்டு வங்கி கணக்கினை மூடுவதற்கும், நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கிடைக்கப்பறெ வேண்டிய மீதி தொகையை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். .
03	இலங்கை வங்கி – யாழ்ப்பாணக் கிளை	2013 ஆம் ஆண்டில் சிறிய நடுத்தர நகர அபவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் கருத்திட்டங்களுக்கான செலுத்தல்களை மேற்கொள்வதற்கு இந்த நடைமுறை கணக்கு திறக்கப்பட்டது. இலங்கை வங்கி – யாழ்ப்பாண கிளையில் பராமரிக்கப்பட்ட இந்த நடைமுறை கணக்கு இலக்கம் “73485688” இல் ஆண்டில் எந்தவொரு கொடுக்கல்வாங்கலும் நடைபெறவில்லை என்று அவதானிக்கப்பட்டதுடன், 2021.12.31 ஆம் திகதி காண்பிக்கப்பட்டுள்ள மீதி ரூபா. 20,801.80 ஆகும். மேற்படி நிகழ்ச்சித்திட்டம் தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளதால் நடைமுறை கணக்கினை மூடிவிட்டு எஞ்சிய மீதியை அதிகாரசபையின் பிரதான அலுவலகத்தில் நடைமுறை கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
04	இலங்கை வங்கி – அதிதரக் கிளை இரத்தினபுரி	இலங்கை வங்கி - இரத்தினபுரி கிளையில் பராமரிக்கப்படுகின்ற “0073516300" நடைமுறை கணக்கு செயற்படாத கணக்காக காண்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்கு அதிகாரசபையால் தற்போது பயன்படுத்தாத படியால், இந்தக் கணக்கினை மூடப்பட்டு அதில் உள்ள மீதி ரூபா.1,500 ஆன தொகை அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் நடைமுறை கணக்கில் மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
05	இலங்கை வங்கி – கடனீட்டு கணக்கு	இந்த இரண்டு வங்கி கணக்குகளையும் பிரதானமாக 2010 இல் வெளியிடப்பட்டு, 2015 இல் செலுத்தி முடிவுறுத்தியுள்ள 10 பில்லியன் ரூபா கடனீட்டு வழங்குதலின் வங்கி நடவடிக்கைகளின் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நாட்டில் தற்கால நிலைமை மற்றும் கடனீட்டுப்பத்திரம் வழங்கும் செய்றபாடுகளை கவனத்தில் கொண்டும், இந்த இரண்டு கணக்கும் தற்போது செயற்படாதபடியாலும் முகாமைத்துவ சபையின் அனுமதி பெற்றுக்கொண்டு மேற்படி இரண்டு நடைமுறை கணக்குகளையும் மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
06	இலங்கை வங்கி – கடனீட்டு வட்டிக் கணக்கு	

07	இலங்கை வங்கி – அம்பாந்தோட்டை கிளை (ரெஸ்ட் ஹவுஸ்)	1999 ஆம் ஆண்டில் இந்தக் கணக்கு அம்பாந்தோட்டை பிரதேசத்தின் நகர அபிவிருத்தி அதிகார சபையால் குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்கின்ற வாடகை வருமானம் திரட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அம்பாந்தோட்டை வாடிவீட்டின் நாளாந்த வருமானம் வைப்புச் செய்வதற்காக இந்த கணக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2014 ஆம் அண்டில் அம்பாந்தோட்டை வாடிவீடு அம்பாந்தோட்டை மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டு-ள்ளதுடன், இந்த கணக்கில் எஞ்சிய மீதியான ரூபா201,368.32 தொகை அதிகார சபையின் இலங்கை வங்கி கணக்கிற்கு (கணக்கு இலக்கம் 1534) மாற்றுவதற்கு 2020 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கை மேற்கொளள்ளப்படுகிறது. அதேபோன்று வரையறுக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் நிறுவனம் மற்றும் அதிகாரசபையின் அம்பாந்தோட்டை உப அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன், கணக்குப் புத்தகங்களின் மீதிகள் ஒப்பிடப்பட்டு இந்த வங்கி கணக்கினை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ඇ) **<u>அவதானிப்பு</u>**

5290200 - Modarawila Development Project - 45,920,000.00

கருத்திட்ட இலக்கம் 5390200 இன்கீழ் மோதரவில அபிவிருத்தி கருத்திட்டம் 99 ஆண்டு குத்தகை அடிப்படையின்கீழ் 10 ஏக்கர் அளவிலான காணி 99 அண்டு குத்தகை அடிப்படையில் 1994.01.12 ஆம் திகதி வழங்கியிருந்ததுடன், அபிவிருத்தி நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொள்ளாமை காரணமாக 2000.11.30 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபை கூட்டத்தில் குத்தகை பொறுப்பை இரத்துச் செய்வதற்கும், கம்பெனியால் அதிகாரசபையிடம் செலுத்தப்பட்டிருந்த ரூபா.மில்லியன் தொகை பின்வருமாறு செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (இணைப்பு 04)

கம்பெனியால் அதிகார சபையிடம் செலுத்தப்பட்டுள்ள தொகை	
B19298, 1994.01.11 -	10,000,000.00
B24651, 1994.06.16 -	19,000,000.00
	29,000,000.00
<u>கழிப்பு</u> – கம்பெனியிடம் மீள செலுத்திய தொகை	
001302 – 2003.02.24	<u>(7,000,000.00)</u>
005106 – 2003.07.17	
கழிப்பு – குத்தகையாக அதிகாரசபையிடம்	22,000,000.00
பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட தொகை	<u>(6,080,000.00)</u>
2017.11.24 ஆம் திகதி 011699 மூலம் கம்பெனியிடம் மேற்கொண்ட இறுதி	<u>15,920,000.00</u>

கொடுப்பனவு

மேற்படி செலுத்தப்பட்ட இறுதி கொடுப்பனவு (இணைப்பு 05) செவ்வையாக கொடுக்கல்வாங்கல் செய்பவரின் குறியீட்டு இலக்கத்தறிகு கணக்கு

வைக்கப்பட்டுள்ளதுடன், அது பிற்போடப்பட்ட குத்தகை பதிவேடு இற்றைப்படுத்தாமை காரணமாக பற்று மீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

8211000 – Jayawardhanagama Housing Scheme – 23,989.00

  பெறுகைப் பிரிவுக்கு பெறுகை நடவடிக்கைகளுக்காக கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் விலை மனுக்களை திறக்கும் குழு நியமிக்கப்பட்டு பணிப்பாளரினால் பணிப்பாளரின் அனுமதி பெற்றுக் கொள்ளல் பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது. அக் கடிதங்கள் ஏற்புடைய கடிதக் கோப்புக்களுள் உள்ளடக்கப்படுவதுடன் அவ்வாறு ஏற்புடைய கடிதக் கோப்புக்களில் உள்ளடக்குவதில் குறைபாடுகள் நிகழாமல் இருப்பதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகின்றேன்.

- **அவதானிப்பு**

  இக் குறைபாடுகளை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன்.

- **அவதானிப்பு**

செயலாற்றுகை பிணைமுறி பெற்றுக் கொள்ளப்பட்ட போது இடம்பெற்றுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **அவதானிப்பு**

  எதிர்காலத்தில் அப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகின்றேன்

- **அவதானிப்பு**

  எதிர்காலத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு அறிவித்து விலைகளை செம்மையாக்குதல் தொடர்பான விவரமான ஆவணங்களை தொழிநுட்ப மதிப்பீட்டு அறிக்கைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன்.

- **அவதானிப்பு**

மதிப்பீட்டு செயன்முறையானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகள் கேள்விப் பத்திர சபை மூலம் அனுமதிக்கப்படுகிறது. ஆகவே பொறியியல் மதிப்பீட்டை விட குறிப்பிடத்தக்க அளவு சதவீதம் குறைவான விலைகளைக் கொண்ட விலை மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பான தீர்மானம் கேள்விப் பத்திர சபை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

- **அவதானிப்பு**

  தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையில் மதிப்பீட்டு முறை மற்றும் தீர்மானம் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்குமாறு எதிர்காலத்தில் உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- **அவதானிப்பு**

  பொறியியல் மதிப்பீட்டை விடவும் 10% அளவு ஒப்பந்தங்களை வழங்க முடியும் என்பதுடன் ஏற்புடைய ஒப்பந்தமானது பெறுகைக் குழுவின் அனுமதியுடன் வழங்கப்படுகிறது.

- **அவதானிப்பு**

  தற்போது பகிரங்க விலைமனு கோரல் மூலம் காணிகள் நீண்ட காலத்தில் பராதீனப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஊ) **அவதானிப்பு**

2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக **ERP** முறையினை இடைநிறுத்துவதற்கு அதன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சிபாரிசு செய்ததுடன் அதிகார சபையின் கணக்கு நடவடிக்கைகளைப் பேணிச் செல்வதற்கு கணனி முறைமை ஒன்றின் தேவைப்பாடு பாரதூரமான முறையில் உணரப்பட்டதன் காரணமாக புதிய கணக்கீட்டு முறைமை ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக **ERP** முறைமை தாபிக்கப்பட்டது**.**

(ஈ) **அவதானிப்பு**

பணிகள்	அறிக்கைகள் பெற்றுக் கொள்ளல்
2019.12.31 ஆம் திகதில் விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று	விரிவான வருமானக் கூற்றைத் தயாரிக்கும் பணியில் சுமார் 95% பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 5% பணிகளைத் துரிதமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிதி நிலைமைக் கூற்றின் 85% பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் நிலவிய கொவிட் தெற்று நோய் நிலமை காரணமாக எஞ்சிய பணிகளை நிறைவு செய்யும் பணிகள் நீண்டு சென்றதுடன் மிகவும் அவசரமாக அவற்றையும் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கின்றேன்
கடன்படுநர் / கடன்கொடுநர் காலப் பகுப்பாய்வு கடன்படுநர் / கடன்கொடுநர் இணக்கம்	தற்போது வாடகைக் கடன்படுனர்கள் தொடர்பான காலப் பகுப்பாய்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் 2022 ஆம் ஆண்டு முதல் ஏனைய கடன்படுநர் மற்றும் கடன்கொடுநர் காலப் பகுப்பாய்வு மற்றும் கடன்கொடுனர் இணக்க அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிகளை முறைமை தயாரிப்பாளரைக் கொண்டு மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத் தருகின்றேன்.
வருடாந்த தேய்வு கணக்கிடல்	2020 ஆம் ஆண்டு முதல் ஆதனப் பொறித் தொகுதி மற்றும் பொதுத் உபகரணங்கள் உள்ளடங்கிய ஒவ்வொரு சொத்துக்கும் தேய்மானங்களை ஏற்பாடு செய்வதற்கான கணக்கு இலக்கங்குள் வழங்கப்பட்டுள்ளதுடன் முறைமைத் தயாரிப்பாளர்களுடன் கலந்துரையாடி இது தொடர்பாக கணக்கிடும் பட்டியலை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
முதலீடு செய்யப்பட்ட ஆதனப் பட்டியல்	முறைமை ஆரம்பத்தில் அதிகார சபையினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முறைமை மூலம் முதலீடு செய்யப்பட்ட ஆதனங்கள் தொடர்பான ஆவணத்தைப்

	பெற்றுக் கொள்ளும் ஆற்றல் உள்ளது. ஆயினும் நீங்கள் சுட்டிக் காட்டியவாறு அந்த ஆவணத்தில் காணப்பட்ட தகவல்களின் பற்றாக்குறை காரணமாக தற்போது உங்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளவாறு அதிகார சபையின் 2019 ஆம் ஆண்டு தொடர்பான காணி மற்றும் கட்டிட மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் காணிப் பிரிவு மூலம் காணி மற்றும் கட்டிட ஆவணங்களை (Land Register) இற்றைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் பிரகாரம் அப் பணிகள் நிறைவடைந்த பின்னர் அத் தரவுகளையும் பயன்படுத்தி முறைமை தயாரிப்பாளருடன் முதலீடு செய்யப்பட்ட ஆதன அட்டவணையினை கணக்கீட்டு முறைமை மூலம் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பணிகளைத் துரிதமாக மேற்கொள்வதாக அறியத் தர விரும்புகின்றேன்
VAT Schedules (உப அலுவலகங்கள் உள்ளிட்ட)	புதிய கணக்கீட்டு முறைமை மூலம் VAT Schedules பெற்றுக்கொள்ள முடியும்.
வழங்கப்பட்ட கால எல்லைக்கான நிலையான வைப்பு பட்டியல்	கணக்கிட்டு முறைமையினை வழங்கிய கம்பனியுடன் கலந்துரையாடி ஏற்புடைய அறிக்கையினைப் பெற்றுக்கொள்ள முடியுமானவாறு முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
மதிப்பிழந்த காசோலைப் பட்டியல்	கணக்கீட்டு முறைமை மூலம் மதிப்பிழந்த காசோலைகளின் உபஅட்டவணையினைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் காணப்படுவதுடன் அவ்வாறு பெறப்படும் உப அட்டவணையில் காசோலைகளை மதிப்பிழக்கச் செய்தல் தொடர்பான அனைத்து விபரங்களும் (காசோலை இலக்கம், வாடிக்கையாளர் இலக்கம் மற்றும் திகதி போன்றன) உள்ளடக்கப்பட்ட போதும் காசோலைகளை மதிப்பிழக்கச் செய்தலுக்கான காரணம் அந்த உப அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை. முறைமை வழங்குனரைக் கொண்டு இது தொடர்பாக காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்குத் தேவையான பணிகளை துரிதமாக மேற்கொள்வதாக அறியத் தர விரும்புகிறேன்
வங்கி இணக்கக் கூற்று	அதிகார சபையின் பிரதான வங்கி கணக்கு இலங்கை வங்கியின் கணக்கு இலக்கமான 1534 இற்கான வங்கி இணக்க அறிக்கையினை கணக்கீட்டு முறைமை ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

(ஒ) **அவதானிப்பு**

1987 ஆம் ஆண்டு முதல் அதிகார சபையின் நிதிப்பிரிவு, வழங்கல் பிரிவு மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவின் அனைத்து நிதிக் கொடுக்க நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளை சேமித்து வைத்தல் **Wang Vs** முறைமையில் மேற்கொள்ளப்பட்டதுடன் **DMS** நிறுவனம் அந்த முறைமை தொடர்பான பராமரிப்பு பணிகளை மேற்கொண்டது.

எவ்வாறாயினும் பின்னர் அதிகார சபையின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட கொள்ளளவு ரீதியான அதிகரிப்பு மற்றும் தற்போது காணப்படும் முறைமையின் கொள்ளளவை அதிகரிப்பதற்கு முடியாது போனமை மற்றும் புதிய தொழில்நுட்ப பிரவேசம் காரணமாக முறைமையின் உதிரிப் பாகங்களில் காணப்பட்ட பற்றாக்குறை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக புதிய கணக்கீட்டு முறைமையின் பிரவேசித்ததற்கான தேவை ஏற்பட்டது. அதன் பிரகாரம் நிதிப் பிரிவு, வழங்கல் பிரிவு மற்றும் சொத்து முகாமைப் பிரிவின் கணக்கீட்டு தேவைப்பாடுகளை இனம் கண்டு அதிகார சபையின் பெறுகைப் பிரிவினால் கணக்கீட்டுத் தகவல் முறைமைத் துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் இருந்து விலைமனுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும் கணக்கீட்டு முறைமையினை நடைமுறைப்படுத்திய போது இந்த அதிகார சபையினால் இனம் காணப்பட்ட புதிய அம்சங்கள் **(new features)** அவர்களைக் கொண்டு நிறைவேற்றப்பட்டன. அதன் போது மேற்குறித்த விடய எல்லை தொடர்பான ஆரம்ப விலைமனு கோரப்பட்ட போது இனம் காணப்பட்ட விவரக் கூற்றுக்களின் பிரகாரம் கூறுவிலை கோரல் பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட்டதுடன் குறித்த விவரக் கூற்றுக்களின் கணக்கீட்டு முறைமையில் அடிப்படையாக தேவையான உருப்படிகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே கணக்கீட்டு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள **New features** எனப் பெயரிடப்பட்டுள்ள அனைத்து உருப்படிகளும் எம்மால் ஆரம்ப விலைமனு கோரும் போது விவரக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்ட உருப்படிகள் அல்ல என்பதனை அறியத் தர விரும்புகின்றோம். அதாவது கொடுக்கல் வாங்கல்களின் கொள்ளளவு அதிகரித்ததனைத் தொடர்ந்து கணக்கீட்டு முறைமையினை ஆரம்பித்து நடாத்திச் செல்லும் போது எம்மால் மேற்குறித்த நிறுவனம் மூலம் ஆரம்ப விலை மனுவில் உள்ளடக்கப்படாத பல பணிகள் புதிதாக நிறைவேற்றப்பட்டதுடன் அவ்வாறு நிறைவேற்றப்பட்ட பணிகள் சில பணிகள் பின்வருமாறு.

- **கொடுக்கல் வாங்கல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான பல்வேறு வகையான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல்**
- **கொடுக்கல் வாங்கல்களை கணக்குகளில் பதியும் போது ஏற்படுகின்ற தவறுகளை மீண்டும் சரி செய்வதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் (உதா. Voucher approval edit / Journal entry approve edit)**
- **கொடுப்பனவு வவுச்சர்களை கணக்கீட்டு முறைமை ஊடாக உருவாக்குதல் (உதா. Vehicle hiring payment voucher creation / Membership fee voucher creation)**
- **உப அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு வவுச்சர்களை மீள்நிரப்பும் செயன்முறையினை கணக்கீட்டு முறைமை மூலம் மேற்கொள்ளல் போன்ற பல்வேறு பணிகளை நிறைவேற்றுதல்.**

அவ்வாறே **upgrade** எனப் பெயரிடப்பட்டுள்ள 45 உருப்படிகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறு கணக்கீட்டு முறைமையின் பணிகளை ஆரம்பித்து நடாத்திச் செல்லும் போது குறித்த உருப்படியுடன் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றும் உத்தியோகத்தர்களினால் கணனி முறைமை தயாரித்தல் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் கணனி முறைமை தயாரிப்பாளருக்கும் நிதிப் பிரிவு மற்றும் சொத்து முகாமைப் பிரிவு

உத்தியோகத்தர்களுக்கும் இடையில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது சுட்டிக்காட்டப்பட்டவாறு மற்றும் முன்மொழியப்பட்டவாறு அந்தப் பணிகளை இலகுவாகவும் செயற்திறனுடனும் மேற்கொள்வதற்காக மேல்மட்ட உத்தியோகத்தர்களின் அனுமதியுடன் முறைமை தயாரிப்பாளரைக் கொண்டு நிறைவேற்றப்பட்ட பணிகள் ஆகும். இவ்வாறு இந்த உருப்படிகளை **upgrade** செய்வதன் மூலம் அதிகார சபையினால் எதிர்பார்க்கப்பட்ட விதமாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் இப் பணிகளை இலகுவாக நிறைவேற்றுவதன் மூலம் அப் பணிகளின் செம்மைத் தன்மை ஏற்கனவே காணப்பட்ட முறைமையினுள் இனம் காணப்பட்ட குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு இதன் மூலம் முடிந்தது.

அதன் பிரகாரம் மேற்குறித்த மேலதிகப் பணிகள் முறைமையினை வழங்கிய கம்பனி மூலம் வழங்கப்பட்ட பின்னர் மேலதிக செலவாக **5,000,000/-** ரூபாய் செலுத்துமாறு அதிகார சபையிடம் கோரப்பட்டது. அதன் போது அது தொடர்பாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் இப்பணிகள் தொடர்பாக மேலதிகமாக செலவு செய்யப்பட்ட காலத்தை கருத்திற் கொண்டு அப் பணிகளை நிறைவேற்றிய அதிகார சபையின் உத்தியோகத்தர்களிடம் அது தொடர்பான வேலை உருப்படிகளின் அளவு, வேலையினை நிறைவு செய்யும் சதவீதம் மற்றும் ஒவ்வொரு பிரிவிலும் மேலதிக வேலைகளுக்கான சேவை வழங்கும் கம்பனியினால் விதிக்கப்பட்ட செலவு ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்டு **4,839,188.17** ரூபாய் தொகை அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் அனுமதியின் கீழ் செலுத்தப்பட்டது.

(ඊ) **<u>அவதானிப்பு</u>**

அதிகார சபையினால் கணக்கீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவு செய்து ஒப்படைத்தல் உரிய கால எல்லைக்குள் மேற்கொள்ளப்படுவதனை தாமதப்படுத்தியமை காரணமாக செயன்முறையினை நிறைவு செய்து தருமாறு அவர்களுக்கு அடிக்கடி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அப்போது அதிகார சபையில் கடமை புரிந்த செயற்பாட்டுப் பணிப்பாளரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் அவர்கள் 2018.05.16 ஆம் திகதி ஏற்புடைய நிகழ்ச்சித் திட்டத்தை அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். அதன் பிரகாரம் அன்றைய தினம் முதல் ஓராண்டு காலத்தில் அவர்களது பராமரிப்பு காலம் நிறைவடைந்த பின்னர் 2020 ஆம் ஆண்டு முதல் அந்த கம்பனியுடன் பராமரிப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் அறியத் தருகின்றேன்.

2.3

(ඇ) **<u>அவதானிப்பு</u>**

2018 ஆம் ஆண்டு புறக்கோட்டை சார்மஸ் தானியக் களஞ்சியக் காணியில் வாகன தரிப்பிடத்தினை நடாத்திச் செல்வதற்கு **3,400,000/-** ரூபா அடிப்படையில் விலை மனு கோரப்பட்ட போது கிடைக்கப்பெற்ற **5,014,600/-** ரூபா ஆகக்கூடிய விலையில் வாகன தரிப்பிடங்களைப் பெற்றுக் கொள்வதற்கு விலைமனுக்களை சமர்ப்பித்த நிறுவனம் முன்வராத காரணத்தால் நான்காவது இடத்தில் விலைமனுக்களைச் சமர்ப்பித்த வேர்ல்ட் கெப்பிட்டல் சென்டர் லிமிட்டட் நிறுவனம் மூலம் வாகன தரிப்பிடத்திற்கான ஆகக் கூடிய விண்ணப்பதாரரின் தொகையின் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு முன்வந்ததுடன் 2018.11.28 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் கீழ் குறித்த நிறுவனத்திற்கு காணியினை வாகன தரிப்பிடத்தை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டது.

2018.12.05 ஆம் திகதிய கடிதம் மூலம் தற்காலிக உணவுச் சாவடிகள், வாகனம் கழுவும் இடம், மற்றும் பொழுது போக்கு வசதிகளை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டதுடன் குறித்த அனுமதி 2019.02.13 ஆம் திகதிய கடிதம் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எவ்வாறாயினும் குறித்த செயற்பாட்டாளருக்கு வாகன தரிப்பட்டத்தை நடாத்திச் செல்வதற்கான குத்தகை அனுமதி இந்த அதிகார சபையினால் 2019.07.03 ஆம் திகதிய கடிதம் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் விலை மனுக்கள் கோரப்பட்ட பின்னர் தற்போது உரிய சார்மஸ் தானியக் களஞ்சிய காணியில் வாகனத் தரிப்பிடம் **4,955,500/-** ரூபா (வரி தவிர்ந்த) மாதாந்த வாடகைக்கு வேறொரு டெண்டர்தாரருக்கு 02 ஆண்டு கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) **அவதானிப்பு**

இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில்,

- அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுப் பெருமதி (2011 ஆம் ஆண்டு - 99 ஆண்டுகள்) ரூ.**2,785,000,000.00**
- குத்தகையாளர் செலுத்திய தொகை ரூ. **577,000,000.00.**
- காணி கையேற்றல் / இழப்பீடு வழங்குதல் மற்றும் குத்தகைத் தொகையினை வழங்குதல் 2016 ஆம் ஆண்டு வரை தாமதப்படுத்தப்பட்டுள்ளது.
- அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு அரச மதிப்பீட்டாளரின் 99 ஆண்டு கால குத்தகைப் பெறுமதி மீளப் பெறப்பட்டுள்ளது. அது ரூ. **3,620,000,000.00** ஆகும்.
- குத்தகையாளருக்கு 2011 ஆம் ஆண்டின் குத்தகைப் பெறுமதி அன்றி 2016 ஆம் ஆண்டின் குத்தகைப் பெறுமதியை செலுத்துமாறு அறிவிக்கப்பட்ட போதும் அவர் 577 மில்லியன் ரூபாவுக்கான வட்டியினை குறைக்குமாறு மேன்முறையீடு செய்துள்ளதுடன் அதன் பிரகாரம் கணக்கிடப்பட்டு குறைக்கப்பட்ட வட்டித் தொகை ரூ. **330,249,000.00** ஆகும்.

மொத்த குத்தகைத் தொகையின் பெறுமதியில் இதற்கு முன்னர் செலுத்தப்பட்ட 577 மில்லியன் ரூபாய் மற்றும் குறைக்கப்பட்ட வட்டி தவிர்ந்த மீதித் தொகையினை குத்தகையாளருக்கு செலுத்திய போதும் வட்டியினை குறைத்தல் தொடர்பில் முறையான அனுமதி பெறப்படாமை காரணமாக அமைச்சின் செயலாளரினால் இத் தொகையினை அறவிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

சரி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை

ஆயினும் குத்தகையாளர் அதற்கு இணங்காது கடந்த காலத்தில் செயற்பட்ட போதும் காணியின் அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தினை நீடிப்புச் செய்யும் தேவையின் காரணமாக அதிகார சபையின் ஆரம்ப அனுமதி கோரப்பட்டது. இதன் போது இது தொடர்பாக அதிகார சபையின் முகாமைத்துவ சபைக்கு அறிக்கை சமர்ப்பித்து அபிவிருத்தி அனுமதி பத்திரம் மற்றும் அபிவிருத்திக் காலத்தினை 2025 ஆம் ஆண்டு வரை நீடிப்புச் செய்வதற்காக பின்வருமாறு நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

1. குத்தகையாளரால் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய **330,249,000.00** மில்லியன் ரூபாய் தொகையினை (அரச வரித் தொகையுடன் ரூ. **356,668,920.00)** உடனடியாக அதிகார சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
2. மேலே (1) நிபந்தனையை நிறைவு செய்த பின்னர் மாத்திரம் அபிவிருத்தி கால எல்லையினை 2025.01.31 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்குறித்த முகாமைத்துவ சபை தீர்மானம் ஏற்கனவே குத்தகையாளருக்கு (2022 மார்ச் மாதம்) அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி அக்

கடிதத்துக்கான பதில் கடிதம் அனுப்பி மீண்டும் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்ட ஆலோசனை பெறப்பட்டு முகாமைத்துவ சபைக்கு முன்வைத்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ඇ) **அவதானிப்பு**

2015 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதமளவில் புதிய ஒரு அரசாங்கம் பதவி ஏற்றதைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட புதிய முகாமைத்துவம் மூலம் கருத்திட்டத்திற்காக நிதி ஈடுபடுத்தல் இடைநிறுத்தப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டு வரை அதன் பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய முகாமைத்துவம் இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் தனியார் துறையின் நிதி பங்களிப்புடன் மற்றும் அரசாங்கத்தின் தனிப்பட்ட முதலீடாக **(PPP Model)** எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகிறது.

(ඈ) **அவதானிப்பு**

1. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் **(NBRO)** தொழில்நுட்ப விஞ்ஞான ஆலோசனைகள் மற்றும் மேற்பார்வையின் கீழ் கழிவுப்பொருள் மலையினை நெருக்குதல் செய்தல் அதன் கழிவு நீரை **(Leachate)** முறையான விதத்தில் சேகரிப்பதற்கான குழாய் முறைமையினை நிர்மாணிக்கும் **I** ஆம் கட்டத்தினை பூர்த்தி செய்தல் மற்றும் உள்ளக ரீதியில் உற்பத்தி செய்யப்படும் பாதகமான வாயுக்களை சூழலுக்கு விடுவிப்பதற்காக முன்மொழியப்பட்ட 31 குழாய்களுள் **(Gas Well)** 08 குழாய்களை நிறுவுதல் மற்றும் கழிவுப் பொருள் மலையில் சுமார் 5% பகுதியினை முன்னோடி கருத்துத்திட்டமாக மண் தட்டினால் உள்ளடக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

   அதன் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை தற்போது சுமார் 455 மில்லியன் ரூபா செலவினை மேற்கொண்டுள்ளது.

2. அக்கருத் திட்டத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள 101 ஆம் இலக்க தோட்டத்தில் சட்டரீதியற்ற விதமாக குடியிருக்கும் 138 குடும்பங்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கொலன்னாவையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொடர் மாடி வீட்டு கருத்திட்டத்தில் இருந்து சுமார் 700 மில்லியன் 'ரூபாய் பெறுமதியான வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

3. இக் கருத்திட்டத்தின் மிகுதிப் பணிகளை நிறைவு செய்தல் அரச மற்றும் தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் **(Public Private Partnership/PPP)** மேற்கொள்வதற்கு தேவையான பெறுகை செயன்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இவ்வாறான கருத்திட்ட நிர்மாணிப்புக்கள் தொடர்பான அனுபவம் மற்றும் நிதி ரீதியான ஆற்றலுடன் கூடிய முதலீட்டாளர்கள் ஊடாக கருத்திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணிகளை பராதீனப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் இந்த நகர பூங்காவின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதும் காணிகளை கையேற்பதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக திட்டமிடப்பட்டவாறு முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்ய முடியாது போனது.

4. கொலன்னாவ பிரதேசத்தில் குறைபாடாக காணப்படும் மற்றும் இக் கருத்திட்டத்தை அண்டியதாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள பொது மைதானம், சனசமூக

நிலையம், நீர்வடிகால் மற்றும் வீதி முறைமைகளை அபிவிருத்தி செய்தல், நடைபாதை மற்றும் ஏனைய பொது வசதிகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

5. இந்த கழிவுப் பொருள் மலையினை முற்றுமுழுதாக மீள் சுழற்சிக்கு உட்படுத்தி மேற்குறிப்பிடப்பட்டவாறு பொது வசதிகளுடன் கூடிய விநியோக **(Logistic)** நிலையமாக இந்த ஒட்டுமொத்த நிலப் பிரதேசத்தினை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டு சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள முதலீட்டுக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆற்றல் பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

(ஒ) **அவதானிப்பு**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனை சேவையின் கீழ் ஹம்பாந்தோட்டை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் மாகம் ருகுணுபுற சர்வதேச மாநாட்டு மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அரச நிதியத்தில் இருந்து **3,830,874,596** ரூபாய் மற்றும் வெளிநாட்டு கடன்களின் கீழ் 6.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையத்தைப் பேணி செல்வதற்காக 2017-2019 ஆம் ஆண்டு வரை **75,889,769.97** ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன் அக் காலத்திற்கான வருமானமாக **15,896,360** ரூபாய் உழைக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டில் கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்ட பின்னர் ஏற்புடைய நிறுவனம் ஒன்றுக்கு அதனை ஒப்படைப்பதற்கு திட்டமிடப்பட்டதுடன் உரிய கையளிப்பு மேற்கொள்ளப்படும் வரை முகாமைத்துவப் பணிகளை நடாத்திச் செல்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு நேர்ந்துள்ளது.

(ஓ) . **அவதானிப்பு**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான குறிக்கோள் யாதெனில் பிரகனப்படுத்தப்பட்டுள்ள நகர பிரதேசங்களுக்கான பொருளாதார, சமூக பௌதீக மற்றும் சூழல் ஆகிய பிரிவுகள் ஒன்றிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல் மற்றும் அப் பிரதேசங்களை பௌதீக ரீதியாக அபிவிருத்தி செய்தல் ஆகும். அதன் பிரகாரம் கொழும்பு நகர்ப்புற பிரதேசங்களை திட்டமிடப்பட்டவாறு அபிவிருத்தி செய்யும் நோக்கில் நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புகளுக்காக அனைத்து வசதிகளுடன் கூடிய தொடர் மாடி வீடுகளை வழங்கும் நிகழ்ச்சி திட்டம் நகர மறுவாழ்வு கருத்திட்டமாக அதிகார சபையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக கொழும்பு நகரத்தின் சனத் தொகையில் சுமார் 50 சதவீதம் வாழ்க்கை நடாத்தும் குறைந்த வசதிகளுடன் கூடிய குடியிருப்புக்களுக்கு பதிலாக சகல வசதிகளையும் கொண்ட வீடுகளை வழங்குதல் காணப்பட்டது.

அதன் கீழ் வீட்டு கருத்திட்ட நிர்மாணிப்புக்களை துரிதப்படுத்தி இனம் காணப்பட்ட குடியிருப்புக்களை மீள் தாபிப்பதற்காக வீடுகளை வழங்குதல் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது.

அதன் போது வீடமைப்புக் கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான காணிகள் இந்த அதிகார சபைக்கு சொந்தமானது அல்ல என்பதுடன் அக் காணிகளை இந்த அதிகார சபைக்கு கையேற்றல் மிக நீண்ட ஒரு செயன்முறையாக அமைந்துடன் அந்த செயன்முறையினை மேற்கொள்ளும் அதே வேளை வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்து மீள் தாபிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டது. இக் காலத்திற்குள் கூட்டு ஆதன சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் கூட்டு ஆதன சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதில் பின்வரும் செயல்முறைகள் பின்பற்றப்பட வேண்டி உள்ளது.

- காணியின் திட்டத்தினை அங்கீகரித்தல்

- கட்டட திட்டத்தினை அங்கீகரித்தல்
- கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் இசைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல்
- பின்னர் கூட்டு ஆதன திட்டத்தினை தயாரித்தல்
- கூட்டு ஆதனத் திட்டம் பிரதிகளுடன் ஏற்புடைய அனைத்து ஆவணங்களையும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையிடம் ஒப்படைத்தல்.
- அவர்களது ஆலோசனையின் கீழ் தேவையான மாற்றங்கள் காணப்படுமாயின் அவற்றை மேற்கொள்வதற்காக மீள ஒப்படைத்தல்

அதன் போது தேவையான அங்கீகார சான்றிதழ்கள் அவ்வந்த பிரிவுகள் மற்றும் நிறுவனங்களிடம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளும் போது தாமதங்கள் ஏற்பட்டன. அவ்வாறே சில வீட்டு கருத்திட்டங்களில் உத்தேச கட்டிடங்களுள் ஒரு கட்டடம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்ட போதும் ஏனைய கட்டிடங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக இசைவுச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளும் போது தாமதங்கள் ஏற்பட்டன

மேலும் தற்போது 22 வீட்டுக் கருத்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அக் கருத்திட்டங்களுள் தெமட்டகொடையில் அமைந்துள்ள "மிஹிந்துசென்புர" வீட்டுக் கருத்திட்டத்திற்கு கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதுடன் தற்பொழுது 06 வீட்டுக் கருத்திட்டங்களுக்கான கூட்டு ஆதன சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் ஏனைய வீட்டுக் கருத்திட்டங்களுக்காகவும் தேவையான அனுமதிகள் மற்றும் ஏற்புடைய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. அது தொடர்பான விவரமான அறிக்கை பின்வரும் அட்டவணையில் கட்டப்பட்டுள்ளது.

தற்போதைய முன்னேற்றம்		வீட்டுக் கருத்திட்டத்தின் பெயர்	ஏனைய விடயங்கள்
அனுமதி பெற்பட்ட வீட்டுக் கருத்திட்டங்கள்	**01**	மிஹிந்து சென்புர	காணி உரிமையாளர்களுக்கு உறுதி தயாரிப்பதற்குத் தேவையான சட்டத்தரணி கம்பனி ஒன்றை தெரிவு செய்வதற்கான ஆரம்ப பணிகள் எடுக்கப்பட்டு வருகிறது
அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஒப்படைத்துள்ள கருத்திட்டம்	**06**	ரன்திய உயன ஹெலமுத்து செவன சிரிசர யன சிரிமுத்து உயனமிஹிஜய செவன	இவற்றுள் 05 கருத்திட்டங்கள் தொடர்பில் குறைபாடுகள் மற்றும் தேவையான திருத்தம் கூட்டு ஆதன முகாமைத்துவ சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய வீட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பில் கூட்டு ஆதன முகாமைத்துவ சபையினால் கள ஆய்வு செய்யப்பட வேண்டி உள்ளது.
அனுமதிக்காக அனுப்ப வேண்டிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வரும் கருத்திட்டம்	**07**	லக்செத்த செவன சியபத் செவன ரன்மித்து செவன சத்ஹிரு சியசெத்த செவன மெத்சந்த செவனலக்முத்து செவன	கட்டட திட்டத்தின் திருத்தம் தொடர்பில் அனுமதி பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது
கள அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுக் கருத்திட்டம்	**03**	முவதொர உயன லக்சந்த செவன சிரிசந்த செவன	கூட்டு ஆதன முகாமைத்துவ சபைக்கு அனுப்ப முன்னர் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என பரீட்சிப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது.
கூட்டு ஆதன திட்ட வரைபடம் தயாரிக்கப்பட வேண்டியவ ீட்டுக் கருத்திட்டம்	**05**	புரதொர செவன ஜயமஹ செவனலக்ஹிரு செவன சங்ஹிந்த செவன கொலாம்தொட்ட சரசவி உயன	திட்டம் தயாரிப்பதற்காக கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கூட்டு ஆதன சான்றிதழ்களை பெற்றுக்கொண்ட பின்னர் இறுதி நோக்கமாக அமைய வேண்டியது யாதெனில், கூட்டு ஆதன சட்டத்தின் பிரகாரம் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை அமைத்தல் ஆகும். எவ்வாறாயினும் அதற்காக குடியிருப்பாளர்களுக்கும் ஆகக் குறைந்தது 50 சதவீதத்துக்கு சட்ட ரீதியான உரித்து உறுதி மூலம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒரு வீட்டு அழகுக்காக பேரளவுப் பெறுமதியினை விதித்து அது சமமான மாதாந்த தவணைகளில் 30 ஆண்டுகாலம் முழுவதும் வீட்டு குடியிருப்பாளர்களிடம் அறவிடப்பட்ட பின்னர் அதன் உரிமை உறுதி மூலம் ஒப்படைத்தல் தற்போது காணப்படும் முறையாக காணப்படுகிறது. ஆயினும் நகர மறுவாழ்வு கருத்திட்டத்திற்கு உதவும் கருத்திட்டம் மூலம் தற்போது நகர மறுவாழ்வு கருத்திட்டத்தில் வீடுகளை வழங்கும் கொள்கையினை மீண்டும் பின்னாய்வு செய்வதுடன் அவர்களது முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்ட பின்னர் அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் பற்றி கருத்திற் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது உள்ள முறையின் பிரகாரம் கூட்டு ஆதன திட்டத்துக்கு அனுமதி பெறப்பட்ட போதும் வீட்டு கருத்திட்டங்களின் முகாமைத்துவ பணிகளில் இருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுதலை பெற முடியாது.

(ඇ) **அவதானிப்பு**

டாட்டா ஹவுசிங் டெவலொப்மண்ட் தனியார் கம்பனி (Tata Housing Development Pvt. Ltd.) எஸ்.ஜி 18 ரியாலிட்டி தனியார் கம்பனி மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுக்கு இடையில் 2012 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி எட்டப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 07 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு டாட்டா ஹவுஸிங் டெவலப்மெண்ட் மற்றும் எஸ் ஜி 18 ஆகிய நிறுவனங்கள் இரண்டு ஆண்டு காலத்துக்காக தற்காலிக குடியிருப்புக்காக வாடகை தொகையினை செலுத்துவதற்கு அல்லது நிர்மாணப் பணிகள் நிறைவடையும் வரை ஆகிய இரண்டில் இறுதி சந்தர்ப்பம் வரை இழப்பீட்டுத் தொகையினை செலுத்துதல் தற்காலிக வாடகை தொகையினை செலுத்துதல் மற்றும் அகற்றுதல் தொடர்பான செலவுகளை செய்தல் ஆகிய அனைத்து அகற்றுதல்கள் மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் மீளளிப்பு செய்வதாகவும் மேற்குறித்த அனைத்து செலவுகளையும் 03 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. டாட்டா கம்பனியினால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட 03 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டு எஞ்சிய காலத்திற்கான வாடகைத் தொகையினை நிராகரித்துள்ளதனால் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேலதிகமாக செலவு செய்யப்பட்ட ஆலோசனை கட்டணம் மற்றும் தற்காலிக வாடகை தொகையினை அபிவிருத்தி கம்பனியிடம் இருந்து மீளளிப்பு செய்வதில் சிக்கல்கள் காணப்படுகிறது.

(ඈ) **அவதானிப்பு**

ஓவல் விவ் வீட்டுக் கருத்திட்டத்தில் கூட்டுறவு உறுதியினை வழங்குவதற்கு முன்னர் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் வழங்கப்படும் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு கொரோனா நிலைமை காரணமாக தாமதம் ஏற்பட்டது. அவ்வாறே கூட்டு ஆதன திட்டத்தில் சில சிக்கல் நிலைமைகளைத் தீர்த்து ஒப்படைத்தல் உறுதிகளை **(Transfer Deed)** ஏற்புடைய குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்கு முன்னர் கூட்டு ஆதன உறுதியினை காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டி உள்ளது.

அவ்வாறே அனைத்து குடியிருப்பார்களின் தகவல்களை உறுதி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு சிக்கலான செயல்முறை என்பதனால் அது குறிப்பிடத்தக்க அளவு காலம் செலவழியும் ஒரு பணியாக உள்ளது. தற்போது கூட்டு ஆதன உறுதிகளை பதிவு செய்தல் தொடர்பான அனைத்து பணிகளும் நிறைவடைந்துள்ளதுடன் காணிகளை பதிவு செய்யும் அலுவலகத்தில் அந்த உறுதிகள் பதிவு செய்யப்பட வேண்டி உள்ளது. அதன் பின்னர் குறிப்பிட்ட விற்பனை உறுதி மூலம் காணிகளை பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

(ඒ) **அவதானிப்பு**

ஸ்ரீ ஜாவர்தனபுர கோட்டை நிர்வாக தலைநகரமாக அபிவிருத்தி செய்யும் அரச கொள்கையின் பிரகாரம் குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள அரச துறை மற்றும் தனியார் துறைக்கு சொந்தமான குறைப் பயன்பாடு உடைய காணிகளை உச்ச அளவில் பயன்படுத்தும் தேவைப்பாடு மீது கவனம் செலுத்தி பொதுமக்களுக்கு சேவை வழங்கும் நிதி மற்றும் நிர்வாக நிறுவன கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான இடமாக 2013 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படாது காணப்பட்ட ராஜகிரிய ஸ்ரீ ஜாவர்தனபுர மாவட்டத்தில் வரி இலக்கம் 294, 300 மற்றும் **953/1** ஆம் இலக்க காணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இனம் காணப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் காணி கையேற்கும் சட்டத்தின் 38(அ) உப ஏற்பாடுகளின் கீழ் 2013.10.09 ஆம் திகதி பின்வரும் 03 காணித் துண்டுகள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையேற்கப்பட்டுள்ளது.

தொடர்	வரி இல.	காணி அளவு			ஆரம்ப உரிமையாளர்
		ஏக்கர்	ரூட்	பேர்ச்சஸ்	
1	294	0	1	2	திரு ஜீ.டீ.குலரத்ன
2	300	2	1	29	இலெக்ரோ ப்ளாஸ்டிக் குழுமம்.
3	953/1	0	1	12	வுரை லங்கா மின்சார (தனி) கம்பனி

மேற்குறிப்பிடப்பட்டவாறு கையேற்ட்கப்பட்ட காணிகளில் தொடர் இலக்கம் 02 இன் கீழ் காட்டப்பட்டுள்ள பாரியளவு காணித் துண்டினை கையளிக்குமாறு 2015 ஆம் ஆண்டில் காணியின் ஆரம்ப உரிமையாளர்களினால் அப்போதைய நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பான அமைச்சரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அமைச்சரின் அறிவுறுத்தலின் பிரகாரம் முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பின்னர் 2015.07.02 ஆம் திகதி ஆரம்ப உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அதற்கு அண்மையில் அமைந்துள்ள **953/1** ஆம் இலக்க வரை லங்கா மின்சார (தனியார்) கம்பனி உரிமை கோரிய காணியும் அந்த நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை கருத்துக் கொள்ளப்பட்டு முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் பின்னர் கையளிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் மேலே இரண்டாம் பந்தியில் உப இலக்கம் 02 மற்றும் 03 மூலம் காட்டப்பட்டுள்ள 2015 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்ட காணித் துண்டுகள் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு காணி எடுத்தல் சட்டத்தின் இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் மீண்டும் கையளிப்பதற்கு 2021.02.17 ஆம் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் கொழும்பு நகரை மையமாகக் கொண்ட உத்தேச நகர அபிவிருத்தி கருத்திட்டத்துக்காக அரச மற்றும் தனியார் துறையின் காணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையேற்று / கைளிப்பதற்காக **20/1607/306/035** ஆம் இலக்க மற்றும் 2020.10.12 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்காக 2020.10.19 ஆம் திகதி கூடிய அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த அமைச்சரவை அங்கீகாரத்தின் (இணைப்பு 20) உப இலக்கம் 42 இன் கீழ் அக் காணிகளை கையேப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன் பிரகாரம் இழப்பீடுகள் மற்றும் வட்டியாக சுமார் 213 மில்லியன் ரூபா செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. மற்றும் 2021.02.17 ஆம் திகதி கையேற்கப்பட்ட இரண்டு

காணித்துண்டுகள் உள்ளடங்கிய சுமார் 03 ஏக்கர் காணி எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ඒ) **அவதானிப்பு**

நகர அபிவிருத்திப் பணிகளுக்காக அதிகார சபையின் அதிகாரங்களின் பிரகாரம் காணி கையேற்றல் மேற்கொள்ளப்படுவதுடன் கையேற்கப்பட்ட நோக்கங்களுக்காக மாத்திரம் குறித்த காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக பராதீனப்படுத்தப்படுகிறது. அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரிய அனுமதிகளுக்கு உட்பட்டு காணிகளை கையேற்கும் நோக்கம் திருத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக காணிகள் கையேற்கப்படுகிறது.

நகர அபிவிருத்திப் பணிகளுக்காக கையேற்கப்பட்ட போதும் காணி உரிமையாளர்களின் எதிர்ப்பு காரணமாக காணிகளை பராதீனப்படுத்தல் நிகழும் சந்தர்ப்பங்களும் காணப்படுகிறது.

(I) மில்லேவ 10 ஏக்கர் தோட்டம் -

கையேற்கும் நோக்கம் கைத்தொழில் அபிவிருத்திப் பணிகளுக்காக எனக் காணப்பட்ட போதும் காலத்தின் தேவைக்கு அமைய அமைச்சரவை அனுமதியின் கீழ் கையேற்கும் நோக்கம் நகர அபிவிருத்திப் பணிகளுக்காக எனத் திருத்தப்பட்டு அதன் பிரகாரம் மில்லேவ வத்த காணி நகர அபிவிருத்தி பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

(II) **புறக்கோட்டை ஒல்கட் மாவத்தை சுதேசீ பிரிண்டர் நிறுவனத்துக்கு சொந்தமான 125 பேர்ச்சஸ் காணியினைப் பெற்று கையளித்தல்** - நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட **CO/COL/2014/471** ஆம் இலக்கம் மற்றும் 2014.08.06 ஆம் திகதிய பூர்வாங்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 03 ரூட் 7.28 பேர்ச்சஸ் அளவுடைய கொழும்பு ஒல்கட் மாவத்தையில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட சுதேசி அச்சகம் மற்றும் அக் கம்பனி உரிமை கோரிய காணித் துண்டை நகர அபிவிருத்திப் பணிகளுக்காக கையேக்கும் விண்ணப்ப பத்திரம் இந்த அதிகார சபையினால் 2013.11.05 ஆம் திகதி இந்த அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பின்னர் காணி கையேற்கும் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழ் விடயம் தொடர்பான காணியினை அரசாங்கத்திற்கு கையேற்ற தேவையாக உள்ளதென உரிய அறிவித்தல் 2014.06.27 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 1980 ஆண்டின் 2 ஆம் இலக்க நகர அபிவிருத்தி கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மேற்குறித்த காணியினை நகர அபிவிருத்தி கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவை எனக் குறித்த சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை 1853/46 ஆம் இலக்க மற்றும் 2014.03.14 ஆம் திகதிய அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆயினும் குறித்த காணியினை கையேற்றல் தொடர்பில் வரையறுக்கப்பட்ட சுதேசி அச்சகத்தினால் எதிர்ப்பு தெரிவித்தமை மற்றும் அந்த நிறுவனத்தினால் குறித்த காணியில் மேற்கொள்ளப்பட எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டம் ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்டு காணி எடுத்தல் சட்டத்தின் 50 ஆவது பிரிவின் கீழ் அந்த காணியினை கையேற்பதனை விடுவிப்பதற்கு 2016.07.07 ஆம் திகதி கூடிய இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் குறித்த காணியினை கையேற்பதற்கு தேவை என அறிவித்தல் வெளியிடப்பட்ட போதும் அது இந்த அதிகார சபைக்கு கையேடுக்கப்படவில்லை. மேலும் காணியினை கையளிப்பது அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட காணிகள் தொடர்பாக மாத்திரம் என்பதனை அறிவிக்க விரும்புகிறேன்.

(III) காலி தடெல்ல காணி -

காலி தடெல்லையில் அமைந்துள்ள காணி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் திறைசேரியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனிடையே அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை அது ஏற்கனவே அமைந்திருந்த இடத்திலேயே நடாத்திச் செல்வதற்கும் தடெல்ல காணியில் விளையாட்டு கட்டிடத் தொகுதி ஒன்றை அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டதனால் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் கையேற்கும் நோக்கம் சர்வதேச விளையாட்டுத் கட்டடத் தொகுதியினை அமைப்பதாக காணப்பட்ட போதும் விளையாட்டு இபிவிருத்தி திணைக்களத்துக்கு ஒப்படைப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட உரிய காணியில் விளையாட்டுத் தொகுதி அமைக்கபட்டதால் கையேற்கும் நோக்கம் விளையாட்டு தொகுதி அமைத்தல் என திருத்தப்பட வேண்டியதுடன் அதற்காக அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(iv) ராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர வீதியில் அமைந்துள்ள 03 ஏக்கர் 02 ரூட் 03 பர்ச்சேஸ் காணி -

இலெக்ட்ரோ பிளாஸ்டிக் குழுமத்திற்கு சொந்தமான ராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தன மாவத்தையில் வரி இலக்கம் 294 கொண்ட காணி 2013 ஆம் ஆண்டு காணி எடுத்தல் சட்டத்தின் 38(அ) இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் கையேற்கப்பட்ட பின்னர் அதனை அனுபவிக்கும் உரிமை நீதவான் நீதிமன்ற தீர்ப்பு மூலம் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பின்னர் காணி எடுத்தல் செயல்முறையினை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஆரம்ப உரிமையாளர்களினால் அவ்வாறு கையேற்றலுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அக்காலத்திற்குள் சவுதி அரேபியா தூதுவர் அலுவலகத்தை அமைப்பதற்காக சவுதி அரசுக்கு இந்த காணியை வழங்குவதற்கு முடியும் என்பதனால் அதற்காக ஆரம்ப உரிமையாளர்களுக்கு காணியினை வழங்குமாறு கோரி அப்போது நகர அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு ஆரம்ப உரிமையாளர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை கருத்திற் கொள்ளப்பட்டதன் பின்னர் உத்தேச பணிக்காக காணியினை தயாரிக்குமாறு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார.

அதன் பிரகாரம் சவுதி அரசாங்கத்துக்கு குறித்த காணிய விற்பனை செய்வதற்காக ஆரம்ப உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. மேலும் அதற்காக எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைவாக உயர் நீதிமன்ற வழக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த காணி சட்டத்தின் 39(அ) ஆம் பிரிவின் கீழ் 2015 ஆம் ஆண்டு ஆரம்ப உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு இறுதியில் கொழும்பு நகரம் மற்றும் அதனை சூழ அமைந்துள்ள நகரங்களின் அபிவிருத்திக் கருத்து திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அந்த நகரங்களில் அமைந்துள்ள அரச மற்றும் தனியார் துறைக்கு சொந்தமான குறைப் பயன்பாடு உடைய பொருத்தமான காணிகளை கையேப்பதற்கு மற்றும் கையகப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைமப்பு அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றதுடன் ராஜகிரிய நகரத்தில் வெறுமையாக பயன்படுத்தப்படாது காணப்பட்ட இலெக்ட்ரோ பிளாஸ்டிக் குழுமத்துக்கு சொந்தமான 2015 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்ட காணியும் அதற்காக தெரிவு செய்யப்பட்டது. விடேமாக இந்த காணி 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை எந்த ஒரு அபிவிருத்தி பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் கையளக்கப்பட்ட போது நகர

அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைவாக சவுதி தூதுவர் அலுவலகம் அமைப்பதற்கு வழங்கப்படவில்லை.

அதன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் பின்னர் வழங்கப்பட்ட காணி கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக காணி கையளிக்கும் சட்டத்தின் 38(அ) இடைக்கால உத்தரவின் கீழ் மீண்டும் கையேற்பதற்கு 2021 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கை. எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) **அவதானிப்பு**

2019 ஆம் ஆண்டில் அடைந்து கொண்ட செயலாற்றுகை தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) **அவதானிப்பு**

கொழும்பு நகரின் சேரிவாசிகளுக்கு 50,000 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் தற்பொழுது 23,4036 ஹெக்டயார் நிலப் பிரதேசத்தில் 14,607 (நகர மறுவாழ்வு கருத்திட்டத்தின் கீழ் 22 கருத்திட்டங்கள், மெட்ரோ ஹோம்ஸ் மற்றும் லேக்சைட் வீட்டுக் கருத்திட்டங்கள் உள்ளிட்ட 24 வீட்டு கருத்திட்டங்கள உள்ளடங்களாக) வீடுகளை உள்ளடக்கி 24 வீட்டுக் கருத்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் பின்வரும் அட்டவணை பிரகாரம் அவற்றுள் 5577 வீடுகளை நிர்மாணிப்பதற்காக நகர மறுவாழ்வு கருத்திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட காணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகிறது

காணியின் பெயர்	வீட்டுக் கருத்திட்டம் அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள காணியின் அளவு (ஹெக்டயார்)	வீடுகளின் எண்ணிக்கை
மயூரா இடம், வெள்ளவத்தை	0.1973	120
133, 157, 155 தோட்டம், பர்கியுசன் வீதி	1.4168	872
ஆராமய இடம்	1.1213	712
எப்பல்வத்த	0.6538	479
எதிரிசிங்கவத்த	0.7856	546
54 தோட்டம்	0.9368	720
66 தோட்டம்	0.515	432
CGR காணி, மாளிகாவத்தை	1.1627	768
காளிங்க மாவத்தை	0.7923	528
31 தோட்டம்	0.2555	34
581 தோட்டம் மற்றும் உபாலி காணி	0.5504	366
மொத்தம்	8.3875	5577

அதற்கு மேலதிகமாக தற்பொழுது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 7334 வீடுகள் கொழும்பு நகரின் குடிசைவாசிகளுக்கு வழங்குவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 16,607 வீடுகளுள் 2021.12.31 ஆம் திகதி அளவில் 4294 வீடுகள் அரசாங்கத்தின் பல்வேறு கருத்திட்டங்களுக்காக வழங்கியதன் மூலம் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான காணிகளை விடுவிப்பதற்கு நேரடியாக பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தற்போது தொகுதிக்கடன் விநியோகிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதற்கான காரணம், நிறைவேற்ற முடியுமான விலையின் கீழ் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள வீட்டுக்கருத்திட்டங்களுக்காக ஆகும் என்பதுடன் அத் தொகுதிக்கடன் வழங்குதலும் இடம்பெறவில்லை.

(ஈ) **அவதானிப்பு**

பங்கு முதலீட்டாளர்களுக்கான பங்கிலாபம் பிரகடனப்படுத்தல், ஏற்புடைய அக் கம்பனியினால் இலாபம் உழைத்தல் மற்றும் ஏனைய விடயங்களின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படுவதாக அறியத் தர விரும்புகின்றேன். எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டு **1,213,003** ரூபாய் தொகை மற்றும் 2020 ஆம் ஆண்டு **444,075** ரூபாய் தொகை பங்கிலாபமாக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இக் கம்பனி முகாமைத்துவ சபையினை பிரதிநிதித்துவம் செய்யும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் குறித்த கம்பனியின் முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் பலவற்றில் இது தொடர்பான விடயங்கள் பற்றி வினவி உள்ளார்கள். எவ்வாறாயினும் பங்கிலாகம் கிடைக்கப் பெறாத நிறுவனங்கள் தொடர்பில் அதிகார சபையின் முகாமைத்துவத்தினால் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ඵ) **அவதானிப்பு**

இக் கருத்திட்டங்கள் தொடர்பில் ஏற்புடைய அனுமதிகளை பெற்று புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ඒ) **அவதானிப்பு**

நகர அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு நிரல் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சுகித்தபுறம் கருத்திட்டத்துக்காக இந்த அதிகார சபையினால் அக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ஆலோசனைப் பணிகளுக்கான ஆலோசனை கட்டணமாக 6 சதவீத வருமானத்தை இந்த அதிகார சபைக்கு வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றதனால் அப்போது இருந்த பணிப்பாளரினால் அங்கீகாரம் வழங்கியதற்கு அமைய குறித்த கருத்திட்டங்களை மக்கள் உரிமைக்கு வழங்குவதற்காக செய்த செலவுகள் இக் கட்டணங்களை பயன்படுத்தி நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ඔ) **அவதானிப்பு**

மருதானைக் காணி

குறித்த அபிவிருத்திப் பணிகளுக்காக தற்பொழுது குத்தகை ஆதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கருத்திட்டத்தின் மாடிகள் சிலவற்றின் சட்டகம் நிர்மாணித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக நிர்மாணிப்பு துறை செயல்படாத காரணத்தால் கருத்திட்டத்தின் நிர்மாண பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்கால நிர்மாண பணிகளை மேற்கொள்ளும் விதம் மற்றும் நிறைவு செய்யும் விதம் பற்றி திகதி கால நேரங்களுடன் கருத்திட்ட அறிக்கையாக வழங்குமாறு அபிவிருத்தி கம்பனிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

ராஜகிரிய காணி

இலக்கம் 64 புத்கமுவ வீதி ராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ள **Bail Investment (Pvt) Ltd.** இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணியில் அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை சீரான பின்னர் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதாக கம்பனி அறிவித்துள்ளதுடன் குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2027.07.31 ஆம் திகதி வரை அபிவிருத்தி பணிகளுக்காக அவகாசம் காணப்படுகிறது.

(ම) **அவதானிப்பு**

அதிகார சபைக்கான செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்ட பதவி உயர்வு முறைமை உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை தற்போது தயாரிக்கப்பட்டு அதற்கான அதிகார சபையின் முகாமைத்துவ சபை அனுமதியும் நிரல் அமைச்சின் அனுமதியும் பெறப்பட்ட பின்னர் அங்கீகாரத்துக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது

(ඓ) **அவதானிப்பு**

2019.06.25 ஆம் திகதிய அதிகார சபையின் முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் அதிகார சபையின் உபாய வழிமுறை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக

தேவையான சேவை தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக இந்த பணிப்பாளர் பதிவுகளுக்கு 10 உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

(12/2019) முகாமைத்துவ சபை அங்கீகார பத்திர இலக்கம் **: 270/2019)**

(ඛ) **அவதானிப்பு**

இந்த அதிகார சபையில் தற்போது உத்தியோகபூர்வ் வாகனங்கள் வழங்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்வதற்காக அதிகார சபையின் இணையதளம் மற்றும் சிலுமின பத்திரிகையில் அறிவிப்பு வெளியிட்டு விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது. (அந்த விலைமனுக்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது.) பின்னிணைப்பு 30 வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொண்ட பின்னர் இந்த தனியார் வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ග) **அவதானிப்பு**

இந்த இரண்டு உத்தியோகத்தர்களையும் மீண்டும் சேவையில் அமர்த்துமாறு மேன்முறையீடு செய்யப்பட்டதுடன் அந்த ஒழுக்காற்று கட்டளையினை மீள திருத்துவதற்காக சுயாதீன மேன்முறையீட்டு விசாரணைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பின்னர் அதிகார சபையின் ஒழுக்காற்று உத்தியோகத்தராக பொருத்தமான செயற்பாட்டினை மேற்கொள்ளுமாறு கிடைக்கப்பெற்ற நிரல் அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் ஏற்புடைய ஒழுக்காற்று விசாரணை முறையாக நடத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி தெட்டத் தெளிவான முறையில் பரீட்சிப்பதற்கு அந்த விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பகுப்பாய்வுகளை மீண்டும் கருத்திற் கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. குழுவின் பரிந்துரை அதிகார சபையின் முகாமை சபையின் அங்கீகாரத்துக்காக (பதவிநிலைப் பத்திரம் **73/2020, 100/2020**) 2020.04.23 ஆம் திகதி மற்றும் 2020.05.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டவுடன் அதன் பிரகாரம் அக் குற்றச்சாட்டுகளிலிருந்து குறித்த உத்தியோகத்தர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

(ච) **அவதானிப்பு**

அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் அனுமதியின் கீழ் 2019.08.08 ஆம் தேதி அதிகார சபையின் இணையதளத்தில் நகர வடிவமைப்பு கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் வெற்றிடங்களுக்காக அறிவித்தல் பிரசித்து விண்ணப்பங்கள் கோரப்பட்டது. அதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மொரட்டுவை பல்கலைக்கழகம் மூலம் மேற்கொள்ளப்பட்ட எழுத்துப் பரிட்சையில் பங்குபற்றச் செய்ததுடன் 2019.09.09 மற்றும் 2019.09.17 ஆம் தேதிகளில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு அப் பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

(ඡ) **அவதானிப்பு**

தற்போது இந்த அதிகார சபையின் விடுவிக்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களையும் உடனடியாக அழுலுக்கு வரும் வகையில் அதிகார சபையின் சேவைக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ජ) **அவதானிப்பு**

இக் கொடுப்பனவர்களை மீள அறவிடுவதற்கு தேவையான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறியத் தருகின்றேன.

நிமேஸ் ஹேரத்
தவிசாளர்
நகர அபிவிருத்தி அதிகார சபை

நகர அபிவிருத்தி அதிகாரசபை
6,7மற்றும் 9வது மாடி
செத்சிரிபாய கட்டம் 01
பத்தரமுல்லை
இலங்கை.

+94112873637
https://www.uda.gov.lk
info@uda.gov.lk